ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு


| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, | 1--12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, | 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஞு ஐப்பசி-மீ 7-உ (23—10—1932) | மலர் 26.






Dr, R. M. Shastry's

## Ayurvedic Golden Tonic.

"பல டாக்டர்களின் நன்மதிப்புப்பெற்றது."

(Registered by the Government of India)

உத்திரவாதமுள்ளது உடனே பரீட்சித்துப்பாருங்கள்.

இதை ஆண், பெண், பாலர், விருத்தர் முதல் எல்லாவயதோரும் எவ்வித பத்தியமும், அனுபானமுமின்றி கீழ்க்குறிப்பிட்டரோகங்களால் கஷ்டப்படுகிறவர்களும் அல்லது தேகபலத்தையே விரும்புகிறவர்களும் இதை எந்தக்காலத்திலும் உபயோகிக்கலாம்.

இதனுல்—பாண்டு, காமாலை, உடலில்போதிய ரத்தமின்மை, கை கால் எரிதல், வாய்ப்புண், வாய்நாற்றம், குன்மக்கட்டி, குலைநோய், இருதய அதர்ச்சி, கழுத்திழுப்பு, கைகால் வலி, அல்லது சோர்வு உண்டாதல், மாதவிடாய்காலத்தில் உண்டாகும் தலைவலி, தலைபாரம், தலை மயக்கம், தலை சுற்றல், இடுப்புவலி, மார்புநோய், வயிற்றுவலி, மற்றும் கை கால் மூட்டுகளில் உண்டாகும் வீக்கம் முதலிய பல கஷ்டங்களை நிவர்த்திப்பதில் இது ஒப்பற்ற சஞ்சீவிக்கு ஒப்பானது.

மற்றும்—மூத்திரம் கள்ளைப்போலும், மோரைப்போலும், முரிந்தபால் போலும், பலவித நிறங்களாகவும் அடிக்கடிபோதல் மலபந்தம், மலத்தோடு சீழ் அல்லது இரத்தம் போதல், பலவித சிரங்குகள், உன்மத்தம், சோம்பல் முதலியவற்றை நிவர்த்தித்து இரத்த சுத்தியை உண்டாக்கி தேகத்திற்கு நல்ல பலத்தையும், தேக புஷ்டியையும் தருவதில் நிரம்பவும் அனுபவப்பட்டது.

உண்மையில் நடக்க சக்தியற்றவர்களும் பரீட்சைக்காக இதில் ஒரு புட்டியாகிலும் உபயோகித்துப்பார்ப்பார்களானுல் உண்மையில் அவர்களின் ஊன்றுகோலை வீசியெறிந்துவிட்டு தாமகவே நடக்கச்சக்தி பெறுவர் என்று உறுதியோடு இதை சிபார்சு செய்கிறோம்.

12 அவுன்சு புட்டி 1-க்கு விலை ரூ. 1—8—0 போஸ்டு சிலவு கட்டுக்கூலி பிரத்தியேகம்.

விலாசம்:— Dr. R. M. Shastry
Post-Rakah Mines
Singhbum Dist. (N. India.)

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1330ம் ஞு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.
மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

பண்டிதர். உயர் திரு. சாமி சிதம்பரனுர் அவர்களியற்றிய
மாதர் சுதந்திரம் அல்லது
பெண் மக்கள் பெருமை.
என்னும் அரிய நூல் விலை அணு 8. (எட்டு)
கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு.
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.


மதம் மதமென மதிகெட்டலையாதே.

Read the

## "SUPERSTITION OF KHADI"

A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.
Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

*Apply to:—*
Manager "Kudi Arasu" Erode.

## காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வறவேற்புக்கு பதிலளிக்கு முகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோறும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்பகட்டும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0
தபால் சிலவு 0—6—0

கிடைக்குமிடம்:—
மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

## "குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயிண்டாகிக்கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

## "ரிவோல்ட்"

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் நேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்
"குடி அரசு"
ஈரோடு.

உங்கள்
## கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்

### பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

### செவிடு!!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. Calcutta.

## சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம.சிங்காரவேலு பி.ஏ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம், தீண்டாமைஒழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.
கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## குஷ்டம்

வெண்குஷ்டம் பத்து.

சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k)

ஓ! பலங்குன்றியவர்களே! தாதுபுஷ்டியில்லாதவர்களே! கிழத்தன்மையடைந்தவர்களே!

இதோசாப்பிடுங்கள்

## தங்கபஸ்பம்

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகலவியாதியும் நீங்கி அபார தாது புஷ்டியும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுக்கும் மேலானது; பத்தியமில்லை. நாட்பட்ட அல்லது புதிதாயுண்டான எல்லாவியாதிகளையும் நீக்கி ஆண்மைத்தனத்தை உண்டாக்கி தாதுபுஷ்டியைக்கொடுக்கும்.
48 நாள் பஸ்பம் ரூ. 20. 24 நாள் பஸ்பம் ரூ. 10.

### குரு நாக பஸ்பம்-மூலத்திற்கு.

ஆபரேஷன் அவசியமில்லை. முளை தானே கரையும், சீழ்மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும் உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி 1-க்கு ரூ. 4.

### தாளக பஸ்பம் - இருமலுக்கு.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோளை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8 வித காசமும் அவசியம் தீரும் அனுபவத்தில் கைகண்டது. புட்டி 1-க்கு ரூ. 4.

### அப்ரேக் செந்தூரம் - நீரழிவுக்கு

ஜாஸ்திபோகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேக வெளுப்பை மாற்றி ரத்த விர்த்தியையும் தேக புஷ்டியையும் தரும். சகலமேகமும் நீங்கும். தளுக்கற்றது. புட்டி 1-க்கு ரூ. 15. வி. பி. வேறு.

வைத்திய ஆசிரியர் **மலையப்பசாமி,**
வைத்தியசாலை, பழனி, S. I.,

கோவில் என்பது குச்சுக்காரர் விடுதி.

# (Scientific Method and Ignorant Religious Beliefs.)

## மெஞ்ஞான முறையும், மதங்களின் மூட நம்பிக்கையும்.

### கிறிஸ்துமதத்தின் மூட நம்பிக்கைகள்

"கடவுளும், பிரபஞ்சமும்" என்ற வியாசத்தின் மேல் எழும் பிரச்சினை.

[தோழர். ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

(11)

முன் அத்தியாயத்தில், புத்தர்கள் கூறும் நிர்வாண நிலை என்பதும், வேதாந்திகள் கூறும் சீவன் முக்தி நிலை என்பதும், மூடநம்பிக்கைகளென கூறினோம். இவ்விரண்டு நிலைகளும், உயிருடன் இருக்கும் போது அடையக்கூடுமாம். ஆனால் சீவன் என்பதில், ஆன்மா அடையும் நிலை என்பார்கள் வேதாந்திகள். புத்தர்களோவெனில், தங்கள் நிர்வாண நிலையை, அனாத்ம நிலை என்பார்கள். இவ்விரண்டு நிலைகளும், வெறும் வார்த்தை நிலைகளே ஒழிய (Mere words) அனுபவநிலைகள் அல்ல.

சீவன் முக்த நிலையை, மனம், வாக்கு காயத்திற்கு எட்டாத நிலை என்பார்கள். இதன் பொருள் நமக்கு விளங்கவில்லை. அனுபவமென்பது மன வாக்கு காலத்திற்கு உட்பட்டது. இவைகளுக்கு அதீதமான "அனுபவம்" என்பது, வெறுஞ் சொல்லே யொழிய வேறில்லை.

நிர்வாணமென்பதும் விளங்காத சொல்லேயாகும். ராக, துவேஷ, மோகமற்ற மனமே, நிர்வாண நிலை என்றால், சாதுவான பசுக்களும், இந்த நிலையை அடைந்ததாகச் சொல்லலாம். மனச்சாந்தி (Mental Peace) என்பதும், தெரியாமல் சொல்லும் சொற்களே. பேசாத நிலையை மனச்சாந்தி என்று வழங்குவார்கள். இதுவும் தவறு. எப்படியெனில், பேசாத நேரம், செத்துப் போன காலமே யொழிய, விழிப்பு நேரமல்ல. விழித்திருக்கும் போதும் (இதை வேதாந்திகள் சாக்கிரம் என்பார்கள்) உறங்கும் போதும், பேசும் அவையவங்கள், அசைந்துகொண்டே இருக்கின்றன. பேசும் அவயவங்கள், உறத்து அசைவுற்றால், பேச்சுஎன்கின்றோம். பொதுவாக அசைந்தால், எண்ணம் (Thought) என்கிறோம். ஆதலின், "எண்ணம்" அற்ற நேரம், இறந்த நேரந்தான். இதனை சீவன் முக்தி என்பதில் அர்த்தமில்லை. இத்தியாதி பொருள் விளங்கா நிலைகளை மூட நம்பிக்கைகளென்பதில் என்ன தவறு?

உலகில் எங்கும் பரவியுள்ள கிறிஸ்து மதத்தின் மூட கோட்பாடுகளை சிலவற்றை விசாரிப்பாம். கடவுள், ஆன்மா, மோட்சம், நரகம் என்னும் சொற்கள் எல்லா மதங்களுக்கும் பொது. இச்சொற்களின் மேல் அந்தந்த மதஸ்தர்கள் வைத்துள்ள நம்பிக்கைகள், பலவித நாமங்களைக் கொண்டு, மூடநம்பிக்கைகளென சுருங்க உரைத்து வந்தோம். ஆனால், சிற்சில கோட்பாடுகள், அந்தந்த மதஸ்தர்களுக்குரியதாய் இருந்து வருகின்றன. அத்தியாதி கொள்கைகளுக்கு (Beliefs) ஏதாகிலும் ஆதாரமுளதாவென, கிறிஸ்துமத சம்பந்தப்பட்ட வரை, விசாரித்தறிவாம்.

கிறிஸ்துமதத்திற்குறிய கோட்பாடுகளில், முக்கியமானவை, கன்னி கர்ப்பம் தரித்தல் (Virgin Birth) ஒருவன் செய்த பாவத்தை மற்றொருவன் ஏந்திக்கொள்ளல் [Vicarious atonement] உடலும் ரகதமும், ரொட்டியும் சாராயமுமாக மாறுதல் [Transubstantiation] டிரினிடி [Trinity] என்ற பிதா, குமாரன், பரிசுத்த ஆவி மூன்றும் ஒன்றெனக் கருதல், என்ற நம்பிக்கைகள் முக்கியமானவை.

இந்த கிறிஸ்துமத கதைகளின் ஆதாரங்களைக் குறித்துத் தெரிந்து கொள்ள பிரியமுள்ளவர்கள், கிறிஸ்துமதமும்— புராணக்கதைகளும் என்ற (Christianity and Mythology by J. M. Robertson, 1902) நூலை வாசித்தறியலாம். கன்னிகை, பிள்ளையைப்பெறுவது ஒரு புராதனக்கதையாம். கிறிஸ்து (Christ) பிறப்பதற்கு முந்தியே, பலவூர் புராணக் கதைகளில் (Folk Lore) இவ்விதக்கதைகளை படிக்கலாம். கிரிஸ், (Greece) ரோம் (Rome) இந்தியா (India) முதலிய புராதன தேச புராணங்களில், இதைப் போன்ற கதைகளுக்குக்கணக்கில்லை. புருஷனை சேராமல், பிள்ளைகளைப் பெறுதல், பழமையான கதைகளில் ஒன்று பஞ்சபாண்டவாள், இந்திரன், வருணன் முதலிய தேவதைகளில் உண்டானதாக மகாபாரதத்தில் படிக்கின்றோம். புத்தரும், மாயா தேவி வயிற்றில் வெள்ளை யானை வடிவங் கொண்டு, பிறந்ததாகவும் ஓர்கதை உண்டு. இந்தக்கதைகள் யாவும், இயேசு பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே பல தேசங்களில் வழங்கி வந்தன. அதே விதக்கதைகள், இயேசு பிறந்த ஊரிலும், அல்லது அதை அடுத்த ஊர்களிலும், பரவி இருந்ததாகத் தெரிகிறது. கிறிஸ்து மகிமை பரவச் செய்ய அவரைப்பற்றி எழுதினவர்கள் இந்தக்கதையை அவர்மேல் கட்டி விட்டார்கள்.

இந்தக் கதையால் ஒரு விசேடமும் இல்லை. ஆணுடன் சேராமலே சில பூச்சிகள் கர்ப்பம் தரிப்பதுண்டு. அவ்விதபிறப்பை (Parthenogenesis) என்று மெஞ்ஞானத்தில் வழங்குவார்கள். அமெரிக்கா தேசத்து மெஞ்ஞானிகள் (American Scientists) தவளையின் முட்டையை, ஊசியால் குத்தியும், தகப்பனுடைய சேர்க்கையின்றியே, சிறு தவளையாக வளரப் பார்த்திருக்கின்றார்கள். பரிசுத்த ஆவியே (The Holy Ghost) இயேசுவின் தாய் மேரி கர்ப்பம் தரித்தாள் என்று கூறும்கதை, பழமையான கதையேயாகும். அனுமாரும் (Hanuman or Monkey God) காற்றால் பிறந்ததாக இராமாயணக்கதை ஒன்றுண்டு. இந்தக் கதைக்கும், பரிசுத்த ஆவியால் இயேசு பிறந்தார் என்பதற்கும் என்ன வித்தியாசம்? ஆதலின், இயேசு, கன்னிகை வயிற்றில் பரிசுத்த ஆவியால் கர்ப்பம் தரித்து பிறந்தார் என்று நம்புவது மூடநம்பிக்கைகளில் ஒன்றாகும். இந்தக் கதை, மனிதன் கதை கட்டும் மனப்பான்மையால் (Myth Making Tendency) உண்டானது. பஞ்சதந்திரக் கதைகளைப் போன்ற கதைகளை மத கர்த்தாக்களின் மேல் கட்டுவது, இந்த மனப்பான்மையாலென அறிதல் வேண்டும்.

உலக பாவத்தைத் தாங்க இயேசு உற்பத்தியானார் என்பதும், மூடநம்பிக்கையேயாகும். பூமியை, பூமி தேவி தாங்குவதாகக்கதை ஒன்று உண்டு. அதுபோலவே, மனிதர்பாவங்களை இயேசு தாங்கினார் என்ற கதையைக் கட்டிவிட்டார்கள். (World Saviour) உலக ரட்சகர் என்ற நம்பிக்கை, பழமையான நம்பிக்கையாகும். புத்தரும், இயேசு பிறப்பதற்கு 500 வருஷத்திற்கு முந்தியே, உலக ரட்சகராக அவதரித்தாரென்று, கோடான கோடி மக்கள் நம்பிவந்தனர். அதுபோலவே, இயேசுவும் உலகத்தை ரட்சிக்க மனிதகுமாரனாக (Son of Man) அவதரித்தாரென்ற கதை கட்டப்பட்டது. புத்தரும், இயேசுவும் மாத்திரமல்ல, உலக ரட்சகராக அவதரித்தவர்கள். ஜூலியஸ் ஸீஸர் (Julius Ceasar) என்ற ரோமாபுரி தளகர்த்தனும், இன்னும் பல அரசர்களும் உலக ரட்சகர் என்று வழங்கி வந்திருக்கின்றனர். ஒருவனை பெருமை படுத்த "இந்திரன்" "சந்திரன்" என்று சொல்லுவது வழக்கம். இந்த மனப்பான்மையே, இயேசுவையும், புத்தரையும், ஜூலியஸ் ஸீஸரையும் இன்னும் பல மன்னர்களையும், உலக ரட்சகரென்று வழங்குவதற்குக் காட்டுமிராண்டி தேசங்களில் கூட, அவ்வூர் தேவதைகளை, உலக ரட்சகரென்று வழங்கிவந்திருக்கின்றனர். மேக்ஸிகோ (Mexico) தேசத்தில், தெய்வமாகிய குட்ஸல் கோடலே (Quitzelcotle) உலக ரட்சகரென்றே வணங்கிவந்தார்கள். ஆதலின், இயேசுவை உலக ரட்சகரென்று வழங்கி வருவதில், யாதொரு விசேடமில்லை. இவ்வித புகழ்ச்சி, நமது (myth making tendency) கதைகட்டும் மனப்பான்மையால் சிருஷ்டிக்கப்பட்டது.

ஒருவர் பாவத்தை, மற்றொருவர் தங்கிக்கொள்வாரென்பதும் பொய் நம்பிக்கையேயாகும். கோழி, ஆடு, மாடுகளை பலியிடுவதால், ஒருவனுடைய பாவமாவது, அல்லது நோயாவது போகுமா என்று கேட்கின்றோம்? அப்படி போகாவிடில், இயேசுவை சிலுவையில் அறைந்து கொன்றதால், நாம் செய்யும் பாவம் எப்படிப்போகும்? அவனவன் செய்த வினையை அவனவனே தீர்த்துக்கொள்ளவேண்டுமென்ற முதுமொழிக்கு இந்த கிறிஸ்துவ கோட்பாடு முற்றிலும் முரணானதாகும்.

கண்ணப்பர் தனது கண்ணை பிடுங்கிவைத்த கதைபோல் இந்த உலகரட்சகன் கதையும் (World Saviour myth) ஒன்று. கோயில்களில்கண்ணுக்குக்கண்ணும், கைக்குக்கையும், காலுக்குக்காலும், பதுமையாகச்செய்துவைக்கும் மூட நம்பிக்கையைப்போல் உயிருக்கு உயிர்கொடுப்பதும் மூடநம்பிக்கையேயாகும். கணவனுடைய நோய் தீருவதற்கு மனைவி மாங்கல்யபிச்சை எடுக்கும் விரதம் ஒன்று நமது தமிழ் நாட்டில் உண்டு. இது போன்றே ஏசுவை சிலுவையில் அறைபப்பட்டதால் அவரை நம்புவோருடைய பாவம் ஒழியுமென்பதும் மூடநம்பிக்கையேயாகும். 'தாம்தாம் செய்த வினை தாமே அனுபவிப்பார்' என்பதே உண்மை. ஆதலின் மூட நம்பிக்கைகளாகிய பலி, பிரார்த்தனை, உண்ணாவிரதம், உயர்த்

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

# “சமதர்ம முரசு”

## “கடவுள்” எவ்வாறு சிருஷ்டிக்கப்பட்டார்?

### கடவுள், மோக்ஷம், நரகம் என்பவை பயங்காட்டும் “பூச்சாண்டி” வார்த்தைகள்.

(தோழர். A. இரத்தினசபாபதி)

(10)

சுயநலம், பொறாமை, கட்குடி, பொய், களவு, விபசாரம், கொலை, முதலியவைகளும், ஏழை, பணக்காரர்ன், முதலாளி, தொழிலாளி, என்ற எவ்வகைப்பேதங்களும்அற்றபொதுவுடைமைவாழ்வில், கடவுள், மதங்கள், சாதிகள், சாத்திரங்கள், வைதீகம், ஜதீகம், ரிஷீஸ்வரர்கள் வாக்கு, பள்ளியறையில் பார்வதி தேவிக்குபரமசிவன் திருவாய்மலர்ந்தருளியவை, தகப்பனில்லாமல் பிள்ளைபிறந்த பெருமை, (1) மாண்ட மூன்றும்நாள் உயிர்த்தெழுந்த புதுமை, (1) பரமண்டலத்தில் தனித்தீர்வை, பொதுத்தீர்வை,சொர்க்கம், நரகம், ஆண்டவனின் திருவவதாரங்கள், வருணாச்சிரமதர்மங்கள், முதலியவைகளின் நிலைமை என்னவென்பதைச் சிறிது விவரிக்காமல் நமது “சமதர்ம முரசின்” முழக்கத்தை நிறுத்திவிடுவது பொருத்தமாகத் தோன்றவில்லை.

இந்தக்கடவுள்களும், மற்றபுராணாதி இதிகாசங்களும் இன்று எவ்வாறிருக்கின்றன வென்பது பலரும் அறிந்தவிஷயம். “இனிஇவைகள் எப்படி யிருக்கும்” என்பவற்றை விவரிக்குமுன் இவைகள் எவ்வாறு வந்தனஎன்று கூறவேண்டியது அவசியமாகும். நமது “குடி அரசு” வாசகர்களுக்கு இவற்றைப்பற்றி அதிகமாக விவரிக்காமல், சுருக்கிக்கூறுவாம்.

மனிதன் நம்பிக்கைகொண்டிருக்கும் இந்த சாத்திர கோத்திரம், சொர்க்கம், நரகம் என்பவற்றிற்கெல்லாம் மூலகாரணம் கடவுள் என்ற வார்த்தையேயாகும், எனவே இந்த

கடவுள் எவ்வாறு
சிருஷ்டிக்கப் பட்டார்?

என்பதை விளக்குதல் பொருத்தமானதாகும். முதலில் மனிதன் பூமியில் தோன்றியவுடன், ஒரே வெட்டவெளியான ஆகாயத்தையும், பிரமாண்டமான மலைகளையும், சூரிய சந்திரர்களையும், இடிமுழக்கங்களையும், மின்னலையும், மிகப்பெரிய நதிகளையும், சமுத்திரத்தையும் கண்டான். கண்டதும், அவைஎன்னவென்பதைப்பற்றி எண்ணமிட்ட காலத்தில் அவற்றின் உண்மைத் தத்துவங்களை அவன் அறிந்துகொள்ளவில்லை. ஆனாலும் மலைகள் மிகவும் உயரமாய், கம்பீரமான தோற்றத்துடன் காணப்படுவதாலும், சமுத்திரம் மிகுந்த ஆழத்துடன் கண்ணுக்கெட்டியதூரம் வரையில் ஒரே நீர்ப்பரப்பாயிருப்பதோடு, பிரமாண்டமான அலைகளையுடையதாயும், மனிதன் அதில் இறங்கினால் அதன் வேகத்தை நிர்வாகிக்கக்கூடாமலும் இருந்ததைக்கண்டதாலும், அவற்றிடம்பயங்கொத்ண்டான்.

மலைமீதேறி தவறிவிழுந்த ஒருவனது உடல் சின்னா பின்னமாகிச் சிதைந்து விடுவதையும், ஆழமும் வேகமும் உள்ள நதிகளிலோ, சமுத்திரத்திலோ இறங்கி அடித்துக்கொண்டு போகப்பட்ட மனிதன் உயிரிழப்பதையும் கண்டதே அந்தமலையினிடத்தும் மனிதன் பயங்கொண்டதில் ஆச்சரியமின்று.

அஃதே போன்று, இடியும், மின்னலும் மனிதனுக்குப்பயத்தைத் தந்தன. சாதாரணமாக நாகப்பாம்புகடித்தவன் இறந்து விடுகிறான். அதன் விஷத்தை அகற்றுவதற்கான வைத்திய சிகிச்சைகள் இக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அக்காலத்தில் இந்த சிகிச்சைமுறைகள் தெரியாததலின், சிறிய பாம்பு மனிதனைக்கடித்தவுடன் மனிதன் ஒன்றுக்கும் உதவாமல் கீழே விழுந்து விடுகிறான். அவன் சாப்பிடுவதில்லை; மூச்சுவிடுவதில்லை; உடம்பு குளிர்ந்து விட்டது, அதாவது பிணமாய்விட்டான்.

அதைக்கண்டதும், அந்தப்பாம்பு என்னமோ மகாசக்தியுள்ள தென்றும், அது மனிதனைக்கொன்று விட்டதென்றும் பூர்வமனிதர்கள்எண்ணினார்கள். உலகில்பலர் பிறப்பதையும், இறப்பதையும் கண்டும், நன்றாக உண்டு உறங்கி இருந்த மனிதன் இறந்தவுடன் ஒன்றுக்கும் உதவாமல் நாற்றமெடுத்துப் போவதையும் கண்டதும், மனிதனது உடம்புக்குள் உயிர் என்ற ஒன்று இருப்பதாயும் அதுபோனவுடன் மனிதன் பிணமாய்விடுகிறான் என்றும் எண்ணினார்கள். அத்தகைய தங்களுடைய உயிரை ஒருநொடியில் வாங்கிவிடத்தக்கதாக நாகப்பாம்பு இருத்தலின் மனிதர்கள் அப்பாம்பினிடத்துப்பயமும் ஓர்வகையான மதிப்பும் வைத்தார்கள்.

### மறுபிறப்பு

மனிதர்கள் பிறப்பதையும், இறப்பதையும் கண்டவுடன் இறந்தவர்களே மறுபடியும் பிறக்கிறார்களோ என்ற எண்ணம் உண்டாகவே மனிதனின் மறுபிறப்பு அனுமானிக்கப்பட்டது.

### ஆன்மா

பின்னர், மனிதன் இரவில் நித்திரைசெய்கையில் பலவிதக்கனவுகளைக்காண்கிறான் அல்லவா? இதைப் போன்றே பூர்வகாலத்தில் மனிதன் கனவுகள் கண்டான் கண்ணால் காணாதது, காதால் கேட்காதது, ஆன எதுவும் கனவில்வர முடியாதென்பதை இக்கால மனிதன் தெரிந்துகொண்டிருப்பதைப்போல் பூர்வகால மனிதன் தெரிந்து கொண்டிருக்கவில்லை. ஆதலால் கனவு காண்பதைப்பற்றி அவன் மயக்கங்கொண்டிருந்தான். அத்துடன், பகல்காலத்தில், தான் வேலைசெய்த இடத்திற்கு மீண்டும் போவது போலவும், வேலை செய்வது போலவும், வேட்டையாடுவது போலவும் மனிதன் கனவுகண்டதால் தங்கள் உடலுக்குள் இன்னொரு (உயிர்) சக்தியிருப்பதாயும் தாங்கள் நித்திரைசெய்யும்போது அந்த உயிர் அங்கெல்லாம்சுற்றிவிட்டு வந்து மறுபடியும் உடலுக்குள் புகுந்துகொள்வதாயும் மனிதர்கள் எண்ணினார்கள். பின்னர் அவ்வுயிர் ஆன்மா என்ற பெயர் பெறப்பட்டது.

### சிருஷ்டி

பின்னர் மனிதன் மண்பாண்டங்கள்செய்வதையும், குடிசைகள்கட்டுவதையும், அவற்றை அழிப்பதையும் மீண்டும் உண்டாக்குவதையும் கண்டு அவ்வாறே உலகத்தையும் அதிலுள்ளவற்றையும் உண்டாக்குகிற—சிருஷ்டிக்கிற ஏதோஒன்று இருக்கவேண்டுமென மனிதன் எண்ணினான். அவர் கடவுளென்று அவன் அப்போது எண்ணவில்லை. தன் அறிவிற்குப் படாத எதையும் மனிதன் அந்த ஒன்றின் சக்தி பெற்றதுஎவ எண்ணினன்.

அத்துடன், மனிதனுக்கு உண்டாகும் பலவகை நோய்களில் நித்திரையில் நடத்தல் என்பதும் ஓர் வகை வியாதியாகும். அதாவது மனிதன் படுத்து நித்திரை செய்யும்போது தன்னையறியாமல் எழுந்து நடந்து செல்வதாகும்.

இதுமிகவும் கெட்டஓர்விதவியாதியென்பதில் சந்தேகமில்லை. ஆனால், பூர்வகாலத்தில் மனிதன் இத்தகைய “தூக்கத்தில் நடத்தல்” என்ற வியாதிக்குட்பட்டதும், அதன் காரணத்தை அறியாது, அது ஒரு பயங்கரமான சக்தியின் காரணம் என மனிதன் மயங்கினான். சாதாரணமாக மிகவும் பலவீனமான ஹிருதயமுடையவர்களும், மிகவும் கோழைத்தனம் படைத்தவர்களும், அல்லது பயங்கரமான இரகசியங்களில் ஈடுபட்டு மனநிம்மதியற்றிருப்பவர்களுமே சாதாரணமாக இந்த வியாதிக்குள்ளாகிறார்கள்.

பூர்வகாலத்தில் மனிதன் மலைகள், நதிகள், பாம்புகள், சமுத்திரம் பிரமாண்டமான விருட்சங்கள் முதலியவற்றிடம் பயமும், மதிப்பும் வைத்திருந்தானதலின், நித்திரையில் அவற்றின் பயத்தின் வாய்ப்பட்ட மனிதன், இந்த “நித்திரையில் நடத்தல்” என்ற வியாதிக்குட்பட்டு, அந்தமலையடிவாரம், அல்லது நதிக்கரை, பாம்புப்புற்று, சமுத்திரக்கரை முதலிய விடங்களுக்கு நடந்துசென்று விழித்துக்கொண்டவுடன், அவைகளே தங்களை அங்குநடத்திக் கொண்டுவந்து விட்டன வென்றும், தனக்குள்ளிருக்கும் ஆன்மா அதற்கொத்தாசையாக இருந்ததென்றும், அந்தமலை, சமுத்திரம் முதலிய தெய்வங்களுக்கும் தனக்குள்ளிருக்கும் ஆன்மாவிற்கும் ஏதோசம்பந்தமிருக்கிறதென்றும் மனிதன் எண்ணினான். இப்படியே மனிதன் ஆன்மா என்றசொல்லையும், தெய்வத்திற்தும் அதற்தும் சம்பந்தத்தையும் சிருஷ்டித்துங்கொண்டான். இதனால் இயற்கையிலேயே மனிதனிடத்திலிருந்த பயம் அதிகப்பட்டது.—எனவே பாம்பு, மலை, நதி, சமுத்திரம் மரமடர்ந்த இடம் முதலியவற்றை பூர்வ மனிதர்கள் தெய்வமாகப் பாவித்தார்கள்.

### கடவுள்

மற்றும், சற்றுக்காலஞ்சென்ற பின்னர், மனிதர்கள் சற்றுஉணர்ச்சியடையவாரம் பித்தனர். மனிதர்கள் பொய்பேசுவதாலும், களவுசெய்வதாலும், விபசாரம்செய்வதாலும், மதுவருந்துவதாலும், ஏற்படும் இன்னல்களையும் கொலைகளையும் உணர்ந்தார்கள். எனவே இந்த கட்குடி விபசாரம், பொய், கொலை, கொள்ளை முதலிய நடவாதிருத்தலே மனிதர்கள் சுகப்படுவதற்கான வழியென்று கண்டார்கள். அவற்றை மக்களுக்குள் பரப்பினார்கள். இவற்றிற்கு பஞ்சமாபாதகங்கள் (ஐந்து பெரிய பாதகச்செயல்கள்) என்று பெயரிடப்பட்டன. இவற்றைச்செய்தால் கடவுள் தண்டிப்பார் என்று கூறினார்கள். சாதாரணமாக ஏதோ பெரிய ஒன்று உலகத்தைப்படைத்திருப்பதாக எண்ணியிருந்த மக்கள், அதுசரியென்றும், பஞ்சமாபாதகங்களைச்செய்தால் கடவுள், பாம்பு புயல் காற்று, ஆற்றுவெள்ளம், கொள்ளைநோய் முதலியவற்றை அனுப்பி தங்களைத் தண்டிப்பார் என்றும் நம்பினார்கள். அந்தக்காலத்தில் சொர்க்கம் நரகம் முதலியவைகளெல்லாம் மனிதர்களால் சிருஷ்டிக்கப்பட்டுக்கொண்டிருக்கவில்லை. அவை பின்னர் ஆரியர் வருகைக்குப்பின் இந்நாட்டில் அவர்களால் சிருஷ்டிக்கப்பட்டவையாகும்!

(தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க)

# தன்மதிப்பியக்கமும், மதங்களும்.

## தாருல் இஸ்லாத்தின் தவறான எண்ணம்.

[தோழர் அ. இராகவன்]

சென்ற ஆண்டு விருது நகரில் கூடிய நமது மாகாண மூன்றாவது சுயமரியாதை மகாநாட்டிலே "I (a) மனிதத்தன்மையைத் தடைப்படுத்துவதற்கு மதங்களின் பேரால் ஏற்பட்டுள்ள பழக்க வழக்கங்களே காரணமாயிருப்பதால் அப்படிப்பட்ட எல்லா மதங்களும் மறைந்துபோகவேண்டுமென்றும், மதங்கள் ஒழியும்வரை மனிதர்களுக்குள் சகோதரத்துவம் வாராதென்றும் இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

(b) இந்திய தேசத்தில் தோன்றியுள்ள மதவேற்றுமைகளும், பகைகளும் அழியவேண்டுமானால் அறிவுள்ள இந்தியர்கள் முதலில் மத உணர்ச்சியைப் புறக்கணிக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறது.

என்ற தீர்மானம் தோழர் திருச்சி கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல்., அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டதென்பதை நேயர்களறிந்ததே. இந்தத்தீர்மானத்தை ஆழ்ந்து படித்துணர்ந்த எந்த பகுத்தறிவு வாதியும் இதை மறுக்கார் என்பதே எனது முடிவான எண்ணமாகும். ஆனால் "முஸ்லிம் பகுத்தறிவு வெளியீடாகிய தாருல் இஸ்லாத்தில் 'நமது தன்மதிப்பியக்கத் தொண்டர் தோழர் குலாம் அவர்களும் ஏனைய அன்பர் சிலரும் இத்தீர்மானங்கண்டு வெகுண்டெழுந்து சில கட்டுரைகள் எழுதியதை யுன்னும்பொழுது அன்னோர் அவசரபுத்தியால், மதப்பற்றின் மிகுதியால் இரண்டொரு வியாசங்கள் எழுதிவிட்டார்களென்றே எண்ணுகின்றேன். விஷயத்தின் உட்கருத்துணராது பின்னும் சில நண்பர்கள் தன்மதிப்பியக்கந்தீர்மானித்த 'மதக்கண்டனம்' விஷயமாய்த்தத்தம் மனம்போனவாறு எழுதிவருகின்றார்கள். எமது மதிப்பிற்குரிய தாருல் இஸ்லாமும் அதற்கு இடமளித்து வருகிறது. பகுத்தறிவு இயக்கத்தை போற்றும் நம் அருமைத்தாருல் இஸ்லாம் அபிமானிகளும் நமது 'தொண்டர் தோழர் குலாம் அவர்களும் 'மதங்களின் பேரால் பல குருட்டு பழக்க வழக்கங்களும், மூட நம்பிக்கைகளும், கொலையும், களவும், காமமும், சூதும் இன்னோரன்ன பிறதீச்செயல்களும் பெருகி வருவதால், அல்லது பெருக்குவதால் அம்மதங்களை ஒழித்துவிடத்தீர்மானித்த தீர்மானம் தவறு என்பதை இன்னொரு முறை ஆலோசிக்குமாறு வேண்டிக்கொள்கின்றேன். மதம் மக்களுக்காக ஏற்பட்டுள்ளதேயொழிய மதத்திற்காக மக்கள் ஏற்படவில்லை. மக்களுக்காக ஏற்பட்ட மதங்கள் மக்களுலகை பாழ்படுத்தி வேற்றுமையைப்பெருக்கி வேலையில்லாத்திண்டாட்டத்தைப்பரப்பி பணக்காரன்—ஏழை, தொழிலாளி—முதலாளி ஆண்—பெண் முதலிய பேதத்தையும் மூடப்பழக்க வழக்கங்களையும், தரித்திரத்தையும், பெண் அடிமைத்தனத்தையும், நோயையும், மதச்சண்டைகளையும் பெருக்கி இன்று மக்கள் வாழ்வு மிருகவாழ்வினும் நூறு மடங்கு தாழ்வாய்ச்செய்துவிட்டது. செய்துவருகின்றது, இத்தகைய மதம் இந்துமதம் என்றாலும் சரி, இஸ்லாம் மதமென்றாலும், கிறிஸ்துமதமென்றாலும்சரி, பௌத்தமதம் என்றாலும் சரி, அவைகளை ஒழித்து விடுவதும், இவையல்லாது மேற்கூறிய தீமைகளைக்களைந்து நன்மைதரும் மதங்களை வளர்ப்பதிலும் எங்கட்கு ஒருசிறிதும் கருத்து வேற்றுமையில்லை. இதனை விளக்கியே சுயமரியாதை இயக்கப் பெரியார் தோழர் ஈ. வெ. இராமசாமியவர்கள் சென்ற 1931-ம் ஆண்டு ஜூலை மாதம், சாத்தான் குளத்தில் நடந்த மிலாதே ஷரிப் என்னும் முகம்மத் நபியவர்களின் பிறந்த தினவிழாவின்போது 'மதம் என்பது மனிதனின் உலக வாழ்க்கையின் நடப்பிற்கு ஒரு வழிகாட்டியான கொள்கைகளைக்கொண்டது. அது நம்மைப்போன்ற ஒரு மனிதனால் ஏற்படுத்தப்பட்டது. அது, காலதேச வர்த்தமானப்படி மக்கள் சௌகரியத்திற்காக திருத்தியமைக்கக் கூடிய உரிமையுள்ளது. மனிதனுடைய அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் இடம் தரக்கூடியது' என்று சொல்லுகின்ற மதத்தைப்பற்றி நான் எப்போதும் அது கூடவே கூடாது என்று சொன்னதே கிடையாது. இந்தப் பொருளின் மீது இருப்பதாக ஒப்புக்கொள்ளுகின்ற மதங்களிடம் எனக்கு அதிகந்தகராறே கிடையாது.

அப்படிப்பட்ட மதம் என்பது வேண்டியதேதான். அதாவது ஒரு பொதுச்சங்கமோ, ஒரு வாசகசாலையோ, ஒரு வியாபாரச்சங்கமோ, ஒரு வக்கீல் சங்கமோ, ஒரு விளையாட்டு சங்கமோ, ஒரு சீட்டாட்ட சபையோ, என்பதாக ஒரு ஸ்தாபனமிருந்தால் அந்த ஸ்தாபனத்திற்குச் சில விதிகள் இருக்கவேண்டியது அவசியமாகும். இந்த விதி, அந்த ஸ்தாபன மக்கள் நன்மைக்கும் ஸ்தாபனம் சரிவர நடந்தேறுவதற்கும் அனுகூலமானதாகவும், அந்த ஸ்தாபனக்காரர்களால் ஏற்பட்டதாகவும் இருக்கவேண்டும் என்பதுபோலவே, கூடி வாழ நினைக்கும் மனிதனின் உலக வாழ்க்கை நலத்திற்கும் ஏதாவது விதிகள் வேண்டும் என்பதில் குற்றமில்லை. அவ்விதிகளுக்குப்பெயர், கொள்கை என்றாலும் திட்டம் என்றாலும், மதமென்றாலும், மார்க்கமென்றாலும் ஒன்றேதான்.

நமது நாட்டில் பலபாஷைகள் வந்து கலந்து விட்டதால் கொள்கைகளுக்கு மதமென்றும், சமயமென்றும், மார்க்கமென்றும் சொல்லப்படுகின்றது என்பதாகப் பண்டிதர்கள் சொல்லுகின்றார்கள். ஆதலால் அந்த அளவில் நான் எந்த மதத்தினும் தகராறுக்குவரக் கூடியவனல்ல. இதில் ஒன்றும் ஒழிமறைவோ, தத்துவார்த்தமோ இல்லை. வெளிப்படையாகவே சொல்லுகின்றேன்.

என்று கூறியதும், பின்னர் அதே ஆண்டில் நடைபெற்ற ஈரோட்டு மிலாதெஷரிப்விழாவில் 'சகோதரத்தன்மையும், சமத்துவமுமுள்ள கொள்கையை ஏன் எல்லோரும் தழுவக்கூடாது. இதற்குப் பெயர் இந்துமதம் என்பதாயிருந்தாலென்ன? இஸ்லாம் மார்க்கம் என்பதாயிருந்தாலென்ன. வேறு என்னவாயிருந்தாலென்ன சகோதர மார்க்கம் சமத்துவமார்க்கம் என்பதாகவுள்ள எதையும் அறிவுள்ள மனிதன் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்'

என்றும் தெள்ளத்தெளிய விளக்கியிருப்பதை இஸ்லாமியப் பகுத்தறிவு இயக்க அன்பர்களெல்லோரும் ஆராய்ந்து பார்க்கவேண்டும். எந்த மத பக்தனும் தம்மதத்தை தங்கள் பகுத்தறிவு என்னும் உரை கல்லில் உரைத்து அது பத்தரை மாற்றுப்பசும்பொன் என்று கண்டால் அதை ஒப்புக்கொள்ளுங்கள், இன்றேல் குப்பைத்தொட்டியில் எறிந்துவிடுங்கள் என்று கூறும் எந்த மதத்தோடும் மதபக்தனோடும் தன்மதிப்பியக்கத்திற்குப் பகையில்லையென்று கூறும்பொழுது தா. இ. அன்பர்கள் இதை மறுத்துக்கூற ஒருப்படுகின்றார்களா என்று வினவுகின்றேன். இன்றைய உலகில் நடைபெறும் வகுப்புத்துவேஷங்களும், கலகங்களும், கொலைகளும், பெண்ணை மண்ணுய்மதித்து அடக்கியொடுக்கும் அந்தமும், ஈயும், எறும்பும், பன்றியும், நுழையும் கோயிலில் தாழ்த்தப்பட்டார் வரக்கூடாது என்று கூறும் ஜாதித்திமிரும் இந்திய நாட்டிலே ஒரு நேரத்திய உணவும் கிடையாது தவிக்கும்படி ஐந்து கோடி மக்களை பெருக்கிய கர்மமும், தாசிகள், வேசிகள் முதலிய பெண் பேய்களை வளர்க்கும் சாத்திரங்களும், விஞ்ஞான சாத்திரத்திற்கும் பகுத்தறிவிற்கும் மாறான வேதங்களில் நம்பிக்கைக்கொண்டு அவ்வித அறிவியல் சாத்திரங்களின் கொள்கைகளை வெறுத்து மூடநம்பிக்கையில் வாழ்ந்து வருமாறும், மனிதன் பிறந்தது முதலிறக்கும்வரை என்னத்தை புண்போம், என்னத்தைக்குடிப்போம் என்று தவிக்கும்படியும் இன்னும்பல தொல்லைகளையும் விளைவித்துவரும் மதம் நமக்கு எற்றுக்கு? ஒரு மதத்தில் சில நல்ல கொள்கைகள் இருக்கலாம். அதற்காக அம்மதத்தால் விளையும் கணக்கிலடங்காத தீமைகளையெல்லாம் பொறுத்துக்கொண்டிருக்க முடியுமா? எனவே நம் தா. இ. அபிமானிகள் எம்மதம் மனிதனுக்கு வேண்டிய பூரணமான எல்லா நலங்களையும் கொடுக்கிறதோ அம்மதத்தை ஏற்றுக்கொள்வதில் தன்மதிப்பியக்கத்திற்கு எள்ளளவும் ஆக்ஷேபணையில்லை. சில அன்பர் சுயமரியாதை இயக்கம் மதங்களையெல்லாம் அழித்துவிட்டு 'சுயமரியாதை இயக்கம்' என்றொரு மதத்தை வளர்க்கிறது என்று கூறுகின்றார்கள். வாஸ்தவம் 'சுயமரியாதை' என்பது இன்று இயக்கம் என்று கூறப்பட்டாலும் ஒரு நாள் மதம் என்று கூறப்படலாம். ஆனால் எக்கொள்கையும் மதம் என்றோ இயக்கம் என்றோ, சங்கமென்றோ கூறுவதில் யாருக்கும் கவலையில்லை. தோழர் குலாம் கூறுகின்றபடி 'மதம்' 'கடவுள்' என்ற மொழிகளைக்கொண்டு எந்த சுயமரியாதைக்காரனும் பயப்படவோ, சீறவோ, துள்ளிக்குதிக்கவோ, செய்யார்கள். இவ்வெறும் வார்த்தைகளுக்குள்ள மதிப்பு எவ்வளவென்பதையும் அவர்கள் அறிவார்கள். ஆனால் ஒரு மதத்திற்கும் ஒரு இயக்கத்திற்குமுள்ள வித்தியாசமென்னவென்றால், ஒரு மதத்திலுள்ள கொள்கை காலதேச வர்த்தமானங்களுக்குமாறாக இருந்தால் அதை மாற்றி நாட்டிற்கும் காலத்திற்கும் ஏற்றபடி மாற்ற எந்த சங்கராச்சாரிக்கும், போப்புக்கும், மௌல்விக்கும், வேறெந்த மகா சபைக்கும் அதிகாரமில்லை. ஆனால் ஒரு சங்கம் அல்லது இயக்கத்திலுள்ள கொள்கைகளை மதம் என்றாலும் சரியே, சமயம் என்றாலும் சரியே, சட்டம் என்றாலும் சரியே, அவைகளின் கொள்கையைத்தழுவியிருக்கும் மக்கள் தங்கள் நாட்டிற்கோ, சமூகத்திற்கோ, அவை எவ்வாறு மாறுபட்டிருக்குமோ அவ்வளவையோ அன்றி முற்றுகவோ சீர்திருத்தியோ அன்றி முற்றுக அழித்துப்புதிய கொள்கைகளை நிறுவியோ மக்கட்கு நன்மையுண்டாக்கக்கூடும். ஆனால் தற்சமயமிருக்கும் மதக்கொள்கைகளில் ஒன்றையும் மாற்ற முடியாது. ஆனாலும் எல்லா மத வாதிகள் எம்மதமும் எக்காலத்திற்கும் எச்சமயத்திற்கும் ஏற்றது எனவே கூறிவருகின்றார்கள். சில கொள்கைகள் காலத்திற்கும் தேசத்திற்கும் மாறுபட்டிருந்தா

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

# முதுமையைத் தடுத்தல்
### அல்லது
# எப்பொழுதும் வாலிபம்.

(மயிலை. சீனி. வேங்கடசாமி)

நூதனமான சாஸ்திர (Science) ஆராய்ச்சிகள் அறிஞர்களால் நடைபெற்று வருகின்றன. அவ்வாராய்ச்சியின் பயனாய் நூதன விஷயங்கள் கண்டு பிடிக்கப்பட்டு ஜனசமூகத்துக்கு நன்மை விளைவிக்கப்படுகிறது.

இவ்வித சாஸ்திர ஆராய்ச்சிகளில், மனித தேகத்தைப் பற்றிய ஆராய்ச்சி மிகவும் வியப்பைத் தரக்கூடியது. (Professor Voronoff) என்பவர் மனிதனுக்குச் சாக்காடு வரவேண்டிய அவசியமில்லை என்றும், எப்பொழுதும் சாகாமலே உயிர்வாழமுடியும் என்றும் சொல்லுகிறார். அதற்காக அவர் ஆராய்ச்சி செய்தும் வருகிறார்.

அவர் வைத்தியக்காரர் என்றும் சாக்காட்டை ஒருவராலும் தடுக்க முடியாது என்றும் வாசகர்கள் நினைக்கலாம். கிழத்தனத்தை ஒட்டி மறுபடியும் வாலிபத்தை யடையச்செய்கிற அவர், சாக்காட்டைத் தடுக்கக்கூடும் என்று சொன்னால் அதைபயித்தியக்காரத்தனம் என்று சொல்லமுடியாது.

அவர் கிழத்தனத்தை ஓட்டி மறுபடியும் வாலிபத்தை உண்டாக்கிய விஷயம் கவனிக்கத்தக்கது. மிகவும் கிழத்தனம் அடைந்து, தலை குனிந்து நடக்கமுடியாமல் தள்ளாடிய ஒரு கிழ ஆட்டுக்கிடாவைக் கொண்டு வந்து 1918ஆல் ஆப்பரேஷன் செய்தார். அதாவது, மனிதர் மிருகம் முதலிய பிராணிகளின் தேகத்தில் கிளாண்ட்ஸ் (Glands) என்னும் உறுப்புக்கள் இருக்கின்றன. மேற்சொன்ன கிழ ஆட்டுக்கு அவ்வித உறுப்புக்களை ஆப்பரேஷன் செய்து எடுத்துவிட்டு, வாலிப வயதுடைய இன்னொரு ஆட்டின் உறுப்பை (Glands) எடுத்து கிழ ஆட்டுக்கு வைத்தார். பிறகு அந்த கிழ ஆடு யாவரும் அதிசயப்படும்படியாக வாலிபத்தையடைந்துவிட்டது. கிழத்தனம் மேலிட்டு நடக்க முடியாமல் தலைகுனிந்து இன்றைக்கோ நாளைக்கோ என்று சாகக்கிடந்த அந்த ஆடு, தலை நிமிர்ந்து சுறு சுறுப்பாக நடக்கவும் வாலிப ஆட்டைப்போலவும் ஆய்விட்டது. அன்றியும், வாலிப ஆட்டைப்போலவே காம இச்சையும் அதற்கு உண்டாய் விட்டது. சில ஆட்டுக்குட்டிகளுக்குத் தகப்பனாகவும் ஆய்விட்டது.

இந்த ஆராய்ச்சியை செய்கையில் செய்து காட்டி சித்தியடைந்த அப்பெரியார், மனிதன் எப்பொழுதும் இளமையோடு இருக்கமுடியும் என்பதை உலகம் அறியச்செய்ததோடு, மனிதன் என்றும் சாகாமல் இருக்கலாம் என்றும் நம்பிக்கை யுடையவராயுமிருக்கிறார். முதுமையை விலக்கவழி கண்டுபிடித்த இவர் சாக்காட்டை ஒழிக்கவும் ஒரு நூதனவழி கண்டுபிடிக்கவும் கூடும். இவரால் கண்டுபிடிக்க முடியாமற் போனாலும் இன்னொருவராவது கண்டுபிடிக்கக் கூடும்.

ஆமாம்! அது சரிதான், கிழ ஆட்டுக்கு வாலிபத்தனத்தை யுண்டாக்கி சித்திபெற்றது உண்மைதான், கிழ மனிதனை இளங்குமரனாக்கிச் சித்தியடைந்தார்களா?

அதையும் செய்து பார்த்தாய்விட்டது. இளமையை எப்போதும் நிலைத்திருக்கச்செய்யலாம் என்றும் வயோதிகம் வரவொட்டாமல் தடுக்கலாம் என்றும் இனி நிச்சயமாய் நம்பலாம்.

எழுபது வயது சென்ற ஒருமனிதனை, (Gland) சிகிச்சையின் மூலமாய் இளங்குமரனாகச் செய்து சித்தியடைந்துவிட்ட செய்தி மிகுந்த ஆச்சரியமே!

எழுபது வயது சென்ற ஒருமனிதன், கிளாண்ட் சிகிச்சைசெய்து அதன் பலாபலனைத் தெரிந்து கொள்ள முன்வந்தான். இதற்குமுன் மிருகங்களுக்குத்தான் இந்த சிகிச்சை செய்து வெற்றியடைந்தார்கள். ஆனால், இதுவரையில் மனிதருக்கு இச்சிகிச்சை செய்தது கிடையாது. மேற்சொன்ன எழுபது வயதுள்ள கிழவன், துணிவாக முன்வந்து சிகிச்சை செய்து கொள்ள சம்மதித்தான். ஆராய்ச்சியாளர்கள், அதற்குச்சம்மதித்து, அக்கிழவனுடைய உறுப்புகளில் சிலவற்றை ஆப்பரேஷன் செய்து எடுத்துவிட்டு, அதற்குப்பதில் குரங்குகளின் உறுப்புக்களை அவன் உடம்பில் வைத்து விட்டார்கள்.

இந்த ஆப்பரேஷன் முடிந்தபிறகு, என்ன ஆச்சரியம்! அக்கிழவன் குமரனாய்விட்டான். அவன் உடம்பில் கிழத்தனம் காணப்படவில்லை! சுருங்கி வரண்டு போன அவனுடைய தோலும் தசைகளும் வளர்ச்சியடைந்து ஒரு வாலிபனுடைய உடம்பு போல் ஆய்விட்டது. தடிபிடித்துத் தள்ளாடி தலைகுனிந்து தரையைப் பார்த்து நடந்த அக்கிழவன், இந்த ஆப்பரேஷனுக்குப் பிறகு, தலைநிமிர்ந்து சுறுசுறுப்பாக வாலிபனைப் போல் நடக்கத்தொடங்கினான். தெளிவற்ற அவனுடைய கண்கள் பிரகாசமாகத் தெரிந்தன. உடம்பில் புதிதாக மயிர்களும் முளைக்க ஆரம்பித்தன. அம்மட்டுமோ! சிற்றின்பத்தை யனுபவிக்கும் வல்லமையும் அவனுக்கு வந்துவிட்டது! இரண்டாமுறை அவன் முழுவாலிபத்தை யடைந்து விட்டான்.

எழுபது வயதுக்குப்பின் மீண்டும் வாலிபத்தன்மையடைந்த அக்கிழவன் (அவனைக்கிழவன் என்று சொல்வதா, குமரன் என்று சொல்வதா?) சுமார் ஒன்றரை வருஷங்கள் வரையில் சிற்றின்பத்தை அனுபவித்து வரும்நாளில், திடீரென்று ஒருநாள் இறந்துவிட்டான்!

அவன் ஏன் இறந்தான்? நுட்ப புத்தியும் ஆராய்ச்சி மிகுதியும் உடைய அறிவாளிகள் அவன் இறந்த காரணத்தை ஆராய்ந்து இம்முடிவுக்கு வந்தார்கள். அதாவது:—

அக்கிழவனுக்கு, கிழத்தனம் போய் வாலிபம் வந்துவிட்டதன்பயனாய் சிற்றின்பம் துய்க்கும் வல்லமை உண்டாய்விட்டது. அதனால், அவன் பட்டு விதமின்றி பெண்சுகத்திலேயே ஈடுபட்டிருந்தான். ஆப்பரேஷன் மூலமாய் வாலிபத்தை யடைந்த போதிலும், அவனுடைய வயோதிகத்தன்மையினால் அவனுடைய இருதயம் முதலிய உள் உறுப்புகள் சோர்வடைந்திருந்தன. இதை உணராமல் அவன் சிற்றின்பத்தில் அதிகமாக ஈடுபட்டமையால் அவன் இறந்து போனான். அவன் சிற்றின்பத்தில் அதிகமாக பலத்தைப் போக்காமல் ஜாக்கிரதையாக இருந்தால் இன்னும் பல வருஷங்கள் அவன் பிழைத்திருக்க முடியும் என்று அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

பகுத்தறிவின் வல்லமையைப்பாருங்கள்! பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ச்சி செய்ததன் பலனாக "கடவுள் செயல்" என்று நம்பப்படுகிற வயோதிகம் என்னும் கிழத்தனத்தை விலக்கவும், வாலிபத்தை எப்பொழுதும் நிலைத்திருக்கச் செய்யவும் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஆராய்ச்சி நன்றாய் முற்றுப் பெற்றுவிட்டதாகச் சொல்வதற்கில்லை. ஆனால் காலக்கிரமத்தில் முற்றுப் பெற்றுவிடும் என்பது உறுதி. வாலிபத்தை யுண்டாக்கும் வித்தை சில வருஷங்களுக்கு முன்புதான் கண்டு பிடிக்கப்பட்டது. இன்னும் சில ஆண்டுகளுக்குள் இந்த வித்தை முழு வெற்றியடைந்துவிடும். அப்போது ரூபாயைக் கொடுத்து மோட்டார் வண்டி வாங்குவதுபோல, பணமுள்ளவர் பணத்தைக் கொடுத்து இளமையை வாங்கலாம். வாலிபம் ஒரு வியாபாரச்சரக்காக வருங்காலம் தூரத்தில் இல்லை.

எல்லாம் விதி, வினை, கடவுள் செயல் என்று சொல்லிக்கொண்டு சாஸ்திரங்களையும் புராணங்களையும் மந்திரங்களையும் கட்டிக்கொண்டு அழுதுகொண்டிருந்தால் இவ்வித ஆராய்ச்சிகள் வெளிப்பட முடியுமா என்று கேட்கின்றேன். எதையும் பகுத்தறிந்து, ஆராய்ந்தறிந்து உண்மையைக் காண்பதே அறிவினால் அடையக்கூடிய பயன். பெரியோர் வாக்கு, சாஸ்திர சம்மதம், புராணம் சொல்லுகிறது என்று சொல்லிக்கொண்டு, பகுத்தறிவை உபயோகப்படுத்தி உண்மையைக் காணாமல் இருப்பது கேவலம் மிருகத்தனமாகும்.

இந்த இருபதாம் நூற்றாண்டு பலவிதத்திலும் ஆச்சரியப்படத்தக்கது. எத்தனையோ நூதன ஆராய்ச்சிகள் இந்நூற்றாண்டில் வெளிப்பட்டிருக்கின்றன. அவற்றில், கிழத்தனத்தைத் தடுத்து வாலிபத்தை உண்டாக்குவதும் ஒன்று. என்னே மனிதனுடைய பகுத்தறிவின் வல்லமை!

---

## புரோகித மறுப்புச்சங்கம்

---

### மணமகன் தேவை.

---

கம்மாளவகுப்பைச்சேர்ந்த 18-வயதுடைய ஒரு விதவைப்பெண்ணுக்கு மணமகன் தேவை. இப்பெண்ணுக்குத்தமிழும் சிறிது ஆங்கிலமும் கல்வியுண்டு. தாய்தந்தையர்கள் இப்பெண்ணை சீர்திருத்த முறையில் திருமணம் செய்துகொள்ளச் சம்மதிக்கின்றார்கள். இப்பெண்ணுக்கு சீர்திருத்தத்தில் மிக்க ஆர்வமுண்டு.

குறிப்பு:—மணமகனின் அம்சங்கள்.

கல்வியும் தொழிலும் இருக்கவேண்டும். கம்மாளர் வகுப்பினராகவே இருக்கவேண்டும். குடும்பபொறுப் பெற்று நடத்தும் திறமை இருக்கவேண்டும். வயது 25 க்கு உட்பட்டவராக இருத்தல்வேண்டும்.

இத்தியாதி சௌகர்யங்கள் அமைந்தவர்மட்டும் விண்ணப்பித்துக்கொள்ளஉரிமை உண்டு. விண்ணப்பத்தோடு பதிலுக்கு 0—1—3 தபால் தலைகள் அனுப்பப்படவேண்டும். கடிதங்கள் இரகசியமாகவைக்கப்பெற்று வேண்டுவன செய்யப்படும்.

ச. ம. சி. பரமசிவம்
காரியதரிசி.
தமிழ்நாட்டுப்புரோகித மறுப்புச் சங்கம். 22, பாளையம் பஜார்.
உறையூர் P O. திருச்சி.

---

### திருச்சி தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்கள் பொதுக்கூட்டம்.:—

---

16-10-32 ஞாயிறு மாலை 5-மணிக்கு திருச்சி வரகனேரி, பாடிசன்ஸ்கூலில் திரு ஏ. சாமுவேல் அவர்களின் தலைமையின் கீழ்ஒருபொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் பலபிரமுகர்கள் சொற்பொழிவாற்றினார்கள். பலமுக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றியபின் கூட்டம் கலைந்தது.

(ஒரு நிருபர்)

# "மரண பயம்"

## டாக்டர் பராஞ்சிபை அவர்கள் எழுதியதின் மொழிபெயர்ப்பு.

பூவுலகவாழ்க்கைக்கும் விண்ணுலக வாழ்க்கைக்கும் மத்தியில் ஏற்படும் மரணம் எனும் ஏதோ ஓர்வித நிகழ்ச்சியைப்பற்றிய கொள்கைதான் மதத்தைப் பிரபலமாகப் போற்றும். மதவாதிகளின் மூலபலம் என்று கூறலாம்.

சாதாரண மக்கள் மரணம் என்பதைத் திரிகரணங்களுக்கு மெட்டாத ஏதோ ஓர்வகை பயங்கரமான அகோர சம்பவமாகவே கருதுகின்றனர். அதிபலிசாலிகளும் மரணம் என்றால் பீதிகொண்டு அதனின்றும் மீள்வதற்கான எத்தகைய செயல்களையும் அப்பொழுதே செய்ய முற்படுகின்றனர். உண்மையில் மரணத்தைப்பற்றிய பயமானது ஜனசமூகத்திற்கு ஒரு விதத்தில் நன்மையையே உண்டாக்குகின்றது என்று சொல்லலாம். எனெனில் வாழ்நாளில் ஏற்படும் பல்வேறு சம்பவங்களில் மரணத்தையும் ஒன்றாகக்கருதும் எந்த சமூகவாழ்வும் மன அமைதியோடிருத்தல் அரிது. மனிதர்க்கு ஆயுட்காலம் மிகவும் முக்கியமாதலின் ஒவ்வொருவரும் அதனை இயன்ற அளவு காப்பாற்றல் அத்தியாவசியமேயாம். ஏன் இவ்வுலகில் தோன்றும் பல்வேறு தோற்றங்களின் போக்கானது தத்தம் வாழ்வின் வளர்ச்சிக்குப் போராடுவதிலேயே இருக்கின்றதெனக் கூறலாம். இவ்விதமான தீவிர உணர்ச்சி உயிர்வாழ் பிராணிகளிடம் இல்லாதிருப்பின் அவைகள் வெகுகாலத்திற்கு முன்னரே இவ்வுலகத்திலிருந்து மறைந்துபோயிருக்கவேண்டும்.

உயிரின் ஆதியையும், அந்தத்தையும் அறியவேண்டுமென்ற அவாவானது எக்காலத்தும் ஒரே தன்மையில் இருத்தல்கவனித்தற்பாலது. விஞ்ஞான விற்பன்னர், ஏதோ ஒரு காலத்திலாவது ஒரு பரம அணுவை (Protoplasm) த்தாங்களாகவே சிருஷ்டித்தல் கூடும்; ஆனால் அதற்கு அறிவைப்புகட்டி பலவித மேலறிவு பிராணிகளாகத் தோற்றுவிக்க அவர்களால் முடியவும் முடியாது; முடியப்போவதும் இல்லை! 'ஜடம்' என்ற அசேதனப் பொருளிலே 'ஆத்மா' வெனும் சத்பொருள் ஒன்று அதற்கு அன்னியமாக இருக்கின்றதா இல்லையா என்பதைப்பற்றி நாம் இங்கு ஆராயப்புகவில்லை, எனினும் ஜடப்பொருள் இன்றேல் உயிரின் பலவிதப் பரிணமிப்பை எவ்விதத்திலும் அறிந்து கொள்ள முடியாது என்பது மாத்திரம் உண்மை. சரீர சாஸ்த்திர விற்பன்னர்களும் (Physiologists) அறிவின் பலவித ஆற்றல்கள் மூளையிலிருக்கும் பல அணுக்களின் வெவ்வேறுவகையான சேர்க்கையினாலேதான் ஏற்படுகின்றதெனக் கூறுகின்றனர். இதனால் ஜடபதார்த்தங்களின் (Matter) மூலமாகத்தான் அறிவின் தன்மையை உணரவேண்டுமென்று தெரிகின்றது. எனவே சாதாரணமாக மனிதன் தனது வாணாளில் உயிர் அல்லது ஆத்மாவைப்பற்றிப் பிரமாதமாக எண்ணாமல் அது தனது புத்திக்கு எப்படி உணரப்படுகின்றதோ அவ்விதமே எங்குமுள்ளதாக நினைக்கவேண்டியதோடு தன் அறிவு அவ்வப்போது எதைத் உணர்த்துகின்றதோ அதை அனுசரித்து வாழ்க்கையையும் நடத்துதல் வேண்டும். மரணத்திற்குப்பின் ஜீவன் எத்தோற்றத்தோடு இருக்கின்றதென்பது விஞ்ஞான விற்பன்னராலேயே ஆராயத்தக்க விஷயமாகும். தற்சமயம் அவ்விஷயத்தைப்பற்றிய அத்தாக்ஷிகளை ஆத்மவாதிகள் (Spritualists) எத்தனையோ சோதனைகளால் விளக்க முற்பட்டும் அவற்றை அறிஞர் ஏற்றுக்கொள்ளத்தக்க நிலைமைக்கு வரவில்லை. எது எவ்வாறிருந்த போதிலும் நிருமாணித்துக்காட்ட முடியாத விஞ்ஞான ஆராய்ச்சி முறையில் சோதித்துத்தெளியப்படாத ஏதோ ஓர் யுகத்தில், எவராலோ அவரவர்களுடைய உத்தேசத்திற்கும் மனப்பான்மைக்கும் பயத்திற்கும் தக்கபடியாக சொல்லப்பட்ட மேற்குறித்த மரண சம்பந்தமான கூற்றுக்களால் இந்த ஆத்மாவைப்பற்றிய விஷயத்தை முடிவுகட்டுதல் அறிவுடைமைக்கு அழகல்ல.

ஏற்கனவேயுள்ள மரணத்தைப் பற்றிய பீதியைப்பலவித மதங்கள், அவ்வவற்றின் பலவகையான மௌடீக சாஸ்திர சித்தாந்தங்களாலும், மூடத்தனமான எத்தனையோ வகையான சடங்குகளாலும் எவ்வளவோ மடங்கு அதிகமாக்கி வருகின்றன. நரகலோகங்களென்ன? ஆங்காங்கு நேரும் சித்திரவதைகளென்ன? இறந்த பின்னும் இவ்வுலகில் உள்ள ஆசாபாசங்களால் அவனது ஆத்மா துன்பமடைதலென்ன? இறந்து பிறத்தல், பிறந்து இறத்தல்களென்ன? சித்ரகுப்த எமதூத வேதனைகளென்ன? இன்னும் இவை போன்ற எண்ணற்ற ஆபாச சித்தாந்தங்களே இப்பொழுது மனித சமூகத்தைக் கணக்கற்ற கஷ்டங்களால் நெக்குவிட்டு நைந்துருகும் படியான பழக்க வழக்கங்களில் ஈடுபடுத்திப் பரிதவிக்கச் செய்து வருகின்றன.

உயிரிழந்த சரீரத்தைப்பல மதத்தினர் பற்பல விதங்களில் தகனம் செய்துவந்தபோதிலும், எல்லா மதத்தினரும் மாண்டோருக்குரிய ஈமக்கிரியைகளைச் சரிவரச் செய்தாலொழிய அவர்களது ஆத்மா சாந்தமடையாதென்பதை ஒருங்கே ஒத்துக்கொண்டு அவ்வாறே நடந்து வருகின்றனர். மனிதன் இறந்தபின் அவனது ஆத்மா பிரிந்து மேலுலகம் செல்கின்றது. (Resurrection) என்ற கொள்கையினாலே தான் சரீரத்தை அடக்கம் செய்யும் விதங்களில் பலவித விவகாரங்கள் கிறிஸ்துவ நாடுகளில் கிளம்பியிருக்கின்றன. உயிரோடிருக்கும் மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்க, எத்தனையோ கோடி பொன் சமாதிகளிலும், இறந்தவர்களின் ஞாபகார்த்தமாகக்கட்டும் கோபுரங்களிலும் வீணாகச் செலவிடப்பட்டு வருகின்றது. ஜனங்கள் குடியிருக்கவே இடம் கிடைக்காத ஊர்களிலும் சமாதிகளுக்காக எவ்வளவோ விஸ்தீரணமான இடங்கள் விடப்பட்டு வீணே கிடக்கின்றன. அவற்றைப்பாதுகாக்க ஏராளமான பணவிரயம் ஆவதோடு அவ்வித மயானங்களால் மக்களின் ஆரோக்கியத்திற்கே கெடுதலும் ஏற்படுகின்றது. மகமதிய நாடுகளில் பிணங்களின் மேல் எத்தனையோ பெரிய சிங்காரமான கோரிகள் எழுப்பப்பட்டிருக்கின்றன; அவைகள் மிகத்தேர்ந்த சிற்பவேலைத் திறனைக்காண்பிப்பதாயினும் எத்தனை கோடி மக்களின் இரத்தத்தின் சத்தை வீணாக்கியிருக்கின்றனவென்பது கவனிக்கத்தக்கதாகும். ஈஜிப்ட் தேசத்திலுள்ள சமாதிகள், கோபுரங்கள், முதலியவற்றை அமைக்க எத்தனை அடிமை[Slaves] களின் நெற்றிக்கண்ணீர் நிலத்தில் பாய்ந்திருக்க வேண்டும்! ஈமச்சடங்குகள் செய்வதாலும், கருமாதி சமாராதனைக்கிரியாதிகள் நடத்துவதாலும், எத்தனை இந்திய குடும்பங்கள் குடிக்கக் கஞ்சி யில்லாமல் அலைகின்றன? செத்தவர்களால் ஏற்படும் சகியாத்துயரத்தைவிட, அவர்களின் கருமாதிகளுக்காகக் கடன்பட்டுப்பின் உயிருள்ள அளவும் மீளாத்துன்பத்திலழுந்தும் துயரம்பெரிதாகத்தோன்றுகின்றது. ஹிந்துக்கள் செய்யும்கருமாதிச் சடங்குகளை நேரில் காணாதவர்களுக்கு அவைகளைப்பற்றி விரித்துக் கூறின் அது சிறிதும் நம்பத்தகாத ஆபாசமாகவே தோன்றும். பிணத்திற்குத் தீமூட்டுவதற்குமுன், அதன் ஆத்மா கஷ்டமின்றிப்பிரிந்து போக வேண்டிய வசதிகள் முதலில் செய்யப்படுகின்றன. ஆத்மசாந்திக்காக வாய்க்கரிசி சமைத்துப்படைக்கப்படுகின்றது. தவிர "கோடிவஸ்திரம்" என்பதாக நல்லவஸ்திரமாவது இல்லாவிடின் ஏதோ ஒரு புதிய மஞ்சள் துணியாவது அப்பிணத்திற்குக்கட்டப்படுகின்றது. மீண்ட ஆத்மாவிற்குப்பாலமுதளிக்கப் பசுக்களைக் கோதானமாகக் கொடுக்கப் படுகின்றது. ஆதியில் "சககமனம்" என்றபெயரால் இறந்த கணவனோடு அவனது உயிருள்ள மனைவியையும், அவன் தனிமையைத் தீர்த்து அவனுக்கு எங்கும் சுகமளிக்குமாறு ஒருங்கே வைத்துக் கொழுத்தப்பட்டுச் சித்ரவதையும் செய்யப்பட்டது! தற்காலத்தில் ஆண்மக்களனைவரும் மீசையை எடுத்துவிடவேண்டும்; மனைவியர்தலையை முழுதும் மொட்டையடித்துவிடவேண்டும்! அவ்வாறு செய்வதற்குக் காரணம் அவனது மனைவிமாரின் அழகைக்குறைத்துக் கற்புக்குப் பங்கம் வராமற் காப்பதொன்று, இரண்டாவதாக அவனது ஆத்மா சிரமமன்னியில் சுவர்க்கலோகம் சேர்வதற்கு ஒரு மயிர்ஏணி ஏற்படுத்துவதற்கும் ஆம்!

அந்த ஜீவாத்மா சில நாட்கள்வரையிலும் பூமியில் தான் சஞ்சரித்தமுக்கியமான இடங்களுக்கு வந்து செல்லுகிறதாம்; அதன் நிமித்தம் பலவித படைப்புகள் போட்டு அதன் சாந்திக்காக பூஜை செய்யவேண்டுமாம்! கருமாதி வருஷாந்திர பூஜாகாலங்களில் படைக்கப்படும் போஜனத்தின் ஒரு கைப்பிடிச்சாதத்தை காகம் சாப்பிடவேண்டியது அத்தியாவசியம். அவ்வாறு அந்நாளில் காகம் சாதம் எடுக்கத்தவறினால் அந்த ஜீவன் தன்னால் அனுபவிக்கக்கொடுத்து வைக்காத ஏதோ ஒன்றை நினைத்துத்துக்கசாகரத்தில் ஆழ்ந்து கிடப்பதாகவும் கருதப்படுகின்றது. உடனே அவனது சுற்றத்தினர் அவ்வித அபேக்ஷை என்ன வென உத்தேசித்து அதனை நிறைவேற்றுவதாக நிருமாணித்தபடி அநேகமணிநேரம் காத்துச்சலிப்பார்கள். அப்பொழுதும் வராதிருப்பின் தர்ப்பைப்புல்லைமுடிச்சுப்போட்டுக் காகமாகப் பாவனை செய்து அந்தச்சாதத்தைத் தொட்டாகிலும் தங்கள் மூடமனத்தைத் தேற்றுவார்கள்! அவ்வித சாஸ்திரப் பிராயச்சித்தம் செய்தபோதிலும் அவர்களது கோழைமனம் மாண்டவரின் ஜீவன் சாந்தமடையாததால் தங்களுக்கு என்னென்ன துன்பம் எப்படியெப்படி வருமோவென அந்தோ! ஏங்கிப்பரிதவிக்கும்.

கருமாதி கைங்கரியங்கள், உயிரிழந்த நாள் முதல் பன்னிரண்டு நாட்கள் வரை ஒவ்வொன்றாக நடைபெறும். முதல் வருஷாந்திர நாளானது மிக்க சிறப்பாகக் கொண்டாடப்படும்; அன்றையதினம் சுற்றத்தாரனைவருக்கும், ஏராளமான பிராமணர்களுக்கும் போஜனம் அளிக்கப்படும். மகனானவன் இவ்வித வருஷாந்தர சிரார்த்தத்தை ஒவ்வோராண்டும் தவறாது நடத்தவேண்டும். அந்தக்குடும்பத்தினர் விவசாயிகளாக இருப்பின் இவ்விததிதிநாட்களில் அவர்களது கால்நடைகள் ஒன்றாகிலும் வேலைசெய்யக்

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

# "தொழிலாளர்களே தூங்காதீர்கள்"

(தோழர் சி. இலக்குவன்)

தொழிலின்றி இவ்வுலகம் நடைபெறாது. உலகமே தொழில்மயமாய் இருக்கிறது. உலகிலுள்ள ஒவ்வொருவுயிரும் தொழில் புரியவே வேண்டியிருக்கிறது. இவ்விதம் ஒவ்வொரும் தொழிலில் ஈடுபடச்செய்வதெது? அதுதான் பசி. பசியினாலேயே ஒவ்வொருவுயிரும் இயக்கப்படுகிறது. விலங்குகளையும் பறவைகளையும் நோக்குங்கள். பசியைத்தணிப்பதற்காகவேஅங்கு மிங்கு மலைந்து இரையைத்தேடுகின்றன. தேடி வயிறாரவுண்டவுடன் அமர்ந்து விடுகின்றன. அவைகள் தங்களுக்குப்போதுமான ஆகாரத்தை வுண்டவுடன் அதிகமாகச்சேகரித்து வைப்பதற்கு முயற்சிசெய்யாததனால் ஒவ்வொன்றும் போதிய அகாரத்தைப்பெறுகின்றன. பசித்திருக்கும் பிராணியையும் காணமுடியாது.

ஆனல். மனிதன் அவ்விதமன்று. தன்னுடைய பசிப்பிணியைத்தீர்த்த பிறகும், அதிக ஆசைகொண்டு தன்னுடைய பலத்தினாலும் புத்திகூர்மையாலும் மேலும் மேலும் சேகரித்து வைக்கிறான். அவ்விதம்சேகரித்துவைப்பது யாருடையவுணவு. பட்டினியாய்க்கிடந்துழலும் அவனுடைய சகோதரர்களுடையதே. அவ்விதம் அவன்சேகரித்து வையாமலிருப்பானேயானால் மனிதர்களுக்குள்ளும் பசிப்பிணியைக்காண முடியாது அப்படியானல், வியாதியுற்றபோதும் உடல் தளர்ந்து கிழத்தன்மையடைந்தபோதும் நம்மைக்காப்பவர் யார் என்று வினவலாம். உங்களுடைய வினவுக்கு விடையில்லாமலுமில்லை. பொருள்தேடும்காலத்தில் போதுமானவற்றை எடுத்துக்கொண்டு எஞ்சியவற்றை, ஒரு பொது இடத்தில்வைத்துக்கொண்டு வந்தால் நம்மாலியலாதபோது அது நமக்கும் உதவும், பிறர்க்கும் பயன்படும். ஆகையால் ஒவ்வொருவரும் உழைக்க வேண்டியதாகும். அப்போது வேலை செய்யும் நேரமும் மிகக்குறைவாக இருக்கும். அமைதி நிலவும், ஆனந்தம் ததும்பும்.

நிற்க, ஆதியில் ஒவ்வொருவருமே ஒவ்வொரு தொழிலாளியாயிருந்தனர். தொழில் செய்யாதவர் இல்லை அப்படியிருக்க இப்பொழுதிருக்கும் பணக்காரர்கள் எவ்விதம் உண்டானார்கள் என்றுவினவலாம். கூர்ந்து யோசிப்பின் வினவுக்கு விடையும் கிடைத்துவிடும். ஆதியில் பணக்காரனெவனுமில்லை. ஆனல் எல்லோரும் ஏழையாயிருந்தார்களென்று எண்ணுகின்றீரோ? அவ்விதம் எண்ணவேண்டாம். ஏழைகளுங்கிடையாது. பிறகு எவ்விதம் ஏழைகளென்றும் பிரபுக்களென்றும் பிரித்தார்கள்.

மக்களெல்லோரும் ஒரு விதமான தேகவலிமையையும்புத்திநுட்பத்தையும் பெற்றவர்களல்லர். சிலர் உடல்வலியினிருக்கின்றனர். சிலர்புத்திநுட்பமுள்ளவர்களாயிருக்கின்றனர். சிலர். மிகவும் முட்டாளாய் இருக்கின்றனர். ஆகையால், உடலுரமுள்ளோன், இல்லாதானையும், புத்திநுட்பமுடையயோன் முட்டாளையும், அடக்கியாண்டு, அவர்களிடத்திலுள்ள பொருள்களையும் பெற்றுக்கொண்டு, பிறகு அவர்களைத்தங்களுக்குக்குற்றேவல் செய்யுமாறு துன்புறுத்தியும் அவர்களாலானபயனையெல்லாம் அனுபவித்து வரலாயினர். அவ்விதம் வரவே நாளடைவில், பணக்காரர்களென்றும், ஏழைகளென்றும் மாறிவிட்டார்கள். பிறகு, வேலைசெய்வோர் தொழிலாளிகளென்றும், செய்யாமலிருந்து அவர்கள் பயனையனுபவிப்போர் முதலாளிகளென்றும், கூப்பிடப்படுகிறார்கள். முதலாளிகளைச் சரியாக அழைத்தால் சோம்பேறிகள் என்றே யழைக்கவேண்டும். இப்பொழுது நீங்கள் அச்சோம்பேறிகளின் கையில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறீர்கள். ஏன், உங்களுடைய சொத்தையும் பொருளையும் நீங்கள் தூங்கியிருந்த சமயம்பார்த்து உங்களிடத்திலிருந்து அபகரித்துவிட்டார்கள். உங்களுடைய சொத்துக்களையிழந்ததல்லாமல் உங்களுடைய சுதந்திரத்தையும் பிடுங்கி விட்டனர்.

இப்பொழுது நீங்கள் வெயிலில் காய்ந்தும், மழையில் நனைந்தும் விதைக்கின்றீர்கள். களையெடுத்துப் பயிரை வளர்த்துவருகிறீர்கள். கதிர் முற்றி தலைசாய்ந்ததும் அறுத்துநெற்களையும் குவித்து விடுகிறீர்கள். ஆனல் சேர்த்துவைத்து அதன் பலனை அனுபவிப்பது அவர்கள். நீங்கள் அரைவயிற்றுக்கஞ்சியுமின்றிப் பிள்ளைகுட்டிகள் அழவும் மனைவி பரிதவிக்கவும், அவர்கள் விலாப்புடைக்கவுண்டு எஞ்சியவற்றை நாய்க்கும் பூனைக்கும் காக்கைக்கும் மண்ணுக்கும் தண்ணீர்க்கும் இரையாக்குகின்றார்கள். அவ்விதம் வீணாவது யாருடையஉணவு. அது உங்களுடையதன்றோ?

பூமியின் வெகுதூரத்திலுள்ள ஆழமானசுரங்கங்களில்வேலைசெய்கின்றீர்கள். தங்கம், வெள்ளி, பொன்,செம்பு முதலிய உலோகங்களை வெட்டியெடுக்கின்றீர்கள். அவ்விதம் எடுக்கும் போது அநேகர் உயிரையும் இழக்கின்றனர். உயிரையும் துணித்து நீங்கள் சேர்க்கிற பொன்னையும் வெள்ளியையும் நீங்கள் அனுபவிக்கிறீர்களா? நகையாகச்செய்கின்றனர். அவைகளைத்தங்களுடைய அறிவில்லா, இரக்கமில்லா, கல்வியில்லா, பெண்களென்று சொல்லப்படுகின்ற பொம்மைகள் மீதுபோட்டு அழகு பார்க்கின்றனர். அழகே! அழகே. அநாகரீகமாகப் பரிகசிக்கத்தக்க அழகே, என்று உன்னை நீக்குவாரோ.

பருத்தி விதைத்து நூலாகிவேஷ்டியாகிறவரையில் உழைப்பவர்கள் நீங்கள். ஆனல் நீங்கள் இடையார உடுத்துகின்றீரோ? உங்கள் பிள்ளைகளைக் குளிரினின்றும் வெயிலினின்றும் காப்பதற்கும் போதிய ஆடைகளைப் பெறுகின்றீர்களோ? இல்லையே. நீங்களும் உங்களுடைய குழந்தைகளும் மண்டை வெடிக்க வெயிலில் திரிகின்றீர்கள் குளிரில் கட்டைபோல் விறைத்துக்காலைக் கட்டி உட்கார்ந்து கொண்டு நடுங்குகிறீர்கள், அந்தோ பரிதாபம். ஆனல் அவர்கள் தாங்கள் சுமக்கமுடியாமல் அணிந்து கொள்ளுகின்றனர். அம்மட்டுமோ! நாய்க்கு உடுத்துகின்றனர், குரங்குக்குச் சூட்டுகின்றனர், பூனைக்கு மெத்தையாகப் போடுகின்றனர், அம்மட்டுமா? கடவுளென்று சொல்லிக்கொண்டு நகைகளைப் பூட்டுவதோடுகூட ஆடைகளையும் கருங்கல்லின்மேல் போட்டு அதன் மேலுள்ள எண்ணெயிற்பட்டுக்கெட்டு அழியவும் செய்கின்றனர். அம்மட்டுமோ, மின்சாரவிளக்குகளும், கியாஸ்லைட்டுகளும், பவர்லைட், பெட்ரோமெக்ஸ் முதலியவிளக்குகள் பக்கத்திலே எரியவும், அவ்வெளிச்சம் போதாதென்று, பந்தம் பிடிக்கின்றனர்.

பந்தம் எதைக்கொண்டு எரிகின்றது. புதுபுது வேட்டிகளைக்கிழித்து எண்ணெயில் நனைத்து எரியவிடுகின்றனர். ஐயோபரிதாபம், உங்களுடைய பிள்ளைகளில் எண்ணெயையறியாதவர் எவ்வளவுபேர் இருப்பர். அவ்விதமிருக்க உங்கள் உழைப்பின் பயனைப் [illegible] எண்ணெயை அக்கினிக்கு இரையாக்குகின்றனர்.

பற்பல கத்திகளையும் துப்பாக்கிகளையும் அரிவாள்களையும் செய்கின்றீர்கள். ஆனல் அவர்கள் அவற்றைக் கொண்டே உங்களை விரட்டுகின்றனர்.

நீங்கள் மாட மாளிகைகளையும் கூடகோபுரங்களையும் கட்டுகின்றீர்கள். ஆனல் அக்கட்டிடங்கள் பாம்பும் பூனையும் பல்லியும் வௌவாலும் வசிக்கும்படி விட்டு விட்டுக்குடிசைக்குள் சென்று பன்றியுடனும் நாயுடனும் கிடந்து உழலுகின்றீர்கள். ஆகையால் தொழிலாளர்களே, பாடுபட்டுழைப்பது நீங்கள் பயனையனுபவிப்பது அவர்களென அறிகிறீர்களல்லவா?

நெடுநாள் தூக்கத்தினின்று எழுங்கள். விதையுங்கள்; அறுங்கள்; துய்த்து எஞ்சியவற்றை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுங்கள். பொன் வெள்ளி முதலிய உலோகங்களைச் சேருங்கள், சோம்பேறிகளிடத்தில் ஒப்புவிக்காதீர்கள். ஆடைகள் நெய்யுங்கள், அணியுங்கள், எஞ்சியவற்றைப் பிறருக்கு உதவுங்கள், ஆயுதங்களைச்செய்யுங்கள், உங்களுடைய சுதந்திரத்திற்காகவும் நாட்டுக்காகவும் உபயோகப்படுத்துங்கள்.

"Sow seed,-but let not tyrant reap; Find wealth,-let no imposter heap; Weave robes,-but let not the the idle wear; Forge arms,-in your defence to bear;"—*Shelly*.

உறங்கன்மின்! செல்வம் திரண்டுள்ள இடங்களுக்குச் செல்லுங்கள் அவைகளைப் பலருக்கும் பங்கிட்டுக் கொடுங்கள். சோம்பேறிகளை வேலை செய்யும்படி செய்யுங்கள். இயலாதவர்களுக்கு உதவுங்கள். மழையில் நனையாதீர்கள்.மாடமாளிகைகளுக்குச் சென்று மனிதரில்லாத இடங்களில் உறையுங்கள். பாம்பு பல்லி வசிப்பதைவிட நீங்கள் வசிப்பது அவ்வீட்டுக்கு எவ்வளவோ அழகாக இருக்கும். நாட்டிலுள்ள பொருள்கள் எல்லாம் நாட்டிலுள்ளோர் யாவருக்கும் அனுபவிக்க உரிமையுண்டு என்பதையறியுங்கள். பலருக்கும் எடுத்து உரையுங்கள். பிறரை நம்பாதீர்கள் தன்கையே தனக்குதவி. தலைவர்களெல்லாம் பட்டத்திற்கும், பதவிக்கும்,கௌரவத்திற்குமே, பாடுபடுபவர்கள்அயல்நாடுகளில் ஆட்சியேதொழிலாளர்கையிலிருக்க, இங்கே, சட்டசபைகளில் ஸ்தானம் வகிப்பதற்கும் அருகரல்லாமலிருக்கின்றீரே. தொழிலாளரே உறங்கன்மின். உலகமே உங்களால் நடக்கிறதென உணருங்கள். உழையுங்கள். சுதந்திரம் அடையுங்கள்!

## சென்னிமலை பஞ்சாயத்து போர்டு.

ஷை பஞ்சாயத்து போர்டின் சாதாரண மீட்டிங் ஒன்று 12—10—32 ந் தேதி காலை 9 மணிக்குத் தலைவர் வா. சே. முருகேச முதலியார் தலைமையின்கீழ் நடைபெற்றது. நகரின் சுகாதாரத்தைப் பற்றியும், இதர சில விஷயங்களைப் பற்றியும், பேசி முடிவு கட்டப்பட்டது.

பின்பு சென்னிமலை டவுனுக்கு பைகாரா எலக்ட்ரிக் ஸ்கீமிலிருந்து எலக்ட்ரிக் லைட்டுகள் போடவேண்டுமென்றும், அதற்காக அசிஸ்டெண்டு இஞ்சினீயர் அவர்களை எஸ்டிமேட்டு தயாரித்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்வதாய் ஒரு தீர்மானமும், ஈரோடு திருவாளர் ஈ. வி. ராமசாமிப் பெரியார் அயல் தேசங்களுக்குச் சென்று திரும்பி வருவதால் ஷை பெரியாரின் பொதுஜன சேவையை மதித்து பஞ்சாயத்து போர்டார் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்க வேண்டும் என்பதாய் ஓர் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. பிற்பகல் சுமார் 2 மணிக்குமீட்டிங்முடிவு பெற்றது.

# கோயில் நுழைவால் தீண்டாமை ஒழியுமா?

(கே- எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல்.)

பல்லாண்டுகளாய்ப் பொதுவாகவும் காந்தியின்கடும் பசிக் காட்சிக்குப்பின் சிறப்பாகவும், தீண்டப்படாதாரின் 'கோயில் நுழைவு' என்ற பிரச்சினை தன் நாவில் நுழையாத இந்தியன் இல்லை என்றே சொல்லலாம். ஆதிதிராவிடரைக் கோவிலுக்குள் அனுமதிக்க வேண்டும் என்னும் அரியதோர் கேள்வி அனைவராலும் பலவாறு வாதிக்கப்பட்டு வந்துகொண்டிருந்ததன்றி காந்தியடிகள் போன்றாரின் கவனத்தைக் கடுமையோடு பாதித்துக்கொண்டே வந்திருக்கின்றது. இன்னும் வருகின்றது. பொதுத் தொகுதி தனித்தொகுதி என்று இதுவரை அரசியல் வாதிகளால் அளவின்றித் தர்க்கித்து வரப்பட்ட அரசியல் பிரச்சினை ஆதிதிராவிடர்களைப் பொறுத்த மட்டில் ஒருவாறு முடிவடைந்து விட்டது என்றே சொல்லாம். அம் முடிவுதான் பூனா ஒப்பந்தமாகும். அவ்வொப்பந்தம் இருதாரத்தாருக்கும் நற்பந்தத்தை உண்டுபண்ணி விட்டது என்றும் கூறலாம். காந்தியும் அவர் கழறும் மொழிகளே ஐயமற்ற மெய்ப் பொருள் என்று அறவே நம்பும் ஆராய்ச்சியற்ற 'அறிஞரும்' 'தேசிய வாதிகள்' எனத் தெருவெல்லாம் திரிந்தலைந்து நேசமிகுந்தார் இந்தியாவில் தம்மிலும் வேறிலர் என நிதமும் பேசும் அரசியல் வாதிகளும் இவ்வொப்பந்தம் 'பொதுத்தொகுதி'யைக் கொடுத்துவிட்டது என்று பூரிப்படைந்திருக்க, உண்மையில் இது அம்பெத்கார் ஆர்வத்துடன் கைக்கொண்ட தனித்தொகுதியையே அளித்துள்ளது என்று ஏனையவர்கள் எண்ணுவார்கள். இது எவ்வாறாயினும் ஆகுக. உண்மையில் தனித்தொகுதியாயினும் சரி, பொதுத்தொகுதியாயினும் சரி இவ்விரு முறைகளும் ஓர் அரசியல் ஆயுதமேயன்றி வேறல்ல. அவை ஒரு வழியேயன்றி அனைவரும் விழையும் லட்சியம் அல்ல. அத்தகைய லட்சியம் என்னவெனில் அதுதான்ஏனைய மக்களுடன் தாம் அனுபவிக்க வேண்டிய சமத்துவமாகும். அச்சமத்துவம் சமுதாய முறையில் மட்டும் இருந்து மற்றைய வகையில் இல்லாமல் இருப்பின் அஃது யாதும் பயன்படத்தக்கதல்ல. மனித வாழ்க்கை எவ்வெம்முறைகளாகவும், வகைகளாகவும் வகுக்கப்பட்டுள்ளதோ அவற்றிலெல்லாம் சமத்துவ உரிமை சாதி இந்துக்களுக்கும் ஆதிதிராவிடருக்கும் சரிசமானமாய் வழங்கப்பட்டு வந்தாலன்றி ஓயாத கூச்சலும், ஒழியாத சச்சரவும் உறக்க விளைத்த முடிவு பெற்ற பூனா ஒப்பந்தம் சிறிதளவேனும் அது எழுதிக்கையெழுத்திடப்பட்ட காகிதத்தான் அளவும் பயன்படக்கூடியதாகாது என்பது திண்ணம். இதுகாரணம் பற்றியே தான் காந்திபோன்றவர்கள் அரசியம் அதிகாரத்தில் அதாவது பிரதிநிதியின் தொகையில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அளித்துள்ளதைக் காட்டிலும் இருமடங்கு அதிகமாக தீண்டப்படாதாருக்கு அளித்திருப்பதுமன்றி அத்தகைய அரசியல் அதிகாரம் எந்த நோக்கத்தையும் எந்தக்காரியத்தையும் கொண்டு அளிக்கப்பட்டதோ அதே நோக்கத்தையும் காரியத்தையும் செயல் அளவில், அதிலும் கூடிய சீக்கிரத்தில் கொண்டுவரப்பற்பல பிரயத்தனங்கள் செய்து வருகின்றார்கள். அத்தகைய பிரயத்தினங்களில் கோயில் நுழைவு என்பது மிகவும் முக்கியமானதாகும்.

இக்கோவில் நுழைவு என்னும் பிரச்சினை சுயமரியாதைக்காரர்களைப் பொருத்தமட்டில் மிகவும் ஆசைப்படக்கூடியதாகவோ, ஆர்வத்துடன் வரவேற்கக்கூடியதாகவோ இருப்பதாகத்தெரியவில்லை. இந்து மதத்தின் கோவில்கள் ஏழை பார்ப்பனரும் இருமாப்புற்ற சில சாதி இந்துக்களும் தின்று கொழுத்துத் திருவிழா நடாத்தி தீத்தொழில்புரிந்து சாதித் திமிரினால் தம் மதியிழந்துவாழும் ஓர் கற்கோட்டையென்றும், காந்தியின் வாக்குப்படியே விபசார விடுதியினும் கேவலமான வெறுக்கத்தக்க வீண் ஆடம்பர வெறுங்கோட்டையெனவும் நம்பும் நம் சுயமரியாதைக் கூட்டத்தார், இத்தகைய கட்டிடங்களுக்குள் இவர் சென்றால் நல்லதா, அவர் புகுந்தால் சரியா என்று வாதாடிக் காலத்தைப் போக்குவதைக் காட்டிலும் அதிகமான பயனுள்ள பல வேலைகளை மேற்கொண்டுள்ளோம். ஆனால் பொது மக்களின் பணத்திரளால் ஆக்கப்பட்ட கட்டிடங்களாகிய இக்கோவில்களில் பொது மக்கள் அனைவரும் எத்தகைய மறுப்பும் இடைஞ்சலும் இன்றிச் செல்லுதற்கு வசதி இருத்தல்வேண்டும் என்னும் அளவில் நாம் இக்கேள்வியில் ஈடுபடவேண்டியிருக்கின்றது.

இஃது ஒருபுறமிருக்க, இந்துக்களாகவே இருந்துகொண்டு ஆதிதிராவிடர்களுக்கு கோவில் நுழைவு அளிக்கப்படவேண்டும் என்று அவாவும் அறற்றும் மக்களைப்பொறுத்தமட்டிலுமே ஒரே ஒற்றுமையான அபிப்பிராயம் இருந்து வருவதாகத் தெரியவில்லை. காந்தியும் அவரைச் சார்ந்தவர்களும் ஆதிதிராவிடர்களைக் கோவிலுக்குள் விடவேண்டும் என்ற மாத்திரத்தில் ஏனைய இந்துக்கள் எவ்வளவு தூரம் கோவிலுக்குள் செல்லலாமோ அவ்வளவு தூரம் இவர்களும் செல்லலாம் என்னும் கருத்தையே கொண்டவர் ஆவார்கள். ஆனால் இப்பிரச்சனை அவ்வளவு சுலபமானதாகக் காணப்படவில்லை. சாதி இந்துக்கள் என்று சொல்லப்பட்டு வருபவர்களும் கோவிலுக்குள் ஒருவாறு அனுமதிக்கப்பட்டு வருபவர்களுமே கோவிலுக்குள் எல்லா இடங்களிலும் செல்லுதற்கு இயலாது. ஒரு கூட்டத்தாராகிய பிராமணர்கள் மட்டுமே தான் எல்லாவிடங்களிலும் அனுமதிக்கப்படுகின்றார்கள். ஆகையால் இப்போது ஆதித்திராவிடர்களைக் கோவிலுக்குள் விடுவதென்றால் எந்த வகுப்பாரோடுசேர்த்துவிடுவது? எவ்வளவு தூரம் அவர்கள் செல்வது? என்னும் பிரச்சினையும் எழாமல் இருக்கமுடியாது.

இவ்வைபவம் மிகவும் உண்மையே என்பது எல்லோரும் அறிவார். பண்டிதமாளவியா 1929 ம் ஆண்டில் தென்னாட்டில் வந்திருந்த பொழுது கூறிய கூற்று நம்நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அவர் கூறியதாவது "சிற்சில கோவிலுக்குள் இன்னின்ன வரையில்தான் இன்னின்ன கூட்டத்தார் போகலாம் என்னும் வழக்கம் இருக்கலாம்; அதை நான் அறிவேன்; ஆங்கீகரிக்கவும் செய்வேன்; ஆனால் அத்தகைய நியமனங்களைத் தெளிவாக அனைவருக்கும் தெரிவித்து விடவேண்டும்" இதை வாசிக்கும் ஒவ்வொருவருக்கும், மாளவியா அவர்கள், இத்தகைய வித்தியாசங்கள் கோவில்களில் இருப்பதைக் கண்டிக்க முன்வரவில்லை என்றும் அவைகள் சரியானபடி மக்களுக்குத் தெரிவிக்கப்படாமல் இருப்பதற்காகத்தான் கண்டிக்கிறார் என்றும் விளங்காமற்போகாது. ஆகவே, இதன்படி சிலகோவிலைச்சேர்ந்தவர்கள் 'எங்கள் கோவில்களில் ஆதித்திராவிடர்கள் வெளிக்கோபுரத்திற்கு இப்புறம் வருதல் வழக்கமில்லை' என்றுகூறுவாரேல் மாளவியா போன்றவர்கள் அதற்குச்சம்மதித்து ஆதித்திராவிட மக்களை "வெளியிலேயே நின்று கடவுளை வணங்குங்கள்" என்று போதிப்பார்களா? இதனினும் மடமை வேறுண்டோ?

இத்தகைய கொள்கையையும், சில நாட்களுக்குமுன் "சாதியை ஒழிக்க முடியாது கலப்புமணம், உணவு முதலிய விஷயங்களை நான் கண்டிக்கின்றேன்" என்றும் கூறும்மனப்பான்மையையும் உடையமாளவியாவா உண்மையாக ஆதித்திராவிடருக்குச்சுதந்தரம் வழங்கும் உத்தமராக முடியும்? சாதிபோகக் கூடாதாம் கலப்புமணம் செய்வதால் மேலே உள்ளவர்கள் மட்டும் கீழ்இழுக்கப்பட்டு விடுவார்கள் ஆதலால் அதுவும் கூடாதாம், கோவில் களுக்குள் அவ்வதிகாரிகள் வகுத்த நியதிப்படி சில அளவுக்கு மேல்செல்லுதல் கூடாதாம்—இத்தகைய முறண்பட்ட,அறிவற்ற கொள்கையைக் கொண்ட மாளவியாதான் ஆதித்திராவிடர்களைக்கறையேற்ற கங்கணம் கட்டிக் கொண்டவராம்—இவர்தான் பூனா ஒப்பந்தத்தில் முதல்கையொப்பமிட்டவர்.இவர்பேசுவதும் முழுஎமாற்றமன்றி மற்றியாதும் இலது என்பதற்கையமேது?

ஆகவே நாம் இதுவரைகண்டுவந்தபடி கோவில்நுழைவு ஆதித்திராவிடருக்குக் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் கவலையில்லை என்றும் சுயமரியாதைக்கூட்டத்தார் ஒருபக்கமும், பொதுதாக ஆதித்திராவிடர்களை 'ஏனைய இந்துக்களைப்போல எல்லாயிடங்களிலும் கோவிலுக்குள் அனுமதிக்க வேண்டும் என்னும் சிலர் ஒருபுறமும், அவ்வாறு அனுமதித்தாலும் கோவில் வழக்கப்படி சிற்சில இடங்களுக்கு மேல் சிற்சில வகுப்பாரை விடுதல்கூடாது என்றும் ஒரு சாரார் மற்றொரு புறமும் இருக்க, கடைசியாக ஆதித்திராவிடர்களைக்கோவிலுக்குள்விடுதல்அறவேகூடாதுஎன்று அரற்றும் ஒரு சாரினரும் நம்நாட்டில் இருக்கின்றனர். மதம் என்றால் மடமை என்றும் சாதியென்பது சமயம்' என்றும், கற்சிலையே கடவுள் என்றும், பிடிவாதமே பெரும் பக்தியென்றும், பழக்க வழக்கமே நித்யப்பொருள் என்றும், எண்ணி மதிமயங்கி நிற்கும் பணத்திமிர்ப் பண்டார சன்னதிகளும், ஒட்டகம், குதிரை, யானை, பட்டாடை, பால் பழம், பாதாமி, மட்டிலா மாணிக்கம் பொன் வெள்ளி யாய மாயையே மதமெனக்கொண்டு மக்களை மாக்களாக்கும் மடாதிபதிகளும், பள்ளியைக்கனவிலும் காணாராய் பார்ப்பனகுருக்கள் பாதம் பரமாதமெனக் கூறி அடிமையாய் இருந்துவரும் அறிவிலிகளாம் டிரஸ்டிகளாகிய வேளாளர்களும் தம்உயிர்போயினும் தீண்டாதாரை கோவிலினுள் விடோம் என்று உறுமிக்கொண்டிருக்கின்றார்கள். வடநாட்டிலாவது காந்தியின் வாக்கிற்காக சமீபகாலத்தில் பல கோவில்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தென்னாட்டில் உள்ள கோவில்களின் கதவு பூட்டப்பட்டிருக்கின்றது. நந்தனாரையும் திருப்பாணாழ்வாரையும், திருநீலகண்ட திருப்பாணரையும் கோவிலுக்குள் விடவில்லையா என்றால் அவைகள் பொய் என்றோ அல்லது அதைப் புறக்கணித்தோ விடுகின்றார்கள். "அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய் ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும், கங்கைவார் சடைக்கரந்தார் கன்பராகில் அவர்கணடீர் யாம் வணங்கும் கடவுளாரே" என்று அப்பர் பாடினாரென்றால், அவர்கள் நாம் இதைத்திருப்பிப்

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க

குடி அரசு.

ஈரோடு 1932அக்டோபர்மீ 23-உ

# தீபாவளிக் கொள்ளை நோய்.

——:0:——

ஒவ்வொரு வருஷமும் தவறாமல் வரும் பெரிய கொள்ளை நோய் சமீபத்தில் வரப்போகிறது. மக்களுடைய உயிரைக் கவர்ந்து செல்லும் கொள்ளை நோயினால் கூட அதிகக் கஷ்டமில்லை; ஆனால் மக்களை உயிரோடு வைத்து, அவர்களுடைய இரத்தத்தையும் செல்வத்தையும், அறிவையும் உறிஞ்சி விடும் கொள்ளை நோய்களுக்கே அதிகமாக அஞ்ச வேண்டும். அத்தகைய கொள்ளை நோய்கள் இந்து மதத்தில் ஏராளமாக இருக்கின்றன. இவைகளில் எல்லாம் மிகவும் பெரியதாகிய கொள்ளை நோய்தான் இவ்வாரத்தில் வருகிறது. அக்கொள்ளை நோய் தீபாவளிப்பண்டிகையேயாகும். ஆகையால் எல்லா மக்களையும் ஜாக்கிரதையாயிருக்கும்படி எச்சரிக்கவேண்டும் என்பதற்காகவே நாம் அக்கொள்ளை நோயின் கொடுமைகளை எடுத்துக்காட்ட முன்வந்தோம்.

இந்தியர்கள் அவர்களுக்குள்ளும் இந்துக்கள் என்பவர்கள், மற்ற சமூகத்தாரைக் காட்டிலும், செல்வத்திலும், அறிவிலும், வீரத்திலும், தாழ்ந்து அடிமை மனப்பான்மை மிகுந்தவர்களாயிருப்பதற்குக்காரணம், இந்து மதமும், அதன் மூலம் ஏற்பட்டுள்ள பண்டிகைகளுமே என்பதை நமது இயக்கம் நன்றாய் விளக்கிக்காட்டியிருக்கின்றது. இந்து மதமும், இந்து மதத்தின் பேரால் ஏற்பட்டு வழங்கிவரும் பண்டிகைகளும் இல்லாதிருக்குமானால், நமது மக்கள், எவ்வளவோ உயர்ந்த நிலையிலும், சுதந்திரமுடையவர்களாகவும் அறிவுடையவர்களாகவும் இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இன்று மதத்தையும். மதப்பண்டிகைகளையும், லட்சியம் பண்ணாமல் தங்கள் சொந்த புத்தியின் வழியே நடந்து, இவ்வுலகத்தில், சுகமாக வாழ்வதற்கு வழியைக்கண்டு பிடிப்பதில் முனைந்து நிற்கும் மக்களே, பகுத்தறிவு உடையவர்களாகவும், அடிமைத்தன்மை இல்லாதவர்களாகவும், தரித்திரமில்லாதவர்களாகவும், வாழ்வதை நாம் கண்கூடாகக்காணக்கூடிய நிலைமையிலிருக்கிறோம். இருந்தும் நமது நாட்டு முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவதாக ஆர்ப்பாட்டம் புரிந்து கொண்டிருக்கும் எவரும், மற்ற நாட்டு மக்கள் சுதந்திரமடைவதற்குக் கைக்கொண்ட உண்மையான வழிகளைப்பற்றிச் சிந்திக்கவோ, அதுபற்றி நமது மக்களிடையே பிரசாரம் பண்ணவோ முன்வராமலிருக்கின்றனர். ஆனால் நாம் மாத்திரம் ஆதிமுதல், இந்து மதமும், இந்து மதப்பண்டிகைகளும் ஒழிந்தால் ஒழிய நமது மக்கள், செல்வத்திலோ, அறிவிலோ, சமத்துவத்திலோ ஒருநாளும் முன்னேற முடியாது என்று சொல்லிவருகிறோம்.

இப்பொழுது நமது கண்முன் நிற்கும் தீபாவளிப்பண்டிகையை எடுத்துக் கொள்ளுவோம். இப்பண்டிகையினால், நமது நாட்டு மக்களுக்கு உண்டாகும் பொருள் நஷ்டம், சரீர துன்பம் எவ்வளவு? அன்றியும், சிறு குழந்தைகள் முதல், வயதானவர்கள் வரையுள்ள எல்லோர் மனத்திலும் பதியும் மூட நம்பிக்கை எவ்வளவு? இவற்றையெல்லாம் ஜனசமூகத்திற்கு எடுத்துக்காட்டி அவர்களைச் சீர்திருத்த எந்தத் தேசாபிமானியாவது முயற்சி எடுத்துக்கொள்ளுகின்றானா?

முதலில் இப்பண்டிகையினால் மக்களுடைய அறிவு எவ்வாறு மழுங்கவைக்கப்படுகின்றது என்பதைப்பற்றி சிறிது ஆராய்வோம். இதை அறிய வேண்டுமானால் இதன் பொருட்டு—அதாவது இப்பண்டிகையைத் "தெய்வீக" மானது என்று மக்கள் நம்பவைக்கும்பொருட்டு ஏற்பட்டிருக்கும் புராணக்கதையை ஆராய்ந்தாலே இதன் உண்மை விளங்கும். ஆதலால் அக்கதையைக் கீழே குறித்துக்காட்டுகிறோம்.

"பூமிதேவி" என்னும் இந்த மண்ணுக்கும், "மகாவிஷ்ணு" என்று சொல்லப்படும் ஒரு தெய்வத்திற்கும் "நரகா சூரன்" என்னும் ஒரு மகன் பிறந்தானாம். அவன் அதிக பலசாலியாக இருந்து கொண்டு பார்ப்பனர்களுக்குத் துணைவராகிய "தேவர்கள்" என்பவர்களையெல்லாம் மிகவும் கஷ்டப்படுத்திக்கொண்டிருந்தானாம். அதலால் தேவர்களெல்லாம், தமிழர் குலமாகிய அசுரர் குலத்தைச்சேர்ந்தவனாகச் சொல்லப்பட்ட "நரகாசுர"னுடைய கொடுமையைச் சகிக்க முடியாமல் "மகா விஷ்ணு" என்னும் அந்த தெய்வத்தினிடம் சென்று முறையிட்டார்களாம். மகா விஷ்ணு என்பவரும், அந்த நரகாசுரனைக் கொன்று தேவர்களுடைய கஷ்டத்தை நீக்குவதாகக்கூறினாராம். அப்பொழுது பூமிதேவி, நரகாசுரனைக் கொல்லும் போது தன்னையும் உடன் வைத்துக்கொண்டே தன் மகனைக்கொல்லும்படி வேண்டிக்கொண்டாளாம். அதற்கு மகா விஷ்ணுவும் சம்மதித்தாராம்.

அதன் பிறகு மகா விஷ்ணு கிருஷ்ணனாகப் பிறந்து, சத்தியபாமையாகப்பிறந்திருந்த பூமிதேவியையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு போய், ஒரு தீவில் வசித்து வந்த நரகாசுரனைக்கொன்றானாம். கிருஷ்ணன் நரகாசுரனைக்கொன்ற போது, அவன், தான் இறந்த நாளைப் பூமியில் உள்ளவர்கள் கொண்டாட வேண்டுமென்று "வரம்" கேட்டானாம். கிருஷ்ணனும் அவ்வாறே "வரம்" கொடுத்தானாம்.

இதுதான் தீபாவளிப்பண்டிகைக்காகக் கற்பிக்கப்பட்டிருக்கும் கதை. இக்கதையை நம்பித்தீபாவளிப்பண்டிகைக் கொண்டாடும் மக்களைச் சிறிதாவது புத்தியுள்ளவர்களென்று கூறமுடியுமா என்பதை நன்றாய் யோசனை செய்து பாருங்கள்!

முதலில் நமது கண்ணுக்கு முன் காணப்படும் இந்த மண் ஒரு பெண்ணாக இருக்க முடியுமா?

இரண்டாவது, 'மகா விஷ்ணு' என ஒரு தெய்வம், கடைகளில் விற்கும் படங்களில் இருப்பது போல, பல பெண்ஜாதிகளுடன், ஒரு குருவியின் மேல் உட்கார்ந்து கொண்டோ அல்லது, பாம்பின் மேல் படுத்துக்கொண்டோ சமுத்திரத்தில் மிதந்துகொண்டோ இன்றும் இருப்பதாகக் கூறப்படுவதும், இதற்குமுன் இருந்ததாகச் சொல்லப்படுவதும் அறிவுக்குப் பொருத்தமான செய்தியா?

இப்படிப்பட்ட ஒரு தெய்வத்திற்கும் மண்ணுக்கும் ஒரு பிள்ளை பிறந்தது என்று சொல்லுவது எவ்வளவு புரட்டு? ஆரம்பமே புரட்டாயிருக்கும் போது மற்றவைகளெல்லாம் எப்படியிருக்குமென்பதை இன்னும் நாம் விரித்துக்காட்ட வேண்டியதில்லை. ஆகவே இத்தகைய ஒரு அர்த்தமற்ற கதையைத் "தெய்வீக" முள்ளதாக நம்பிக்கொண்டு, இதன் பொருட்டு ஒரு தேசம் கோடிக்கணக்கான பொருளை ஒரே நாளில் செலவு செய்யுமானால், அதை அறிவுடைய தேசமென்று சொல்லமுடியுமா?

இந்தக்கதையை நம்பியே "நரகசதுர்த்தி" என ஒரு நாளைக்குறிப்பிட்டுக்கொண்டு, அன்று விடியற்காலையில் எழுந்து எண்ணெய் தேய்த்து முழுகுவதும், எண்ணெய்ப் பலகாரங்களை வயிறு புடைக்கத்தின்பதும், பட்டாசுக்கட்டுகளைக் கொளுத்துவதுமான செயல்களைச் செய்து பண்டிகை கொண்டாடுகின்றனர்.

இவ்வாறு செய்வதனால், மக்களுக்கு மதப்புரட்டிலும், பண்டிகைப் புரட்டிலும், புராணப்புரட்டிலும், அவதாரப்புரட்டிலும் பார்ப்பன வம்சத்தைச் சேர்ந்த தேவர்கள் அனைவரும் பரிசுத்தமானவர்கள், உயர்ந்தவர்கள், தமிழர் வம்சத்தைச் சேர்ந்தவர்களாகிய அசுரர்கள் அனைவரும் அயோக்கியர்கள், தாழ்ந்தவர்கள் என்னும் புரட்டிலும் நம்பிக்கையுண்டாகி, அவர்கள் அறிவுகுன்றிப் போகின்றது; அன்றியும், மக்கள், பண்டிதர்கள், புரோகிதர்கள், மதவாதிகள் என்னும் புரட்டர்களுக்கு இன்னும் அடிமையாகவே இருக்கக்கூடிய நிலைமையும் அடைகிறார்கள் என்பதை யார் மறுக்க முடியும்?

இனி இப்பண்டிகையினால்உண்டாகும் பொருள் நஷ்டத்தையும், சுகாதாரக் குறைவையும் கவனிப்போம். ஏழை முதல் பணக்காரன் வரையுள்ள எல்லா இந்துக்களும்" இதையொரு "தெய்வீக" மான பண்டிகையென்று கருதுவதால், எப்பாடுபட்டாவது எவ்வளவு பணத்தைச் செலவழித்தாவது, பணமில்லாவிட்டால் கடன் வாங்கியாவது, இதைக்கொண்டாடவேண்டுமென்று தமது அறியாமையால் நினைக்கிறார்கள். இவர்களில் பணக்காரர்கள், இப்பண்டிகையின் பொருட்டு எக்கேடு கெட்டாலும், எந்தச்சந்தியில் நின்றாலும் அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் ஏழை மக்களும், பணக்காரர்களைப் பார்த்தும், அர்த்தமற்ற தெய்வீகத்தையும், புராணக்கதைகளையும் நம்பியும், வீணாக அறிவின்றிக் கஷ்டப்படுகின்றார்களே என்றுதான் நாம பரிதாபப்படுகின்றோம். ஏழை மக்கள், தீபாவளிப்பண்டிகை வர ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே, பண்டிகை கொண்டாடுவதற்காகப் பலகாரம் தயார் செய்வதற்குக் கடைச்சாமான்கள் வாங்குவதற்கும், புதுவேட்டிகள் புடவைகள் வாங்குவதற்கும், பட்டாசுக்கட்டுகள் வாங்குவதற்கும், பட்டினி கிடந்து பொருள் சேர்க்கின்றார்கள். அவ்வாறு சேர்த்து வைத்த பொருளும் போதாமல்

கடன்வாங்குகிறார்கள். இவ்வாறு வாங்கியகடனைக் கொடுப்பதற்கு வேறுவழியில்லாமல் இவர்கள் தேடிவைத்திருக்கும் நகைகளோ பாத்திரங்களோ விற்கப்படுகின்றன. இவ்வாறு ஏழைமக்கள் பொருள் வீண்நஷ்டமாகிறது.

இதற்கு மாறாக முதலாளிகளாக இருக்கும் ஜவுளி வியாபாரிகளும் மளிகைக்கடைக்காரர்களும், இத்தீபாவளியில் நல்ல லாபம் அடைகிறார்கள். அவர்கள் அடையும் இலாபம் ஏழை மக்கள் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருள் என்பதை யார் மறுக்க முடியும். ஆகவே இப்பண்டிகை ஏழை மக்களை இன்னும் பரம ஏழைகளாக்கவும், பணக்காரர்களை இன்னும் கொழுத்த பணக்காரர்களாக்கவும் ஒருவகையில் உதவி செய்கிறதென்பதையும் அறியலாம்.

அன்றியும் வீணாகக்கொளுத்திச்சுட்டுப்பொசுக்கப்படும், பட்டாசுகளும், வாணங்களும், எங்கிருந்து வருகின்றன. இவைகள் பெரும்பாலும் அயல்நாடுகளிலிருந்தே தீபாவளிக்கென்று நமது நாட்டிற்குவியாபாரத்திற்காகக்கொண்டு வரப்படுகின்றன. சுமார் இரண்டுகோடி ரூபாய் பெறுமானமுள்ள பட்டாசுக்கட்டுகளும், வாணங்களுமாவது இந்தத்தீபாவளியில் பொசுக்கப்படுமென்பதில் ஐயமில்லை. இந்த இரண்டுகோடியும் கரியும் புகையுமாகப் போவதைத்தவிர இதனால் வேறுயாருக்கு என்ன பலன்? நமது தேசப்பணமாகிய இந்த இரண்டுகோடி ரூபாயும் அந்நிய நாட்டுக்குத்தானே போய்ச்சேருகிறது? இன்னும் அன்னிய நாட்டுத்துணிகள் வியாபாரத்தின் மூலம் அயல்நாடுகளுக்குச்செல்லும் பொருள் நாலைந்து கோடி ரூபாய்க்குக்குறையாது என்பது நிச்சயம். இந்த நாலைந்து கோடியும் நமது தேசத்திற்கு நஷ்டம் தானே.

இன்னும் அடைமழை பெய்து கொண்டிருக்கும் இந்த ஐப்பசி மாதத்தில் விடியற்காலையில் எண்ணெய் தேய்த்து முழுகிவிட்டு எண்ணெய்ப் பலகாரங்களைப்போட்டு வயிற்றை நிறப்புவது சரீர சுகத்துக்கு ஏற்றதா என்று தீபாவளியை நம்பும் எந்த முட்டாளாவது யோசித்துப்பார்க்கின்றானா? சாதாரணமாக நமது நாட்டில் "காலரா" என்னும் விஷபேதி நோய் பரவுவது இந்த தீபாவளி முதல்தான் என்பதை எவரும் அறிவார்கள். எதனால் இந்த விஷபேதி உண்டாகின்றது என்பதை அறிந்தவர்கள் இந்தத் தீபாவளிப்பண்டிகையினால் நமது ஜனசமூகத்திற்கு உண்டாகும் தீமையை மறுக்கமாட்டார்கள். சாதாரணமான அஜீரணமே இந்த விஷபேதிக்குமுதற்காரணமாகும். விடியற்காலத்தில் எண்ணெய் தேய்த்து முழுகி எளிதில் ஜீரணமாகாத மாவுப்பண்டங்களைப் போட்டு வயிற்றை நிரப்பினால் வயிற்றில் உள்ள ஜீரணக்கருவிகள் என்ன நிலையடையும்? இதனால் பலவிடங்களில் நமது நாட்டில் விஷபேதி உண்டாகிவிடுகின்றது. இன்னும் பலவகையான நோய்களும் உண்டாகி விடுகின்றன. நாம் கூறுவதில் நம்பிக்கையில்லையானால் தீபாவளியன்று மறுநாள் நமது நாட்டில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று பாருங்கள்! எத்தனை அஜீரண நோயாளிகள் வருகிறார்களென்பதைத்தெரிந்துகொள்ளலாம். இன்னும் சமாச்சாரப்பத்திரிகைகளைக் கவனித்துக்கொண்டிருப்பீர்களானால் எங்கெங்கே விஷபேதி உண்டாகியிருக்கிறதென்பதையும் அறியலாம்.

இதுவுமல்லாமல் பட்டாசுகளிலிருந்து எழும் விஷப்புகையினால் வரும் வியாதிகள் பல. இவ்வாறு தீபாவளிப்பண்டிகையானது மக்களுடைய மனத்திலும் மூடநம்பிக்கையை உண்டாக்குவதோடு அவர்களுடைய பொருளுக்கும் நஷ்டத்தையுண்டாக்கி சரீர சுகத்தையும் கெடுத்து உயிருக்குக்கூட உலைவைத்துவிடுகிறதென்பதையும் அறியலாம்.

ஆனால், இந்தந்தப்பண்டிகையைப்பற்றியும். இதுபோன்ற மற்ற பண்டிகைகளைப்பற்றியும், நமது நாட்டுத்தேசியப்பத்திரிகைகளாவது, தேசீய வாதிகளாவது கண்டித்துக்கூறி, அவைகளில் உள்ள சூழ்ச்சிகளையும் புரட்டுகளையும் எடுத்துக்காட்டி, மக்களுடைய செல்வத்தை நஷ்டமாகாமற்செய்யவாவது, அவர்களுடைய மூடநம்பிக்கைகளைப்போக்கவாவது முயற்சி செய்கின்றார்களா என்று பார்த்தால் ஒரு சிறிதும் இவ்வாறு செய்வதாகக்காணோம். இதற்குமாறாக; இது போன்ற பண்டிகைகளைப்பற்றியெல்லாம் விளம்பரப்படுத்துவதும், அவைகளின் "பரிசுத்தத்தன்மை" களை மக்களுக்கு எடுத்துக்காட்டுவதும் அவைகளைக்கொண்டாடும்படி செய்வதும் ஆகியகாரியங்களையே செய்துவருகின்றார்கள். உதாரணமாக, இந்தத்தீபாவளியைப்பற்றிச் சென்ற இரண்டுமாதங்களாகவே பிரசாரஞ்செய்யப்பட்டு வருவதை அறியலாம். அதாவது, தீபாவளிப்பண்டிகை நமது தேசீயப் பண்டிகையென்றும், தேவர்களுக்கு விரோதியாயிருந்த நரகாசுரனைக்கொன்று அவர்கள் சுகமடையும்படி விடுதலையுண்டாக்கிய விடுதலைநாள் என்றும், ஆகையால் அன்று எல்லோரும், தேசீய விடுதலையைக்கருதி கதர்வாங்கிக்கட்ட வேண்டும் என்றும், கதர்பக்தர்களும், காங்கிரஸ்பக்தர்களும், தேசீய பக்தர்களும், கதரின் பேராலும், காங்கிரசின் பேராலும் தேசீயத்தின் பேராலும், தீபாவளிப்பிரசாரம் செய்து வருகின்றனர். இவர்கள் செய்யும்இந்தப் பிரசாரம், மக்களை இன்னும் மூடநம்பிக்கையுடையவர்களாக்கவும், குருட்டுப்பழக்க வழக்கங்களையுடையவர்களாக்கவும், செய்யப்படும் மதப்பிரசாரமா அல்லவா? என்றுதான் நாம்கேட்கின்றோம்.

நமது நாட்டுத் தேசியவாதிகளுக்கு, இதுபோன்ற பண்டிகைகளின் பேரில் உள்ளபக்தி தான் இன்று எடுத்தவைகளெல்லாம், அதாவது, தேசீய ராஜீயகாரியங்களைக்கூடப் பண்டிகைகளாக்கி, அவைகளைத் "தேசீயமதம்" என்னும் ஒரு புதியமதத்தின் பேரால் கொண்டாடச் செய்யவேண்டும் என்னும் எண்ணமுண்டாகி அவ்வாறே செய்தும் வருகிறார்கள். இதற்கு உதாரணமாக, காந்திஜெயந்தி, நேருஜெயந்தி, திலகர்ஜெயந்தி தாஸ் ஜெயந்தி, லஜபதி நாள், சத்தியாக்கிரக நாள், டண்டிநாள் புனு ஒப்பந்தநாள், உண்ணாவிரத நாள்என்பவை போன்றபலநாட்களைக்குறிப்பிட்டு அவைகளைப் பண்டிகைகள் போலக்கொண்டாடும்படி செய்து வருவதைக்கூறலாம். ஆகவே இத்தகையவர்கள், புராதனமானதென்று சொல்லப்படும் தீபாவளிபோனற பண்டிகைகளைப்பற்றி பிரசாரம் பண்ணாமல் விட்டு விடுவார்களா?

இன்று தீபாவளிப் பண்டிகையின் விசேஷத்தைக் கூறிக்கதர்ப்பிரசாரம் பண்ணும் தேசீய வாதிகள், உண்மையில் பகுத்தறிவுடையவர்களாயிருந்தால், நமது நாட்டுச்செல்வம் அன்னிய நாட்டுக்குச்செல்லக்கூடாது என்ற எண்ணமுடையவர்களாயிருந்தால், நமது மக்கள் அனைவரும் அறிவுடையவர்களாக ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்னும் நோக்கமுடையவர்களாயிருந்தால் தீபாவளிப்பண்டிகையையும் இது போன்ற மற்றப்பண்டிகைகளையும் ஒழிப்பதற்கே முயற்சி செய்யவேண்டும். தீபாவளிபண்டிகையை ஒழிப்பதன் மூலம், அன்னிய நாட்டிற்குப் பட்டாசுகளின் மூலம் செல்லும் கோடிக்கணக்கான ரூபாய்களையும், துணிகளின் மூலம் செல்லும கோடிக்கணக்கான ரூபாய்களையும் செல்லாமல் தடுப்பதனால் நமது நாட்டிற்கு லாபமுண்டா? அல்லது, தீபாவளிப்பண்டிகையைக் கொண்டாடுவதன் மூலம் ஆயிரக்கணக்கான ரூபாய்களுக்குக் கதர் விற்பனை புரிவதனால் லாபமுண்டாவென்று கேட்கிறோம்.

ஆகவே, உண்மையாக ஆராய்ந்துபார்த்தால், நமது நாட்டில் உள்ள தேசீயவாதிகளோ, சமயவாதிகளோ, புரோகிதர்களோ, பண்டிதர்களோ, காங்கிரஸ்வாதிகளோ, அனைவரும், மக்களை இந்து மதத்தின் பேராலும், பண்டிகைகளின் பேராலும், ஏமாற்றி இன்னும் அடிமைகளாகவே வைத்திருந்து தங்கள் சுயநலத்தைச் சாதித்துக்கொள்ளவே முயற்சி செய்கிறார்கள் என்பதை அறியலாம்.

ஆதலால், உண்மையில் விடுதலை, பெற நினைக்கின்றவர், மூடநம்பிக்கையினின்று நீங்க நினைக்கின்றவர்கள் மதமும் பண்டிகைகளும் ஒழிந்து மக்களைப்பிடித்த பீடை நீங்கவேண்டுமென்று நினைப்பவர்கள் அனைவரும், தீபாவளிப் பண்டிகையை அடியோடு ஒழிக்க வேண்டுகிறோம். தீபாவளிப்பண்டிகைக்கென்று, பணத்தையும் செலவு செய்து புத்தியையும் கெடுத்துக் கொள்ளாமல், அந்த நாளையும் மற்றச் சாதாரணமான நாளைப்போலவே கழிக்கும்படி வேண்டுகின்றோம். ஆகவே இக்கொள்ளைநோய்க்கு இடங்கொடாமல், அதைத் தடுக்குமாறு எல்லோருக்கும் எச்சரிக்கை செய்கின்றோம்.

---

### மீண்டும்!
### கார்ப்பொரேஷனில்
## இந்து மதம்.

சென்ற 19-10-32 சென்னைக் கார்ப்பொரேஷனில் நடந்த கூட்டத்தில், ஜார்ஜ் டவுன் சொர்ண விநாயகர் கோவிலுக்குப் பக்கத்தில் உள்ள 537 சதுர அடி நிலத்தை அக்கோயிலுக்கு விட்டுவிடுமாறு ஒரு அவசரத்தீர்மானம் பிரரேபிக்கப்பட்டு ஆமோதிக்கப்பட்டது. ஒரு கனவான் இது அவசரமான விஷயமல்லவென்றும், ஆகையால் இவ்விஷயத்தை தீர்க்க ஒரு கமிட்டி நியமிக்க

வேண்டுமென்றும் கூறினார். மற்றொரு கனவான், அந்தக்கோயிலிலும், அதற்கு விடும் நிலத்திலும் தீண்டாதார்க்கு உரிமையுண்டா என்று கேட்டார். இவைகளுக்குச் சரியான சமாதானம் கூறப்படாமல், முதலில் கொண்டுவந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நகரசபைக்குச் சொந்தமான சொத்துக்கள் நகர மக்களுக்கும் பொதுவான சொத்துக்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே நகரசபைச் சொத்துக்களைச்செலவு செய்யும்போது, அவை நகர மக்கள் அனைவருக்கும் உபயோகப்படக் கூடிய முறையிலேயே செலவுசெய்யப்படவேண்டும் என்பதை எவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். ஆகவே, நகரசபைக்குச் சொந்தமான ஒரு பொது நிலத்தை, ஒரு மதத்தார்க்கே, அதிலும் சில ஜாதியார்க்கே உபயோகமாக இருக்கும் ஒரு கோயிலுக்கு விட்டதனால் நகர மக்களுக்கு என்ன பிரயோஜனமென்று கேட்கின்றோம். முன்பு நகரசபை சங்கராச்சாரியாருக்கு வரவேற்பு அளிக்கத்தீர்மானித்ததையும், இப்பொழுது பொதுஜன உபயோகத்திற்கு பயன் படுத்த வசதியுள்ள 537 சதுர அடியுள்ள நிலத்தை ஒரு பிள்ளையார் கோயிலுக்குச் சொந்தமாக்கிய தீர்மானத்தையும் பார்க்கும் போது, நகரசபை, பொதுஜன நன்மைக்காக ஏற்பட்டதா? அல்லது இந்துமதப்பாதுகாப்புக்காக ஏற்பட்டதா? என்ற சந்தேகம், அந்நிய மதக்காரர்களுக்கு உண்டாகாமற் போகாது. இம்மாதிரியே நகரசபை இந்து மதத்திற்குப் பாதுகாப்பும் அளித்துக்கொண்டே போவதைப்பொது ஜனங்கள் கண்டிக்க முற்படுவது எவ்வகையிலும் குற்றமாகாதென்றே கருதுகின்றோம்.

## கொழும்பு.

எம்மிடம் "குடி அரசு" பதிப்பகத்திலுள்ளபுஸ்தகங்களும், 'தமிழன்' ஆபீஸ் புஸ்தகங்களும், "புதுவை முரசு" அநுபந்தமும் சுயமரியாதைத் தலைவர்களின் உண்மை போட்டோக்களும் போட்டோ பேட்ஜ்களும் கிடைக்கப்பெறலாம். வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசங்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

A. S. Paramasivam,
No. 1, Josephlane,
Bambalapitiya, Colombo.

A. Balakrishnasamy,
No. 191, Norris Road,
Pettah, Colombo.

# "இலங்கையும் தமிழர்களும்"

(தோழர் எம். ஆறுமுகம்)

இலங்கைத்தீவிற்குத் தமிழர்கள் எக்காலத்தில் வந்தார்கள் என்று சரித்திர சம்பந்தமாக ஆராயுமிடத்து திரேதாயுகத்தில் தசரத புத்திரன் ராமன் சீதையை இராவணனால்கொண்டு போன காலத்தில் தென்தேயத்து வானரங்கள் என்று குறிப்பிட்டிருப்பது தற்கால ஆராய்ச்சியில் தமிழர்களே எனப்புலனாகின்றது. மேலும் புத்தபிரான் காலத்தில் பௌத்த மதத்தைச் ஸ்தாபிக்கின்ற காலத்திலும், தென் தேய அரசபெண்மணிகளை சிங்கள அரசர்கள் மணத்தினிமித்தம் தென்னாட்டு சேரசோழ பாண்டிய நாட்டு மன்னர்களால் அனுப்பப்பட்ட காலையிலும் இலங்கை ஒரு தமிழ்நாடென விளங்கிற்று. இப்பொழுது தமிழ் பாஷை பேசப்படும் தமிழர்களை நாம் கேட்போமானால் நான் யாழ்பாணத்தமிழனென்றும் நான் வடநாட்டுத்தமிழனென்றும், நான் தென்னாட்டுத்தமிழனென்று திருத்திக்கூறுவர். இவர்களில் சிலர் மகமதியர்களாகவும், சிலர் பௌத்தர்களாகவும், சிலர் கிறிஸ்துவர்களாகவும், மற்றுமுள்ளவர்கள் இந்துக்களாகவும் விளங்குகின்றனர். ஆனால் எல்லா சமயத்தவரும் பேசப்படுவது தமிழே. இலங்கையானது புத்த மதத்திற்கும் பாலி. பாஷைக்கும் அடிகோலியாய் இருந்தாலும் அநேக சிங்களவர் இன்று பேசுவது தமிழ் மொழியே. இத்தனைச்சிறப்புற்று விளங்கும் தமிழர்கள் இலங்கையில் எவ்விதமாய்க்காலம் கடத்துகின்றார்களென்பதை சற்று ஆராய்வோம். ஒரு காலத்தில் இலங்கையில் தமிழர் என்றால் விசேஷ கௌரவமாகப் பாராட்டிவந்தனர். அக்காலத்தில் இவர்கள் பொது நலத்தொண்டுகளிலோ, தேசசேவையிலோ அரசாங்க உத்தியோகங்களிலோ அங்கம் பெற்றுச் செவ்வனே நடத்தி இருக்கின்றனர். தற்போதும்கூட இராஜாங்க சேவைகளில் இவர்களுக்கு விசேஷ கௌரவம் அளிக்கப்பட்டிருக்கின்றது. இது எதனாலென்றால் திரேதாயுகத்தமிழர்களாகவோ, அல்லது துவாபரயுகத்தமிழர்களாகவோ, இல்லாமல் இருபதாம் நூற்றாண்டு இளம் வீரதமிழர்களென்ற முறையிலும் தேசத்தோடொத்து வாழ் என்ற சீர்திருத்தக் கொள்கைகளிலும் கைப்பற்றியதாலன்றோ இன்று இவர்கள் சிறந்துவிளங்குகின்றனர். இதுகல்வியாலும் நாகரீகத்தாலும் மேற்கொண்ட தமிழர்கள் அடுத்தபடியாய் இருக்கும் தமிழர்களை கவனித்தால் வியாபார முறையில் ஈடுபட்டிருக்கின்றனர். மற்றும் பெரும்பாலர் கூலிகளாக உழைத்து ஜீவிக்கின்றனர், இவர்களின் ஜனசங்கியை இலங்கை இந்திய தொழிலாளர் கம்பெனியில் விசாரித்தால் நன்கு விளங்கும். இத்தமிழர்களிடை பெரும்பாலும் சமயக்கட்டுப்பாடுகளால் பந்தப்பட்டிருப்பதால் இன்னும் வர்ணாச்சிரம தர்மிகளாகவோ சைவசித்தாந்த அல்லது மத வேதாந்திகளாகவோ, விளங்குகின்றபடியால் அன்னவர்கள் பொது நடையில் சமூக ஒற்றுமைப்பட்டவர்களாய்க் காணப்பட்டாலும் பெரும்பாலும் மனத்தில் வேறுபட்டவர்களாய் விளங்குகின்றார்கள். இது இவர்களுடைய மதப்பைத்தியமென்று கூறுவது மிகையாகாது. உதாரணமாக யாழ்பாணத்தமிழர்கள் பெரும் வைதீகப்பற்றுடையவர்கள், தன்னம்பிக்கையற்றவர்கள்; ஏனென்றால் அவர்கள் இடையில் தோன்றிய சர். பொன்னம்பலம், இராமநாதன் அவர்கள் காலம் சென்ற காலையில் அன்னவரை தேரில் அலங்கரித்துத் திருவிழா கொண்டாடி கொழும்பிலிருந்து 200 மைலுக்கப்பாலுள்ள யாழ்பாணத்தில் பரமேஸ்வரக்கல்லூரியில் சமாதி ஒன்று கட்டுவித்து அங்கு அன்னவரை அடக்கம் செய்து; தற்சமயம் அச்சமாதியின் பேரில் கோயிலொன்று கட்டுவித்து கும்பாபிஷேகமும் நடத்தி இருக்கின்றார்கள். அவர்கள்சமயபித்து பிடித்தவர்கள் என்பதுவிளங்கவில்லையா? அன்னவர்களுக்குக் கடவுள் பைத்தியம் உண்டாக்குவதெல்லாம் கொழும்பில் இருக்கும் தன வைசியர்களான செட்டியார்களில் ஆடிவேல் மகோற்சவமும், கிறிஸ்துவ மதத்திற்கு: கிறிஸ்துமஸ் பண்டிகையுமே முக்கிய காரணமாகும். இவைகள் இல்லாவிட்டால் கடவுளைப் பற்றிக் கவலைகொள்பவர்களாயில்லை. இனி மகமதியர்களை எடுத்துக்கொள்வோமானால் அவர்களும் கொழும்பு சோனவர்களென்றும், இந்திய இஸ்லாமிகள் என்றும் ஜாவாதீவின் யாவுக்கர்களென்றும் மூன்று பிரிப்பானறாய் இருக்கின்றார்கள். இங்குள்ள கந்தூரி, ஹஜ்ஜீப் பெருநாள், மூகரம் எல்லாம் வெகுவிசேஷமாய்க் கொண்டாடப்படுகின்றன. பொதுவாய்க் கூறுமிடத்து உண்மை மதப்பற்றும் சமய உணர்ச்சியும் உள்ளவர்களைக் கணக்கெடுத்துப்பார்ப்போமானால் உண்மைத்தமிழர்கள் வெட்கிப்போவார்களென்பதிற் ஐயமில்லை. என் அவர்கள் அவற்றை விட்டுவிடாது கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டிருக்கிறார்களென்றால் அவர்களுடைய அந்தஸ்தும், ஜாதி அபிமானமும் சமயபந்தமும் தங்களால்தான் காப்பாற்றப்பட்டு உயர்ந்த நிலைமையில் விசேஷ கௌரவத்தில் வைத்துக் கொண்டிருக்கிறோம் என்ற மனப்பான்மையினாலேயே. ஆனால் அவர்கள் இது இருபதாம் நூற்றாண்டு என்று உணரவில்லைபோலும். பௌத்தர்களும் தங்கள் புத்தபிரான் பிறந்ததும், தவக்கோலம் பூண்டதும், உயிர் நீத்ததுமான வைகாசி விசாகதினத்தை வெசாக் மூலமாகவும், பெர்ஹேரா மூலமாகவும், தெருப்பிரசங்க மூலமாகவும் மத வளர்ச்சியை உண்டு பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்துவ மதமும் அப்படியே. இதில் நாம் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயமென்னவென்றால் ஒரே பாஷையைப் பேசுபவர்களாயிருந்தாலுங் கூட மதமானது அவர்களை வெவ்வேறு பிரிவாக்கி வைத்துக்கொண்டிருக்கின்றதல்லவா? பாஷையைப்போல மதமும் ஒன்றாய் இருக்குமானால் இவர்களது செல்வாக்கு இன்னும் உன்னதபதவியையெய்தியிருக்குமல்லவா? ஆனால் ஜனசமூகசீர்திருத்தமோ சுயராஜ்யமோ சித்திவேண்டுமென்றால் ஜனங்களைப்பிடித்துக் கொண்டிருக்கும் சமய விலங்குகளைத் தகர்த்தெரிய வேண்டுவது அவசியமாகும். சமய பந்தத்தால் கட்டுண்ட சமூகம் ஒருநாளும் மேன்மையடையப்போவதில்லை. உதாரணமாகப் பம்பாய் கலகத்தை எடுத்துக்கொள்வோம். பேசப்படும் பாஷையோ இந்துஸ்தானி, அங்கு நடந்த கலகமோ, இந்துமுஸ்லீம். இதனால் பாஷைக்கலகமா, மதக்கலகமாதென்றால் மதம் என்று கூறுவது மிகையாகாது. மதத்தால் நேர்ந்த கலகங்கள் எண்ணிறந்தன. ஆங்கிலம்கற்றிருக்கும் ஏனைய சமயத்தவர்கள் சச்சரவுபாஷாபிமானத்தைப் பொருத்தே தவிர மதாபிமானத்தைப் பொருத்தல்ல. மத அபிமானத்தைப் பொருத்தென்றால் இதற்கு எத்தனையோ மண்டைகள் சிதருண்டு பாஷையும் மறைந்து போயிருக்கும். இலங்கை வாழ் தமிழர்களே இனிமேல் நீங்கள் உங்கள் பாஷைக்காகச்செய்யப்புகும் அரிய தொண்டு என்ன இனிமேலும் பாஷையின் பேரால் மதங்களையும், மதங்களின் பேரால் கடவுள்களையும் உண்டாக்கப்போகின்றீர்களா அல்லது பாஷையைப் பீடித்திருக்கும் மதத்தையும், கடவுள்களையும் வெட்டி வீழ்த்தி தமிழ்பாஷைக்குப் புத்துயிர் கொடுத்துப் புதுப்பிக்கப்போகின்றீர்களா? இன்று நீங்கள் இந்த உன்னத நிலைமைக்கு கொண்டுவரக்காரணமாய் இருந்தது பாஷையா, மதமா என்று கருதுங்கள். மதமாயிருந்தால் இன்று நீங்கள் ஆண்டிகளாகவோ, சந்யாசிகளாகவோ மடாதிபதிகளாகவோ, குருக்களாகவோ, ஆச்சாரியர்களாகவோ, மாறுபட்டிருப்பீர்கள். அன்றியும் முல்லாக்களாகவோ ஆலிமீசாக்களா

# புனா ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு.

## ஒப்பந்தம் மாற்றப்படவேண்டும்.

### சென்னை தாழ்த்தப்பட்டார் கூட்டத்தீர்மானம்.

சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 6 மணிக்கு தாழ்த்தப்பட்டார் விசேஷ மகாநாடு நடைபெற்றது. சுமார் 6000 பேர் விஜயம்செய்திருந்தனர்.

தாழ்த்தப்பட்ட தொண்டர் படைத்தலைவர் திரு. டி. சுந்தரராவ்நாயுடு பி. ஏ. பி. எல். ஆரம்பித்து வைத்து, தற்போதைய அரசியல் நிலையில் தாழ்த்தப்பட்டார் நிலைகுறித்து விவரித்துப்பேசினார்.

மகாநாட்டின் கொடியேற்றிய திருமதி இந்திராணிபால சுப்பரமணியம் அவர்கள், தாழ்த்தப்பட்டார் சமூக முன்னேற்றத்துக்காக இச்சங்கம் ஆற்றிவருகிற தொண்டை பாராட்டிப்பேசியதோடு, இத்தகைய சமத்துவப்போராட்டத்திற்கு பரஸ்பரஜக்கியம் அவசியமென்பதைக் குறிப்பிட்டார்.

பின்னர் திரு. ஜே. சிவசண்முகம் அவர்கள் தலைமைவகித்து புனா ஒப்பந்தத்தை விவரித்து, டாக்டர் அம்பெத்கார் முதலானோர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட நேர்ந்த நிர்ப்பந்தத்தை விளக்கியும், ஒப்பந்தப்படி சட்டசபையில் 30 ஸ்தானங்கள் பெறுவதைக்காட்டிலும் வகுப்புப்பிரச்சினை தீர்ப்பின் தனித்தொகுதி சிறந்ததென்றும் குறிப்பிட்டார்.

பின்னர் தோழர்களான டி. வி. சுப்பரமணியம், எஸ் குருசாமி பி. ஏ. முனுசாமி, ஏ. கனகராஜ், பி. செல்வநாதன், வெங்கிடசாமி, பாலகுருசிவம் முதலியோர் புனா ஒப்பந்தத்தை விளக்கியும், அதிலுள்ள குறைபாடுகளை விஸ்தரித்தும், அது மாற்றப்படவேண்டியதவசியமென்றும், ஹரிஜன சங்கம் ஏற்படுத்தியிருப்பதை கண்டித்தும் பேசினார். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புத்துயிர் அளிக்கமுன்வருவீர்களாக. மதம்மனிதனை மட்டுப்படுத்தும், பாஷையோ மனிதனை கௌரவிக்கும் அறிவை விசாலப்படுத்தும் மகத்துவமும் உண்டாக்கும்.

புனா ஒப்பந்தப்படி கிடைக்கும் 30 ஸ்தானங்களைவிட, வகுப்புப் பிரச்சினைமுடிவில் குறிக்கப்பட்ட தனித்தொகுதியே சிறந்ததென இம் மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

2. எதிர்கால அரசியல் திட்டத்தில் ஒவ்வொரு ஜில்லாவிலும், தனித் தனி ஸ்தானங்கள் ஒதுக்கப்படவேண்டுமெனவும், தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு தனிஸ்தாபனங்கள் ஒதுக்கப்பட வேண்டுமெனவும் இம்மகாநாடு அப்பிப்பிராயப்படுகிறது.

3. ஹரிஜன சங்கத்தின் போக்கை இம்மகாநாடு கண்டிக்கிறது.

4. இம்மகாநாடு கோயில் நுழைவு அவ்வளவு அவசியமல்லவென்று கருதுகிறது.

5. தாழ்த்தப்பட்ட வகுப்பார் கவர்னரை தங்கள் குறைகளை எடுத்துச்சொல்ல பேட்டிகாணவேண்டுமென முடிவு செய்கிறது.

தலைவருக்கும் ஏனையோருக்கும் வந்தனம் கூற கூட்டம் முடிந்தது.

---

கவோ, அல்லது பிக்ஷுகளாகவோ, பாதிரிகளாகவோ மாறி இருப்பீர்கள் ஆங்கில பாஷையை ஏனைய நாடுகளும் கற்கத்தொடங்கியதும் இன்னும் அப்பாஷை வலுவடைந்து விர்த்தியானதும் இதுவரை ஆங்கிலம் கற்றவர்களும், கற்கின்றவர்களும் உணர்வார்களாக. ஆதலான் இலங்கை வாழ் தமிழர்களே, தமிழ்பேசும் கனவான்களே தமிழ் மொழியை ஆதரிக்கும் ஏனைய சமயத்தவர்களே! உங்கள் பாஷை க்ஷீணதிசையடையாமுன் அதற்குப்

## மதிப்புரைகள்.

**'இஸ்லாம் மித்திரன்.'**

கொழும்பினின்று வெளியிடப்படும் வாரமிருமுறை வெளியீடான "இஸ்லாம் மித்திரன்" சஞ்சிகை வரப்பெற்றோம். இதில்பல கட்டுரைகளும், செய்திகளும், சமூக முன்னேற்ற விஷயங்களும்மலிந்து காணப்படுகின்றன. இதன் வருட சந்தா ரூ. 7. விலாசம்:—

இஸ்லாம் மித்திரன்
புதிய சோனகத்தெரு, கொழும்பு.

**"சமரசம்."**

ஜனாப் அபுல்ஹஸனுத் சத்புத்தின் முகமத் அவர்களை ஆசிரியராகக் கொண்டு திருச்சியினின்றும் வெளிவரும் சமரஸம்,, என்ற வாரப்பத்திரிகையில் சிலஇதழ்கள வரப்பெற்றோம். இதில்பல கட்டுரைகளும் செய்திகளும் கதைப்பகுதிகளும் காணப்படுகின்றன. வருட சந்தா ரூ3. 8. 0 கிடைக்குமிடம்.

மானேஜர், சமரஸம்,
தஞ்சைரோடு, திருச்சி.

### மாதர் மகாநாட்டில் கர்ப்பத்தடை

குவாலியர் மாதர்சங்கத்தீர்மானம்.

இவ்வாரம் குவாலியர் மாதா மகாநாடு அலகபாத்தில் சரூய ராமஹூக்சர் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் மகாநாட்டில் இலவசக்கட்டாயக் கல்வி யளிக்கப்பட வேண்டுமென்றும், தீண்டாமையையும், முக்காட்டையும் ஒழிக்க வேண்டுமென்றும், பால்யவிவாகத்தடைச்சட்டத்தை ஆதரித்தும், கர்ப்பத்தடை முறைகளை விவாகமான ஆடவருக்கும், பெண்களுக்கும் கற்பிக்கும் பொருட்டு கர்ப்பத்தடை போதனா நிலயங்கள் ஏற்படுத்த வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### அடியக்கமங்கலம் றபீகுல் இஸ்லாம் சொஸைட்டி.

இவ்வூர் பிரபல தனவந்தரும், பரோபகார சிந்தையாளரும் இச்சங்க போஷகருமான ஆலி ஜனாப், ரா. கா. முகமது இஸ்மாயில் ராவுத்தர் அவர்கள் சென்ற 3—10—32 ல் திடீரென மரணமடைந்ததின் நிமித்தம் இச்சங்கத்தின் ஆதரவில் சங்க உப தலைவர், ஜனாப் மு. அப்துல் காதிரு சாதிக் அவர்களது தலைமையில் 7—10—32ல் அனுதாபக்கூட்டமொன்று கூடியபோது, திரு. புருஹானுத்தீன் அவர்களால் காலஞ்சென்ற பெரியார் அவர்களது சரித்திரசுருக்கத்தையும், குணாதிசயங்களைப் பற்றியும், தெளிவாய் சொற்பொழிவு செய்தபின், காலஞ்சென்ற பெரியார் காது ஏகப்புதல்வரும, இச்சங்க அபிமானியுமான ஆர். கே. எம். முகம்மது அபூபக்கர் அவர்கட்கும், மனைவி, பந்துமித்திரர்கட்கும், இச்சங்கத்தாரின் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதாகத் தீர்மானம் நிறைவேறியபின் கூட்டம் கலைந்தது.

(ஒரு நிருபர்.)

### திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

1932ஞு S. C. No. 672

கஸ்பா திருப்பூரிலிருக்கும் கோவர்தன்தாஸ் சேட்—வாதி.

மங்களூர் ஜில்லா மங்களூர் கஸ்பாவிலிருக்கும் பி. கோவிந்தராம் பனிகர்—பிரதிவாதி.

மேற்படி பிரதிவாதி பி. கோவிந்தராம் பனிகாவுக்கு இதனால் தெரிவிப்பது என்னவென்றால் மேற்படி வாதியிடம் நீர் பற்றுவரவு செய்து வந்த வகையில் அசல் வட்டியுள்பட ரூ. 207-9-0 வரவேணுமாய் தாவா செய்து அது 29-10-32உ முடிவான விசாரணைக்காக போடப்பட்டிருக்கிறது. மேற்படி தேதியில் நீர் நேரிலாவது வக்கீல் மூலியமாவது ஆஜராகி உமக்குள்ள ஆக்ஷேபணையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது. இல்லாதவரை ஒருதலை பக்ஷமாக விசாரித்து தீர்ப்பு செய்யப்படும் என்கிற சங்கதியை உமக்கு இதன் மூலியமாய் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

M. K. Govindarajulu
Chettiar, Counsel for Pltf.
திருப்பூர், 20-10-32.

---

**"பசிக்கும் வயிற்றிற்கு ஒரு கவள சாதம் கொடுக்க சக்தியற்ற சாமிகளும், சாஸ்திரங்களும் இந்நாட்டிக்கு வேண்டியதில்லை"**


## யுக்தி பிரைஸ் ரூ. 100.

பின் காணப்படும் கோடிட்ட இடங்களை ஒவ்வோர் எழுத்து வைத்து ஒவ்வோர் வார்த்தையாக பூர்த்தி செய்வதுடன் கொடுத்திருக்கும் அர்த்தம் உண்டாகவேண்டும். இவ்வாறு பூர்த்தி செய்து விடையை 8 அணா பிரவேசக்கட்டணத்துடன் கீழ்கண்ட விலாசத்திற்கு 30-10-32க்குள் அனுப்பிவிடவேண்டும். சரியான விடை அனுப்புகிறவர்களுக்கு ரூ. 100 பரிசாக கொடுக்கப்படும். வருவுக்குத் தக்கபடி பிரைஸ் தொகை கூட்டியோ குறைக்கவோ கூடும். மானேஜரின் விடையே சரியானதாகும். முந்துங்கள்! பிரைசுக்கு முந்துங்கள்!!

(1) — டந்தை = பெண்.
(2) — டல் = சரீரம்.
(3) — ரன் = பலவான்
(4) — ளம் = சப்தம்.
(5) கா—ம் = ஆசை.

விலாசம்:— டி. எஸ். நாராயணசாமி,
வடக்குத்தெரு திருவாரூர்.

[7ம் பக்கத் தொடர்ச்சி]

கூடாது; ஏனெனில் மாண்டவனின் ஜீவன் அந்தப்பிராணிகள் எதாவதொன்றில் புனர் ஜனனமெடுத்திருக்கக்கூடுமன்றே!

இவ்வித மௌடீகப்புராணக் (Anthroporphic) கொள்கைகள் ஹிந்து மக்களிடத்தே மாத்திரம்தான் காணப்படுகின்றனவென்று நினைக்கவேண்டாம். அவைகள் மனிதசமூகம் உள்ள இடங்களிலெல்லாம் பொதுவாகவே குடிகொண்டிருக்கின்றன; ஆனால் ஒவ்வோரிடங்களிலும் சடங்குகள் மாத்திரம் காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப வெவ்வேறு விதமாகக் கையாளப்படுகின்றன. பேய்ன்டன் [Paignton] என்ற இங்கிலாந்தின் கடற்கரையிலிருந்த ஒரு ஊரில் வசித்து வந்த-சர்வகலாசாலையில் பட்டம்பெற்ற ஓர் மாது, தனது தாயின் சமாதிக்குத் தூபமிட்டு, அன்னம்படைத்த விஷயமாக நேர்ந்த ஒரு விவகாரம் நீதிமன்றம் வரைவந்த விஷயம் மிக்க ஆச்சரியமாகவே நமக்குப் புலப்படுகின்றது. சமாதியை அழிப்பதும், பிணத்தை அடக்கம் செய்யும் விஷயத்தில் பிறர் தலையிடுவதும் மிக்க துவேஷத்தை மூட்டுவதாக எல்லா ஜனசமூகங்களாலும் கருதிப் போற்றப்படுகின்றது. சென்ற ஜெர்மனியுத்தத்தில், உயிரிழந்த மக்களின் உடலினின்றும் கொழுப்பை ஜெர்மானியர் சேகரித்தனர் என்பதாக யாரோ கட்டிவிட்டதால் ஏற்பட்ட எதிர்ப்பே அவர்களின் அழிவிற்குப் பிரபலகாரணமாக இருந்தது.

மாண்டமக்களின் ஆத்மாக்களுக்காக மனிதர் மேற்கொள்ளும் சிரமத்தை, உயிருடன் இருக்கும் மக்களின் நன்மைக்காக உபயோகிப்பார்களெனின் ஜனசமூகம் எவ்வளவு முன்னேற்றமடைந்திருத்தல் கூடும் என்பதை யோசிப்பீர்களாக! ஒவ்வொரு மனிதனுடைய செயல்களும் அவை பிறர்பால்எத்தன்மையில்பிரயோஜனகரமாகப்பிரதி பலிக்கின்றதென்பதிலேயே வேரூன்றி நிலைபெருகின்றன. ஒவ்வொருவரும் பகுத்தறிவுச்சுடரைக்கொளுத்தி அதன் வெளிச்சத்தில் மரணத்தைப்பற்றி ஆராய்ந்து பார்ப்போமாயின் அதனைப்பற்றிய மௌடீகநோக்கங்களெல்லாம் சூரியன்முன்பனிப்படைகளே போல்பறந்தோடும்; அன்றியும் மதப்பித்தலாட்டங்களால் ஏற்பட்ட மரணத்தைப் பற்றிய பயப்பேய் மாய்ந்து, மாந்தர் மரணத்தைத்திரணமாகப் பாவித்து, ஆனந்த வாழ்வெய்துவர் என்பதும் திண்ணம். மாண்டவனுக்குக்கோடித் துணியையும் அறுவகையுண்டியையும் படைத்துப் புதைப்பதைக்காட்டிலும், அவைகளை உயிருடன் வாழும் மக்களுக்குக் கொடுப்பது பலவகையிலும் சிறந்ததாகும். சிற்பவேலைப் பாடுகளமைந்த மசூதிகளையும் ஸ்தூபிகளையும் இவ்வுலக இன்ப துன்பங்களை என்றும் வேண்டாத மாண்ட பிரேதங்களின் மேலமைத்து அழகு பார்ப்பதைவிட ஏழைமக்களுக்கு உதவும்படி சத்திரம் சாவடிகளைக்கட்டுவித்தல் மிகவும் தகுதியான செய்கையாகும்.

இதனால் ஓர் அறிவாளி (Rationalist) என்பான் மேலான இலட்சியங்களில்லாதவனென்றுஎண்ணவேண்டாம். அவனது இலட்சியங்களெல்லால் நமது கண்முன் உயிருடன் நடமாடும் மக்களை மேலோங்கச் செய்வதிலேயே செலுத்தப்படுகின்றன. ஏதோ மாண்டவர்களின் ஆத்ம சொரூபங்கள் [Spirits] என்பனவற்றைக்கரை சேர்ப்பதில் இவன் தனது இலக்ஷியங்களைச்செலுத்துவதில்லை. இந்தஒரே காரணத்தினால்தான் அவ்வித அறிவாளிகளே தமது இலக்ஷியத்தை திருமாணித்துக் காட்டமுடியும் என்பதும், அவர்களே மக்களுடையமுன்னேற்றத்தையும் இன்பத்தையும் மேலோங்கச் செய்வரென்பதும் உண்மையாக ஒப்புக்கொள்ளக்கூடியதாகும்.

[9-ம் பக்கத்தொடர்ச்சி]

படித்துக்கொண்டிருக்கப் பாடினாரேயொழிய செயலளவில்கொண்டுவரப் பாடவில்லை என்பார்கள். ஆகவே இத்தகைய மாக்களுடன் நியாயமாக விவாதித்து அவர்கள் சம்மதத்தைப் பெறுவதென்பது முடியாத காரியம்.

மற்றும், ஆதிதிராவிடர்களுக்காக குருவாயூரில் கேளப்பன் போன்றூர் பட்டினி கிடக்கவும் சத்தியாக்கிரகம் செய்யவும் வேண்டிய அவசியமே கிடையாது. காந்தியாரை பார்த்து ஏனைய மக்கள் அவ்வாறு செய்வது பெருந்தவறாகும். காந்தியின் ஆறுநாள பட்டினியால் அகில இந்தியப் பிரச்சினையாகிய பொதுத்தொகுதி பெறப்பட்டதும், குருவாயூர் கேளப்பர் பத்து நாட்களுக்கு மேற்பட்ட கொடும் பட்டினியால் ஒரு கோயிலுங்கூட திறக்கப்படாமல் போனதுமே, பட்டினி யார் கிடந்தாலும் காரியத்தை முடித்துக்கொள்ளலாம் என்னும் எண்ணம் தவறு என்று விளக்கியிருக்கிறதல்லவா?

இப்பொழுது ஆதிதிராவிடர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவமே கூடிய சீக்கிரத்தில் அவர்கள் தங்கள் உரிமைகளைத் தாங்களே இந்துக்களிடமிருந்து வலியப் பிடுங்கிக் கொள்ளவுந் தகுந்த சக்தியை அளிக்கத்தக்கதாகும். ஆனால் அவ்வாறு அவர்கள் செய்வதற்கு முன்னர் இந்துக்களே இத்தகைய நற்காரியத்தைச்செய்து விடுதல் நலமுடையதாகும். இவ்வாறு செய்வதால் இருவகுப்பினர் மனத்திலும் நன்னம்பிக்கையும் நேசமும் பிறக்க ஏதுவாகும். இல்லையேல் தீராப்பகையும் தீவிர வெறுப்புந்தான் ஏற்படும். கடைசியில் பூனா ஒப்பந்தப்படி சில ஆண்டுகளில் மீண்டும் ஆதிதிராவிடர்கள் தனித்தொகுதியையே கேட்கவும் நேரிடும். ஆகையால் சாதி இந்துக்கள்இவ்விஷயத்தில் சாக்கிரதையாய் நடந்துகொள்ளவேண்டும். இல்லையேல் அவர்கள் சமூகத்திற்கு இழுக்கு ஏற்படுவதன்னியில் பலக்குறைவும் நேரிடும்.

டாக்டர் சுப்பராயன் அவர்கள் சென்னை சட்டசபையில் இது விஷயமாய் ஒரு பிரேரபிணை கொண்டுவரப் போவதாகவும் அதை மறுத்தும் ஒரு சிலர் சேலம் ஜில்லாவில் ஒரு பிரசுரம் விடுத்துள்ளார். இப்பிரசுரம் அவர்களது சாதித்திமிரையும் மடமையுமே வெளிப்படுத்துகின்றது. இதைப்பற்றி உண்மை இந்தியன் ஒவ்வொருவனும் வெட்கப்பட வேண்டியதே. இம்மறுப்பை சேலம்ஜில்லா வாசிகள் அனைவரும் அங்கீகரிக்கவில்லை என்பதற்கு அறிகுறி அதில் ஒரு சிலரே கையொப்பமிட்டிருப்பதாகும். ஆகவே இது விஷயத்தில் டாக்டர் சுப்பராயன் அவர்களைப் பாராட்டுதல் அவசியம்.

கடைசியாக கோவில் நுழைவினால் மட்டும் தீண்டாமை ஒழிந்துவிடுமா? ஒருக்காலும் ஒழியாது. ஆனால் இது ஒருபெரிய ஆரம்பமாகும். அதோடு ஆதிதிராவிடர்கள் கோவிலுள் அனுமதிக்கப்பட்டால் அதனால் சாதிவித்தியாசத்தின் அஸ்திவாரம் அடியோடு பிடுங்கி எறியப்பட்டுவிடும். மதத்தின் பேரால் வழங்கும் சாதியாகிய மரத்தின் தீண்டாமையாகிய வேர் இந்து கோவிலுக்குள் தான் பதிந்து பல நூற்றாண்டுகளாய் கிடக்கின்றது. ஆகவே இவ்வேரைக்களைந்து சாதிமரத்தை வெட்டவேண்டின் கோவிலுக்குள் தான் நாம் நுழையவேண்டியிருக்கின்றது. அவ்வாறு நுழைந்தவுடன், சாதிவித்தியாசத்தின் பக்கவேர்களாகிய சமூக வித்தியாசங்கள் வெகு சுலபமாய் எடுபட்டுவிடும். கலப்பு மணம் உணவு முதலியன தானே உண்டாகும். ரயில்வேக்களும், சினிமா டிராமா கொட்டகைகளும், மோட்டார்வண்டிகளும் சாதிப்பேயைத்துறத்துவதில் தங்கள் தங்கள் வேலையை இதுவரையும் செய்து வந்திருக்கின்றன. இனியும் தீவிரமாகச் செய்யும். சாதி இந்துக்கள் தங்கள் வலியராய கருங்கல் கோட்டைக்கோயில்களைப் பறிகொடுத்த பின் தாங்கள் ஒழிப்பதற்கு வேறிடமின்றி "சமதர்மம்" "சகோதரத்துவம்', என்னும் அழகிய, உயரிய, மேன்மை பொருந்திய மெய்க்கோவிலுக்குள் நுழைந்து மக்கள் எனப்பிறந்த அனைவரும் மிக்க அன்புடன் கலந்து அளவளாவிவாழ ஏதுவாகும். இருள் மிகச்சூழ்ந்து எலிபறித்த குழியும், வௌவால் புளுக்கையும் எங்கும் நாற்றம் வீசி, பஞ்சமா பாதகனும் பக்திமிகுந்த குருக்களாய் மந்திரஞ்சொல்லி மக்களை ஏமாற்றிக்காசு பறித்து மாசுபடிந்துவரும் கருங்கற்கோட்டையாகிய கோவிலுக்குள் ஆதிதிராவிடர்கள் இன்று நுழைந்தால் உடனே அதன்வழியாக அவர்கள் சுதந்தரத்தென்றலும் சுயேச்சை மணமும் இதந்தர வீசி இன்பம் பயக்க சமத்துவ பளிங்கால் சரிவர அமைத்த சகோதரத்துவம் என்னும் நிகரற்ற கோவிலுட்சென்று "சம உரிமை" என்னும்சர்க்கரையுணவை சந்தோஷமிக உண்டு களிக்க ஏதுவாகும்.

---


## டாக்டர் சிங்காரம் அவர்களின்
## கெந்தக நெய்.

இம்மருந்தால் குணமாகும் நோய்கள்.

செம்மேகம், கருமேகம், மேகஊரல், தடிப்புடன் கூடிய மேகப்படைகள், கண்டமாலை, விப்புருதி கட்டிகள், வலி குன்மம், கிரந்தி, குஷ்டம், லிங்கப்புற்று, சூலை, கணுச்சூலை, பாரிச வாய்வு, முடக்கு வாய்வு, சர்மத்தில் ஸ்பரிச உணர்ச்சியில்லாதிருத்தல், கை கால் பிடிப்பு, மதமதப்பு, திமிர்வாய்வு, புண், புரைகள் ஆராத ரணங்கள், நரம்பு பிடிப்பு முதலிய பலவித கடின நோய்களை குணம்செய்யும். இரத்தத்திலுள்ள எவ்வித துர் நீரையும் போக்கி சரீரத்திற்கு நல்ல தேஜஸைக் கொடுக்கும். பத்தியமில்லை.

60 வேளை மருந்து விலை ரூ. 10—0—0
20 ,, ,, 4—0—0

வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம்.

மலாய்நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவும்.

முழுவிலாசம் தெரிவிப்பவர்களுக்கு கேட்லாக் இனமாய் அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அன் கோ.,
சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

## கோயமுத்தூர்

### வி. அருணாசலம் இலவச இரவு பாடசாலை.

தோழர் அ. பொன்னம்பலம் அவர்களால் பார்வையிடப் பெற்றது.

நேற்றுமாலை 7-30 மணிக்கு கோவை சுயமரியாதை வாலிபர் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் ஷை இரவுப்பாடசாலையைத் தோழர் அ. பொன்னம்பலம்அவர்கள் பார்வையிட்டார். ஆசிரியர் அவர்களால்நன்கு வரவேற்கப்பட்டு பள்ளி நடைமுறைகளைக் கவனித்தார். 22 பிள்ளைகள் ஆண்களும், பெண்களுமாக வந்திருந்தனர். அதில் 16 பேர் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச்சேர்ந்தவர்கள். தோழர் என் கே. கஸ்தூரி அவர்கள் சுயமரியாதைக்கீதங்கள் பாட பிள்ளைகளும் உடன்பாடினார்கள். தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் பள்ளியையும் பள்ளி நிர்வாகஸ்தர்களையும் பாராட்டி விசிட்டர்ஸ் புக்கில் (Visitors Book) எழுதினார்கள். பின்னர் காரியதரிசியவர்களால் வந்தனோபசாரங்கூறப்பட்டு தலைவர் தோழர் வ. ஆர். சிவானந்தம் அவர்கள் இல்லத்திற்கேகினார்கள். (ஒரு நிருபர்)

### சுயமரியாதை

### சாரணர் சங்கத்திறப்புவிழா.

கோயமுத்தூர் ஜில்லா குரிச்சி கிராமத்தில் சுயமரியாதை சாரணர் சங்கம் 16—10—32ந்தேதி திரு. சி. எஸ். ரத்தினசபாபதி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தலைவர் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றியும் சாரணர் சங்க அவசியத்தைப் பற்றியும் பேசியபின் சிலஅன்பர்கள் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றியும் அதன் கொள்கைகளைப்பற்றியும் பேசினார்கள். சாரணர்களுக்கு திருமதி ரங்கம்மாள் வெள்ளிமெடல்கள் பரிசளித்தார். தலைவர் சங்கத்திற்கு 10 ரூபாய் நன்கொடை அளித்தார் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

### விருதுநகர் முனிசிபல் சபை.

சாப்பாட்டு விடுதியில் தனிஇடம் இல்லை.

15—10—32 காலை 11-30 மணிக்கு இராஜா கட்டிடத்தில் விருதுநகர் நகரசபையின் ஒரு சாதாரண கூட்டம் தலைவர் திரு இராமசாமி அவர்களின் தலைமையில் கூடியது.

மகாத்மாவின்உண்ணாவிரதத்தினால் ஏற்பட்ட கிளர்ச்சியின் பயனாக காபி கிளப்பு களிலும், சாப்பாட்டு விடுதிகளிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனி இடங்கள் ஒதுக்கி வைக்கக் கூடாதென்றும், அங்ஙனம் வைப்பதானால் அவைகளுக்கு லைசன்சு கொடுக்கக்கூடாதென்றும் கோரி பொதுமக்கள் மனு அனுப்பிஇருந்தார்கள். அந்த மனுவின் பேரில் முனிசிபாலிட்டியார் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றினார்கள்.

1. ஜாதி வகுப்புபேதம் பாராமல் எல்லோரையும் காபிகிளப்புக்குக் அனுமதிக்கப்படவேண்டும்.

2. யாதொரு குறிப்பிட்ட ஜாதியார்கள் அல்லது வகுப்பார்களுக்காக யாதொரு பிரத்யேகமான இடமும் ஒதுக்கி வைக்கக்கூடாது.

என ஒரு நிருபர் எழுதுகிறார்.

### ஆதி திராவிட எலிமெண்டரி பாடசாலை வருடபூர்த்திவிழா.

1—10—32 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு மேலப்பாலையம் கணேசபுரம் ஆதிதிராவிடர் பாடசாலை வருடபூர்த்திவிழா திரு. ப. சி. தங்கவேல் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்திருந்தனர். திருநெல்வேலி ரேஞ்சு கல்வி இலாகா அதிகாரி உயர் திரு. வி. ரெகுநாதன் பி. ஏ. எல். டி. அவர்கள் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. திருவாளர்கள் தலைவர்ப. சி. தங்கவேல் அவர்களாலும் ஷை ஸ்கூல் மானேஜர் அ. அருணாசலம், மா. பெ. க. அழகர்சாமி ப. ஆறுமுகம் ஆகியவர்களால் இன்ஸ்பெக்டரின் அரியசெய்கைகளைப்பற்றிபுகழ்ந்துபேசப்பட்டது இவிடமிருந்து ஸ்தலமாறிப் போகும் கல்வி இலாகா அதிகாரி திரு. வி. ரெகுநாதன் பி. ஏ. எல். டி. அவர்களுக்கு புஷ்ப ஆரஞ்சூட்டி பிரிவு உபசாரப் பத்திரம் ஒன்று வாசித்துக் கொடுக்கப்பட்டது. இறுதியில் ஷை பாடசாலைஹெட்மாஸ்டர் திரு. ப. சி. முத்தையா அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு மாணவர்களால் சுயமரியாதை கீதமும் மாணவிகளால் ராஜவாழ்த்தும் பாடப்பட்ட பின்னர் கூட்டம் இனிது முடிந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

### கோவை சுயமரியாதை வாலிபர் சங்கம்.

16—10—32 தேதி ஞாயிற்றுக் கிழமை மலை 6-15 மணிக்கு ஷைசங்கக் கூட்டமொன்று சங்க ஆதரிப்பாளர் தோழர் வெ. வெரிவாடயா அவர்கள் தலைமையில் கூடியது. அது போது தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் தஞ்சை மகாநாட்டு நடைமுறைகளைத்தெள்ளிதின் விளக்கி சொற்பொழிவாற்றினர். மகாநாட்டைக் கூடவிடாது குழப்பத்தில் முடித்ததற்கு ஆந்திரர்கள் செய்தஅட்டூழியங்களைப்பற்றிப் பேசியதோடு அவர்களின் இத்தகைய செய்கைக்கு கதிக்தலைவர் அவர்களே பொறுப்பாளியாயிருந்ததற்கு தாம் பெரிதும் வருந்துவதாகவும் குறிப்பிட்டார். பின்னர் தலைவர் அவர்கள் பேசுகையில் தலைவருக்கு எத்தகைய பதவியும் எதிர்காலத்திலாகிலும் இருக்கக் கூடாதென்றும் அப்பொழுது தான் அவர் சுயநலமற்று பொது நலங் கருதித்தொண்டாற்ற முடியுமென்றும் விரைவில் அத்தகைய தலைவர் ஒருவரைப்பெற்று நம்மியக்கம் வெற்றி பெறவேண்டும் என விரும்புவதாகவும் இத்துறையில் இன்று நீதிக்கட்சியின் ஆதிசோக்கத்தை முழுதும் செயலிலாற்ற முனைந்து உழைக்கும் இயக்கம் சுயமரியாதை இயக்கம் ஒன்றேஎன்றும் ஆதலின் இவ்வியக்கமும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். பின்னர் உடல்நலக்குறைவால் அவர் தம்பதவியைத் தோழர் வ. ஆர் சிவானந்தம் அவர்கள் ஏற்று நடத்த அனுமதியளித்துச்சென்றபின் அவர் தலைமையில் சில முக்கியமான தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறிற்று.

பின்னர் தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் 10-45 மணிக்கு இனிது முடிந்தது.

(ஒரு நிருபர்)

### மதுரையில் குடி அரசு கிடைக்குமிடம்.

எம். முத்துசாமி
ஜெனரல் நியூஸ் ஏஜன்சி
கீழவெளிவீதி
மதுரை.

---

தாதரென்ற நிலைமைமாறி ஆண்களோடு பெண்களும் சரி, நிகர், சமானமாக வாழ்வர் இந்த நாட்டிலே!

---

## சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர், குடி அரசு, ஈரோடு.

## திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

1928-ஞு O. S. No. 1271
1932-ஞு E. P. R. No. 1380.

பல்லடத்திலிருக்கும் நாட்டுக்கோட்டை குள. கு. ராம. ராமநாதன் செட்டியார்—வாதி.

பல்லடம் தாலூகா தொட்டம்பட்டியிலிருக்கும் சுந்திரம் செட்டியார் மகன் ஆறுமுகம் செட்டியார்—2-ம் பிரதிவாதி.

இதனால் ஷை 2-ம் பிரதிவாதிக்குத் தெரிவிப்பதாவது,

ஷை வாதியானவர் ஷை நெம்பரில் பெற்றிருக்கும் டிக்ரிக்கடனுக்காக ஷை 2-ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட ஸ்தாவர சொத்துக்களை ஜப்தி செய்து ஏலத்துக்கு கேட்கப்பட்டு ஏல இஸ்தியார் நிஷ்கிரிஷை செய்வதற்காக இக்கோர்ட்டில் 1932ஞு நவம்பர்மீ 4-ந் தேதியில் வாய்தா போடப்பட்டிருக்கிறது. ஷை வாய்தாவில் 2-ம் பிரதிவாதி நேரிலோ அல்லது ஒரு வக்கீல் மூலமாகவோ ஆஜராகி தனக்கு உள்ள ஆட்சேபணையைத் தெரிவித்துக்கொள்ளாதபக்ஷத்தில் ஒரு கட்சியாய் உத்திரவு ஏற்படும் என்கிற விபரம் அறியவும்.

S. ராஜம் அய்யர்,
வாதியின் கவுன்சில்.
திருப்பூர், 18-10-32.

---

## திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

1932-ஞு S. C. No. 618.

பள. விர. சுப்பரமணியன் செட்டியார்—வாதி.

அவனாசி தாலூகா வேலாயுதம்பாளையம் கிராமம் கருணைபாளையத்திலிருக்கும் அவனாசிக்கவுண்டன் மகன் ரங்கப்பகவுண்டன்—2-ம் பிரதிவாதி.

ஷை பிரதிவாதிக்கு,

ஷை நெம்பரில் வாதி என்பவர் பிராம்சரி நோட்டுப்படிக்கு ரூ. 200-ம் பின்வட்டியும் வியாஜ்ய செலவும் கிடைக்கவேணுமாய் தாவா செய்திருக்கிறார். அது விசாரணைக்காக நாளது 1932ஞு அக்டோபர்மீ 26ம் தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறது. மேற்படி 26-10-32ம் தேதி பகல் 10 மணிக்கே ஷை கோர்ட்டில் ஆஜராகி உமக்குள்ள ஆக்ஷேபணையைத்தெரிவித்துக் கொள்ளவேண்டியது. இல்லாதவரையில் ஷை தேதியில் ஒருகக்ஷியாக தீர்மானிக்கப்படும்.

K. R. வரதராஜ அய்யங்கார்,
வாதி வக்கீல்.
திருப்பூர், 16-10-32.

(5-ம்பக்கத் தொடர்ச்சி)

லும் கூட அவைகளை சீர்திருத்த அம்மதப்பெரியார்களுக்கே தைரிய மற்று அக்கொள்கைகளுக்குப் பல தத்துவ அர்த்தங்கள் கொண்டோ அல்லது தம கல்வி அறிவால் அக்கொள்கையைப்புரட்டி அதற்கு பொருள் அப்படி, இதற்குப்பொருள் இப்படி, அவர் செய்த அர்த்தம் தவறு, அவர்கொண்ட பொருள் வேறு என்றெல்லாம் உலகை ஏமாற்றி அச்சமயத்தில் கூறிய கொள்கைகளைமாற்றி தங்கொள்கைக்கு திருப்பமுயன்று அதில் முதலைக்குணம் பூண்ட மூட மதவெறிகொண்ட மக்களால் சொல்லுதற்கடங்காத துன்பம் அனுபவித்தும் தம் கருத்து நிறைவேருது அளவிடற்கடங்காத் துன்பங்களையெய்தி ஒழிந்துபோனதையும், இன்னும் அனுபவித்து வருவதையும் மனச்சாட்சியின்படி வாழும் மக்கள் எவரும்மறுத்துக்கூருர், எனவே மதம் என்ற வார்த்தையின் பேரிலோ அல்லது மதத்தின் பேரிலோ சுயமரியாதைக்காரர்களுக்கு பகையோ, பயமோ, இல்லையென்றும் பகுத்தறிவிற்குப் பொருந்தியதும் மக்களுக்கு நன்மை பயப்பதுமான கொள்கையை 'மதம்' என்றழைத்தாலும் சரி, சங்கமென்றழைத்தாலும் சரி அவைகளை தன்மதிப்பியக்கத்தார் ஒருபொழுது மறுக்கவில்லை, மறுக்கவும் மாட்டார்கள். இதையே தோழர் ஈ. வெ. இராமசாமியவர்கள் மேற்கண்ட சாத்தான் குளமிலாதெ ஷரிப் விழாவில் தெளிவுபடுத்தியிருக்கின்ருர்கள். எனவே சு. ம. இயக்கத்தீர்மானமாகிய மதக்கண்டன விஷயமாய் நம் தோழர் குலம் அவர்களுக்கும், ஏனைய நண்பர்களுக்கும் எம்மிடம் கடிதம் மூலமாய் இதை வினவும் பல தா. இ. அபிமானிகளுக்கும் கொண்ட ஐயப்பாடுகள் ஒருவாறு நீங்குமென்று நம்புகின்றேன். இன்னும் 'மதமொழிப்பு' என்ற வார்த்தையைக்கேட்டவுடன் நடுங்கி பலவாறு கூறும் தோழர்கள் அமெரிக்காவில் இங்கர்சால் என்னும் அறிஞர் 'மதம் என்பது என்ன?' என்று செய்த பிரசங்கமும் மற்றும் பல நுட்பமான வியாசங்களும் ஆங்கிலத்தில் புத்தக ரூபமாய் இருக்கிறது. வேண்டுவோர் ஒவ்வொரு முக்கிய ரயில்வே ஸ்டேஷன்களிலுமுள்ள ஹிக்கின் பாத்தாமஸ் புத்தகசாலையிலும் (Robert G. Ingersalls works 3 vol விலை ரூ. 2-3-0) கிடைக்கும் வாங்கி வாசித்து உண்மையையுணர்ந்துகொள்வார்களாக,

இறுதியாக யான் விரும்புவது என்னவென்ருல் பகுத்தறிவிற்கும் மக்களின் முற்போக்கிற்கும் தடையாயிருந்து மனிதத்தன்மையை வேருடன் கல்வியெறியும் மதத்தை யொழித்து விடவேண்டும் என்று கருத்துப்பொதிந்த விருதுநகர் சுயமரியாதை மகாநாட்டின் தீர்மானத்தை சிறிது அவசரபுத்தியின்றி ஆலோசித்து மனிதனை மனிதனுக்காது மனிதனை மிருகத்திற்கும் தாழ்ந்த நிலைக்கு இட்டுச் செல்லும்மதம் இஸ்லாமல்ல—பிற எந்த மதமானுலும் சரி ஒழித்துவிடவேண்டுமென்றும், அஃதன்றி மனிதனை மனிதனுக்கும் பகுத்தறிவு மதம் ஹிந்து மதமானுலும் சரி, இஸ்லாம் மதம் ஆனுலும், கிறிஸ்துமதமானுலும் அவைகளுக்கும் நமக்கும் யாதொரு தகாறுமில்லையென்ற கொள்கைக்கு வர எவரே மறுப்பர்? 'முதுகில் புண்ணிருந்தாலன்ருே குனியப்பயம்' என்ற பழமொழிக்கேற்ப குற்றமில்லாத பரிசுத்த பகுத்தறிவு சமயத்தைக் காக்க எவரும் முன்வர வேண்டாம் என்றும் அத்தகைய சமயத்தை யொழிக்க எந்த பைத்தியக்காரனும் துணியான் என்பது நிச்சயம்.

மதத்தைப்பற்றி தோழர் இங்கர்சால் கூறிய பொன் மொழிகள்:—

பணக்காரர்கள் ஏழைகளிலிருந்து மதத்தால் பிரிக்கப்படுகின்ருர்கள். நான் மதத்திற்கு விரோதமாய் ஒன்றுஞ்சொல்லவில்லை: நமது விஷயம் அதுவல்ல. எந்தமதம் வாரத்தில் ஒரு நாளாவது அல்லது வருஷத்தில் ஒருமணியாவது ஏழைகளையும் பணக்காரர்களையும் ஒன்று சேர்க்கிறதோ அந்த மதத்தை நான் நன்கு மதிப்பேன்.

மதம் பரீட்சிக்கப்பட்டது, ஆனுல் எல்லாதேசங்களிலும் எல்லாக்காலங்களிலும் பிசகியது மதம். அது மனிதர்களை இரக்கமுள்ளவர்களாகச் செய்யவில்லை. விசாரணைச்சங்கத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள் அடிமைத்தனத்தை மதம் என்ன செய்தது? மதம் எப்பொழுதும் கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் சிந்தனைக்கும் விரோதியாயிருந்து வருகிறது. ஒருபொழுதும் மதம் மனிதர்களை சுயேச்சையுள்ளவர்களாகச் செய்யவில்லை. மதம் மனிதர்களை சன்மார்க்கமுள்ளவர்களாக, தாளாண்மையுள்ளவர்களாக யோக்கியமானவர்களாகச் செய்யவில்லை.

உலகத்தின் கண்ணுள்ள உண்மையை தேடுவாய், அறிவைவிருத்தி செய்வாய், ஏழைகளைக்காப்பாற்றுவாய், உண்மையைக்காப்பாற்றுவாய் இதுவே உண்மை மதம், இதுவே நியாயமான ஆராதனையாகும்.

மதம் என்பது என்ன? பயம் நிறைந்ததே மதம்.

அடிமைக்கு அடிப்படை மதம்.

பொய்யும் பித்தலாட்டமும் இன்றேல் மதமில்லை.

---

## நாகை சுயமரியாதைச்சங்கம்.

### மெம்பர்கள் கூட்டம்.

16—10—32-ந்தேதி மாலை 6-மணிக்கு சங்க மெம்பர்கள் கூட்டமொன்று சங்கத்தலைவர் தோழர் ஆர். வி. கோபால் தலைமையில் கூடியது. தோழர் குஞ்சு "சுயமரியாதைக் கீதம்" பாடியபின் தலைவர் முகவுரையாக தஞ்சை பார்ப்பனரல்லாத மகாநாடு, ஆதிதிராவிடர் உரிமை, நாகை தாலூக்கா மகாநாடு, தலைவர்கள் வருகை முதலிய விஷயங்களைப் பற்றி பேசியதைப்பின்பற்றி தோழர்கள் எம். ஆர். பதி, ஏ. கோவிந்தன், வி. சாமிநாதன், என். சிவஞானம், எம். கோவிந்தராஜு, கே. முருகேசன் முதலியவர்கள் விரிவாக பேசியபின் சில முக்கிய தீர்மானங்கள் முறையே பிரேரேபித்து ஆமோதிக்கப்பட்டபின் ஏகமனதாக நிறைவேறியது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## விளாத்தி குளத்தில் தீண்டாமை ஒழிந்தது.

30—9—32 ல் இவ்வூர் கிராம பஞ்சாயத்து போர்டு கூட்டம் போர்டு தலைவர் திரு. பி. போத்தியப்ப பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் நிறைவேறிய முக்கியமான தீர்மானமாவது:-

"ஆதிதிராவிடர்கள் சதாகாலமும் ஊற்றுத்தோண்டி எடுக்கும் குடி தண்ணீரில் மலஜலங்கழித்து ஆபாசப்படுத்துவதால் அவர்களுக்கு வேறு குடி தண்ணீர் கிணறுகள் இல்லாததாலும், மீனுக்ஷிசுந்தரேஸ்வரர் கோவிலுக்குப் பக்கத்திலுள்ள குடித்தண்ணீர் கிணறுகளிலும் தாலூக்கா போர்டில் கட்டிய கிணறு பஞ்சாயத்து யூனியன் லிமிட்டைச்சேர்ந்த படியால் இவ்விரண்டு கிணறுகளிலும் தண்ணீர் எடுக்க அனுமதிக்க வேண்டும்" என்று ஆதிதிராவிடர்கள் எழுதிய மனுவை தலைவர் வாசித்தார். அது ஏக மனதாக நிறைவேறியது. ஷை போர்டு தலைவர் நிறைவேறிய தீர்மானத்தைப்பொது ஜனங்களுக்கு விளம்பரப்படுத்தி யாராவது தடுத்தாலும், நிர்ப்பந்தப்படுத்தினுலும் ஷையார்கள்மீது ஷை போர்டு தலைவரே வழக்கு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உத்திரவிட்டார். ஆதிதிராவிடர்கள் போர்டு தீர்மானிக்கப்பட்ட கிணறுகளில் தண்ணீர் எடுத்து வருகிருர்கள் என ஒரு நிருபர் எழுதுகிருர்.

---


**ANANGARANGABATIKA.**

*(Enjoyment Pill)*

DIVINE REMEDY FOR SEXUAL DISABILITY and IMPOTENCY-Restore youthful Retaintive & Erective Capacity ENSURE PLEASURE FOR ONE HOUR. Even an OLD one can fully enjoy the HEAVENLY BLISS derived From Sexual intercourse.


Complete satisfaction guarenteed. Money refunded in case of tailure. Price for 60 Pills Rs. 8. Sample phial of 20 Pills Rs. 3 only. Please write in ENGLISH.

**"SAILASRAM" (K)**
*Chandanpur,*
**(Khulna) E. B. R.**

---

## ரூ. 2-14-0 க்கு 6-பாட்டல்

ஓட்டோ வாங்குபவர்களுக்கு 3-கடியாரங்களும், 1-பவுண்டன் பேனுவும், 94-சாமான்களும் இனும்.



நமது புகழ்பெற்ற "ஓட்டோ மோட்டியா" ஒரே தடவையில் 6 பாட்டல் வாங்குபவர்களுக்கு 3 கடியாரங்களும், 1 ரயில்வேடைம்டம்மி பாக்கெட் கடிகாரமும், 5 வருஷம் உத்திரவாதமுள்ள நல்ல யந்திரங்களுள்ள 'பி' டைம்பீஸ் 1-ம், கோல்ட்கில்ட் டம்மி ரிஸ்ட் வாட்ச் 1-ம், அழகான 14Kt தங்க நிப் பவுண்டன் பேனு 1-ம், மோதிரம் 1-ம், 94 படங்களும் இனும் கொடுக்கப்படும்.

பாக்கிங் தபால் செலவு வேறு.

The Indian National Stores,
17. Joy mitter St., Calcutta.

---

### மலையாளம் சில்க் & சேலைகள்.

2½ வீதி 5 நீளம் பட்டு 1-க்கு ரூ. 1—8—0
ஷை கம்பிக்கரை டஜன் 1-க்கு ரூ. 15—0—0
3-வீதி 8-நீளம் வேஷ்டி 1-க்கு ரூ. 3—8—0
2½ × 12 நீளம் லெட்ரோஸ் சேலை 1-க்கு ரூ. 3—8—0
ஷை 14 நீளம் சேலை 1-க்கு ரூ. 4—8—0
இதில் எல்லா கலர்களில் கிடைக்கும்.

தீபாவளி பண்டிகைக்கு ஸ்பேஷலாய் தயார் செய்கிருேம்.

S. K. R. வீவிங்பாக்டரி, கோட்டார், திருவிதாங்கூர்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பஞ்சமாபாதகங்களைச் செய்தால் கடவுள்,பாம்பு,புயல்காற்று,கொள்ளை நோய் முதலியவற்றை ஏவித்தண்டிப் பார் என்று கூறப்பட்டது.—சாதாரணமாகப் பழந்தமிழர்கள் மைதான வெளியில் மரத்தடியில் கும்பல்கூடி கடவுளை வணங்குவது வணக்கமாதலின் கடவுள் அங்குதானிருப்பார் என்ற எண்ணம் உண்டானால் பிற இடங்களில் பாதகச்செயல் செய்ய மனிதன் அஞ்சமாட்டானென்ற எண்ணம் உண்டாயிற்று.

ஆகவே, "கடவுள் எங்குமிருக்கிறார்;" எந்த இடத்தில் பாதகச்செயல் செய்தாலும் அவர் பார்த்துக்கொள்வார்" என்று கூறப்பட்டது. பின்னும் "அந்தக்கடவுள் என்பவர் எங்கிருப்பினும் அவனுக்குத்தெரியாமல் செய்துவிடலாம்" என்ற எண்ணம் மனிதனுக்கு ஏற்படவே "கடவுள் எல்லா இடங்களிலும் இருக்கிறார், ஆனால் அவர் யார் கண்ணிற்கும் தென்படமாட்டார்." என்றும் "அவர் எல்லாம் வல்லவர்," என்றும் கற்பனை செய்யப்பட்டது.

எனவே, கடைசியில் "அவர் ஒருவனுடைய அறிவுக்கும்அகப்படமாட்டார், எல்லோருடைய உள்ளத்தையும் கடந்தவர். அதனால் அந்த மிகப்பெரிய சக்தியுடையவர் பெயர் கடவுள் [வுள்-உள்ளத்தை, கட-கடந்தவர்] என்று கற்பிக்கப்பட்டது. இந்த விபரங்களால் ஆதியில் மனிதர்கள் தங்கள் சக்திக்கு மீறியவற்றையும், காரணம் அறியாதவற்றையும், தெய்வசக்தி என்றும் நம்பி, பின்னர் பஞ்சமாபாதகங்களை மனிதர்கள் செய்யாதிருப்பதற்காக "எங்கும் உள்ளவராயும் எவர் கண்களுக்கும் கருத்திற்கும் எட்டாதவராயும், எல்லாம் வல்லவராயும் கடவுள் இருக்கிறார். எனவே, எந்த இடத்தில், எந்தநேரத்தில் எவ்வளவு இரகசியமாகத்தகாத வற்றைச் செய்தாலும் அந்தக்கடவுள் கண்டு தண்டிப்பார்" என்ற கற்பனை உண்டுபண்ணப்பட்டது. மக்களும் அதை நம்பினார்கள். உண்மையில் இதுவே "கடவுள்" சிருஷ்டி செய்விக்கப்பட்ட மார்க்கமாகும்.

பார்ப்பன விஷம்.

அந்தக்கட்டுப்பாட்டின்படி சிலகாலம் மக்கள் அடங்கி நடந்து வந்தார்கள். பின்னர் இந்நாட்டிற்குள் நுழைந்த ஆரியர்கள், இந்நாட்டினரின் கருத்தையும், தெய்வம், கடவுள் என்றவார்த்தைகளுக்குப் பயப்பட்டு நடக்கும் தன்மையையும் கண்டு, தங்கள் சூட்சியை அவர்களிடை நுழைக்க ஆரம்பித்தார்கள். உருவமற்றவர் என்று நம்பியிருந்த தமிழ் மக்களிடை கடவுளுக்குப்பல உருவங்களும் எங்குமுள்ளவரெனக் கருதப்பட்ட கடவுளுக்கு ஓர் கோவிலும் கற்பிக்கப்பட்டன. இது பார்ப்பனரின் சூட்சியாகும். கடவுளுக்கு உருவம் கிடையாதெனத் தமிழ்மக்கள் கூறியது, எதனாலெனில், இன்னஉருவமுடையவன் தான் கடவுள் என்று குறிப்பிட்டுக் கூறினால் அந்த உருவம் உள்ள ஒன்று இல்லாத இடத்தில் பஞ்சமா பாதகங்களைச் செய்யலாம் என மனிதன் துணிந்து விடக்கூடும். அதற்காகவே, "அவன்" [கடவுள்] அரூபி, எங்கும், எல்லாவற்றிலும் உள்ளவன் என்று பழந்தமிழ்மக்கள் கற்பித்தார்கள்.

ஆனால் பின்னால் வந்த ஆரியர் சிறிது வானசாஸ்திரம் தெரிந்தோராயிருந்தமையின் அதைக்கொண்டு, தமிழ்மக்களை "கிரகணம்" முதலியவற்றைக் காட்டி தங்கள் வார்த்தையை நம்பவைத்து, ஆகாயத்தில் மோட்சமும், நரகமும் இருக்கிறதென்றும், ஆலய வழிபாடு செய்து பூதேவர்களாகிய தங்களுக்கு தான தருமங்களும் செய்தால், சொர்க்கம் கிடைக்குமென்றும், அந்த சொர்க்கத்தில் மனிதன் விரும்பும் பொருள்களான, அழகிய, என்றும் அழியா இளமைபெற்ற பெண்கள், வேண்டும்போது பரமான்னம், பறிமாறக் காமதேனு வேண்டியவற்றை யெல்லாம் தரக்கற்பக விருக்ஷம், சங்கநிதி, பதுமநிதி, முதலியவை இருப்பதுடன், அங்கு (மோட்சத்தில்) என்றும்மாறு இளமையுடனும், நோய், மூப்பு என்பவை யில்லாமலும் நிரந்தரமாக வாழலாமென்றும், தான தருமங்கள் செய்யாதவர்களுக்கு பாம்புகளும், தேள் முதலிய விஷஜந்துக்களும் ஏக இருளும், அக்கினி மயமும், கழுமரங்களும் கொடிய கிங்கிரர்களும் நிறைந்த "நரகம்" கிடைக்கும் என்றும் கூறி நம் தமிழரை ஏமாற்றினர்.

இவ்விதமாகவே இந்நாட்டில் கடவுள்பயமும், சொர்க்கம் நரகம், மறுபிறப்பு, கன்மம், ஆன்மா என்றவார்த்தைகளும் சிருஷ்டிக்கப்பட்டன. "இதோபார் இரண்டு கண்ணன், அதோபார் பூச்சாண்டி" என்று சிறு குழந்தைகளுக்குக் கூறி பயப்படுத்துவது போன்று, மக்களுக்குப் பயங்காட்டுவதற்காகச் சிருஷ்டிக்கப்பட்ட பூச்சாண்டிவார்த்தைகளே கடவுள் கன்மம், மோக்ஷம், நரகம் என்பனவெல்லாம் என்றுணர்க.

இனி, இத்தக்கடவுள், ஆன்மா, மறுபிறவி, சொர்க்கம், நரகம் என்ற இவை சிருஷ்டிக்கப்பட்டபின், மதங்களும், ஜாதிகளும் தோன்றிய விபரமும் பொதுவுடைமை வாழ்வில் இவற்றின் நிலைமை எவ்வாறிருக்குமென்பதையும் அடுத்த கட்டுரையில் விளக்குவாம்.

இதற்கிடையில், கட்குடி, விபசாரம், பொய் களவு, கொலை, என்ற இவ்வைந்து தீச்செயல்களும் நடைபெறுதபடி பார்த்துக்கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட "கடவுள்" என்ற பதம் பொதுவுடைமை உலகில் வேலையற்றதாகிவிடுகிற தென்பதை மட்டும் வைதீகர் உட்பட அனைவரும் கருத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.—பொதுவுடைமை வாழ்வில் இந்த பஞ்சமா பாதகங்களும் நடைபெற மார்க்கமில்லாது போய்விடுகிறதல்லவா? எனவே, எப்போது இந்த பஞ்சமாபாதகங்கள் நடைபெற இடமின்றிவிடுகின்றதோ, அங்கு அவை நடக்காதபடி ஏார்த்துக்கோள் ஏற்படுத்தப்பட்ட "கடவுள்" என்ற பதம் இருக்க இடமேது?


Goshaye office pillss.
கோஷாயி
ஆபீஸ் மாத்திரை



——::——

Dr. T. K. V. Chalam.

சுகானந்த சடலத்தில் தன், பகுத்தறிவை அறிந்து அரிவாகிய அருள் ஜோதியை தெரிசித்து ஆனந்தமனுபவிக்க, அல்லலற்ற சிவ ராஜயோகம் சாதித்து வருவோர்களுக்கும், முடிவுபெற்ற காரியங்களில் மனதை புகுத்தி சதா சஞ்சலம் அனுபவித்துவரும் இல்லற வாசிகளுக்கும் (ஆனந்த அருள் நீருக்கும் அழுகை கண்ணீருக்கும் உள்ள வித்தியாசம்போல்) மூலாக்கினி தகித்து வருவதினால் வாத, பித்த, அய்யமென்னும் சிலேத்துமமும், காலாக்கிரம ஆகார தவக்கத்தினால் முரணாகி, பித்தமதிகரித்த வெட்டையும், வாய்வும், உரவாகியது முதல், மலபந்தம், மலச்சிக்கல், மலம்தீய்தல், அன்னதுவேஷம், அசதி, இடுப்புவலி, மார்நோய், சூலை, கீல் வாய்வு, தாதுநஷ்டம், முதலியவை ஜெனிப்பது மலபந்த முள்ளோர்களின் அனுபவ சித்தி.

மேல்கண்ட உபாதையுள்ளோர்கள் இரவு போஜனத்துக்குப்பின் ஒரு மாத்திரையை ஒரு வெற்றிலையில் வைத்து மடித்து ஒன்றிரண்டாய் மென்று ஜலம்விட்டு கொப்பளித்து (கொப்பளித்து) சாப்பிட்டால் வாய்வுகளை கலைத்து வெளியாக்கி மலம் தாராளமாய் கழிக்கும். ஜூவரம், தைலஸ்னானம் முதலிய யாவும் வழக்கம்போல் நடத்திக்கொள்ளலாம். ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணம் பெறக்கூடிய கோஷாயி ஆபீஸ் மாத்திரை 51 கொண்ட சீசா 1-க்கு 1—10—0; 101 கொண்ட மாத்திரை சீசா 1-க்கு ரூ. 3—0—0 வி. பி. பேக்கிங் சார்ஜ் வேறு. சிலோன், சிங்கப்பூர் முதலிய வெளி நாட்டார்கள் ஆர்டருடன் ரூ. 1—12—0 சேர்த்து மணியார்டர் செய்யவும்.


*Proprietor. T. K.* வெங்கடாசலம்,
(Disciple of Late Dr B. A. Ehiraj Cholera Bairi)
கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.



# ரூபா 3-6-0 க்கு 3-கடிகாரங்களும் இதர வெகுமதிகளும்.

சந்தேகமில்லை, ஆச்சரியமில்லை, உண்மை!

ஆட்டோ சுகந்தராஜ் (இஃது பூத்த புஷ்பங்களின் சத்து) மணம் மிகுந்தது. 3-நாள் உபயோகத்துக்குரிய புட்டி 3-அணா. படைமருந்து 12 மணி நேரத்தில் பரிபூரண குணம் டப்பி 1-க்கு 3 அணா. மேற்படி 2-தினுசுகளும் சேர்ந்தாவது தனித்தனியாவது 18-புட்டிகள் ரூபா 3-6-0 க்கு ஆர்டர் செய்தால், கோல்ட் நிப் பௌண்டன் பேனா 1. 500-கஜம் வரை வெளிச்சம்தரும் பாட்டரி லாம்ப் 1, நூதன கைக்கெடியாரம் 1, பர்மா டைம்பீஸ் அல்லது ரயில்வே மெயில்கார்ட் லீவர் பாக்கெட்வாச் 1-ம், இனாமாக அனுப்பப்படும். ஒவ்வொரு கடிகாரமும் 10 வருடம் உத்தரவாதம். சாமான்கள் பிடித்தமில்லாவிடில் பணம் திருப்பிக்கொடுக்கப்படும். பாக்கிங் தபால் செலவு தனி.



விலாசம்:—Sharma Brothers & Co.,
Post Box No. 2412, Section 90,
Calcutta.

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

தியாகம் முதலிய விரதங்கள் வீணென அறிக.

இந்த வியர்த்த காரியங்களாலும் ஒருவன் பாவம் மன்னிக்கப்படும் என்ற மூடநம்பிக்கையாலும், உலகிற்கு விளைந்த கேட்டுக்கு அளவே இல்லை. செய்யும் துர்ச்செய்கைகளுக்கெல்லாம் பாதிரியாருக்கு தட்சணைகொடுத்தால் மன்னிக்கப்படும் என்ற மூடநம்பிக்கை கிறிஸ்து நாடுகளில் மிகுதியுமுண்டு. இந்த பொய் நம்பிக்கையால் கிறிஸ்து உலகம் அழிந்தேபோய் இருக்கவேண்டும். ஆனால் மெஞ்ஞானம் பாமர மக்களுக்குள் பரவவும் இந்த கொடிய நம்பிக்கை (Atrocious Belief) அந்நாடுகளை விட்டொழிந்து வருகிறது. நமது நாட்டிலும் பிராமணனுக்கு தட்சணை கொடுத்தாலும் சரி, தங்கள் பாவம் ஒழிவதோடு மோட்சமும் கிடைக்குமென்ற மூடநம்பிக்கையை கோடான கோடி இந்துக்கள் நம்பி வருகின்றனர். இந்த நம்பிக்கையொழியவேண்டுமானால் மெஞ்ஞானம் நமது நாட்டில் பரவவேண்டும். இதற்குத் தக்க ஏற்பாடுகள் நமது சுயமரியாதை கூட்டத்தார் செய்தல்வேண்டும். மெஞ்ஞான அறிஞர்களைக்கொண்டு மத கற்பனைகளின் ஆதாரமற்ற விஷயங்களைப் பற்றி பாமரமக்களுக்கு உணர்த்தல் வேண்டும்.

Trans—substantiation என்ற அதாவது இயேசுவின் உடலையும், ரத்தத்தையும், ரொட்டி ஒயின் (Bread and wine) மயமாக சாப்பிடும் மூடபழக்கத்தின் ஆதாரத்தை விசாரிக்கப்புகுவாம். இந்த பழக்கம் ஆதிகால காட்டுமிராண்டிகளிடமிருந்து கொண்டுவந்த பழக்கமாகும். (Eating the Gods) கடவுளரை சாப்பிடும் பழக்கம், நமது காட்டுமிராண்டி மூதாதைகளுக்குள் (Our Savage ancestors) இருந்துவந்த மூடப்பழக்கமாகும்.

கடவுள் மகா வல்லமை புருஷராதலால் அவர் உடலை சாப்பிட்டால் அவரது வல்லமை தங்களுக்கு வருமென்ற பாவனையால் இந்த பழக்கம் காட்டுமிராண்டி முன்னோர்களில் வழங்கி வந்திருக்கவேண்டும். இந்த பழக்கத்தை இன்றைக்கும் மூட மக்களிடம் பலவித பழக்கத்தில் காணலாம். சிங்கத்தின் இருதயத்தை (Lions heart) உண்டால் அதன் வீர்யம் (Courage) உண்டவனுக்கு உண்டாகுமென்ற எண்ணம் ஆதிகாலத்தில் பரவிவந்தது. இன்றைக்கும் புறாவின் இருதயத்தை (Pegeions heart) உண்டவன் கோழையாய் விடுவான் என்ற எண்ணம் அவன் புறாவின் இருதயமுடையவனென்று கூறும் பழமொழியில் (He is pegeion hearted) பார்க்கலாம். தலைக்கு பலம் வேண்டுமானால், ஆட்டு மூளையை உண்ணவேண்டுமெனவும், கால்களுக்குப்பலம் வேண்டுமானால், ஆட்டுக்கால் சூப்பு செய்து உண்ணவேண்டுமெனவும், மூட மக்களிடம் இத்தியாதி பழக்கங்களைப் பார்க்கலாம். அதுபோலவே, கடவுளின் உடலையும், அதன் ரத்தத்தையும் உண்டால், அந்தக்கடவுளின் குணங்கள் வருமென்ற மூட எண்ணம் பலவிடங்களில் பரவியிருந்தது. ஆனால் கடவுளின் இரச்சி கிடைக்காமையால், அதனைப்போன்ற வஸ்துவை சாப்பிடும் வழக்கம் வழங்கி வந்தது. இந்த காட்டுமிராண்டி பழக்கந்தான் [Savage practice] கிறிஸ்துவின் உடலை சாப்பிடும் பாவனையாக, 'Lords' Supper' எனும் "பகவன் விருந்தில்" ரொட்டியும், ஒயினுமாக உட்கொள்ளுவதைப் பார்க்கலாம். இன்றைக்கும், கடவுளை உண்ணுதல் [Eating the Gods] என்ற திருவிழாவில், கடவுளைப் போல், மாவால் பிடித்த பொம்மைகளை, காட்டுமிராண்டிகள் உண்ணும் பழக்கம், அவர்களில் வழக்கமாகவே இருந்து வருகிறது. இந்தப் பழக்கத்தைத் தான் கிறிஸ்துவர்களும், தங்கள் [Lords Supper] என்ற திருவிழாவில் கொண்டாடுகின்றார்கள். இது நமது மூதாதைகளின் மூடப் பழக்கமே. அது இன்றைக்கும் நாகரீக காலத்தில் வழங்கிவருவது ஆச்சரியமல்ல. எத்தனையோ மூட பழக்கங்களில், இதுவுமொன்று.

பிதா, குமாரன், பரிசுத்த ஆவி (Father son and the Holy ghost) என்ற மும்மூர்த்தி சித்தாந்தமும், கிறிஸ்துவுக்குமுன் உலகில் வழங்கி வந்த சித்தாந்தமாகும். கிறிஸ்து சகாப்தத்திற்கு முந்தியே (Pre Christian Era) இந்துக்கள் திருமூர்த்தி சித்தாந்தத்தை சிந்தித்து வந்தனர். இந்தக் கோட்பாடு கிறிஸ்துவர்களுக்கு மாத்திரம் சொந்தமல்ல. இந்த சித்தாந்தத்தை, கிறிஸ்துவர்களுக்கு முன்னிருந்த யூதர்களிடமிருந்து [Jews] பின் வந்த கிறிஸ்துவர்கள், தங்கள் ஆகமத்தில் [Traditicn] சேர்த்துக் கொண்டதாகத் தெரிகிறது. ஆதிகாலந்தொடங்கியே, மூன்றென்னும் எண்ணை (Number Three) விசேடமாகக்கருதப்பட்டு வந்ததை, மும்மூர்த்தி, மும்மணி, மூவுலகம், முத்தமிழ், மூன்று ராஜா [The Three Kings] மூன்று மந்திரி, முதலிய சொற்களால் தெரிந்து கொள்ளலாம். இந்துக்கள், சிருஷ்டி, திதி, சங்காரமெனும் கர்மங்களைக் குறிக்க, பிரமன், விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்திகளை உண்டாக்கியது போல், கிறிஸ்துவர்களும், பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற மூவரைக் கற்பித்துக்கொண்டார்கள். கிறிஸ்துவ தத்துவத்தில் [Christian Philosophy] இம்மூன்றும் ஒன்றென வாதிப்பார்கள் [Triune in one] இவை ஒன்றோ அல்லது மூன்றோ இச்சொற்களில் எதார்த்தம் ஒன்றுமில்லை. இவையாவும் கற்பனைச் சொற்களே. இவைகளை எதார்த்தமென எண்ணுவதும் மூடப்பழக்கமே.

கிறிஸ்து மதத்தின் மூடநம்பிக்கைகளை விசாரித்து உணரவேண்டியவர்கள்.

1. Christianity and Mythology by J. M. Robertson.
2. Pagan Christs by J. M. Robertson.
3. Churches and Modern Thought by Vivian [Watts].
4. Myth Magic and Morals by Conyleeare [Watts]

முதலிய புஸ்தகங்களைப் படிக்க வேண்டும்.

குறிப்பு:-

செய்கோன் (Saigon) நிருபர்களுக்கு விடை.

(Saigon) செய்கோனிலிருந்து சில தோழர்கள் கையொப்பமிட்ட ஒரு ரிஜிஸ்டர் கடிதம் கிடைத்தது அதில் அவர்கள் 'குடி அரசில்' வரைந்துவரும் கடவுள், ஆன்மா, முதலிய மூடநம்பிக்கைகளைப்பற்றிய பிரச்சனைகளைப்படித்துவருவதாகவும், அவர்களுக்குள் எழும் சந்தேகங்கள் நிவர்த்திக்கப்பட்டு வருவதாகவும், இன்னுஞ் சிலர் இன்னும் சந்தேகம் தெளியாமல் வருந்துவதாகவும் அவர்களில் சிலர் 'கடவுளும்பிரபஞ்சமும்' என்ற புத்தகத்தை வாசித்துதெளிவு பெற்று வருவதாகவும், இன்னும் அவ்விஷயங்களைக்குறித்து அறிந்துகொள்ள ஆவல் கொண்டிருப்பதாகவும், 'மனிதனும் பிரபஞ்சமும்' என்று மகுடமிட்டு எழுதிவந்த கட்டுரையை தொடர்ச்சியாக எழுதிவரும்படி அன்புடன் வேண்டிக்கொள்கின்றார்கள்.

இதுவரை நாம் எழுதிவந்த கட்டுரைகளை புஸ்தக ரூபமாகபோட்டால் நமது குடி ஏறிய நாடுகளில் (Colonies) வசிக்கும் நமது தோழர்களுக்கு பேருதவியாக இருக்குமென்று கருதுகின்றோம். முதலாவது 'சுயமரியாதை என்றால் என்ன?' என்று சில கட்டுரைகள் வரைந்துள்ளோம். அதனையும் அச்சிடலாம். 'பொதுவுடமை' யைப்பற்றி சில அத்தியாயங்கள் 'குடி அரசில்' வந்திருக்கின்றன. அதையும் அச்சிடலாம். 'சுயராஜ்யம் யாருக்கு? என்ற இரண்டாம் பாகம் இன்னும் வெளிவராதது விசனிக்கத்தக்கது. "நாம் செய்ய வேண்டிய வேலை என்ன?" என்ற கட்டுரைகள் ஒரு சிறு புத்தகமாக அடங்கும். தற்போது எழுதிவரும் 'விஞ்ஞான முறையும், மூடநம்பிக்கைகளும்' இன்னும் சில அத்தியாயங்களாக வரையவேண்டிவரும். வருகிற "குடி அரசில்" மகமதிய மதத்தின் கோட்பாடுகளைப்பற்றி வரைவோம். அடுத்தாற்போல் பலவேறுதத்துவங்களின் மூடநம்பிக்கைகளைப் பற்றி (Ignorant beliefs in Philosophy) சில அத்தியாயங்கள் எழுதப்படும். அதன் பிறகே மனிதனும் பிரபஞ்சமும் என்ற கட்டுரையை தொடரச்செய்வோம்.

இன்னும் வான நூல் ஒன்று அச்சுக்கு தயாராய் இருக்கின்றது. உயிர் நூல் ஒன்றும் அச்சுக்கு தயாரித்திருக்கின்றோம். இன்னும் பூமி நூலொன்று எழுதப்பட்டு வருகின்றது, புத்த நூலொன்று விஞ்ஞான முறைப்படி எழுதி வந்திருக்கின்றோம் இந்த கை எட்டு பிரதிகளை அச்சிட்டாலே மெஞ்ஞானத்தெளிவு அனேகருக்குண்டாகலாம். இவைகளையெல்லாம் அச்சிட நம்மால் முடியாது பொது ஜனங்களின் உதவிவேண்டும். ஆதலின் நமது தமிழ்நாட்டு சுயமரியாதைத்தோழர்களும், குடி ஏறிய நாட்டின் தோழர்களும் சேர்ந்து ஒரு நிதியைச்சேர்த்து அனுப்புவார்களேயாகில் இந்த புத்தகங்களை அச்சிடலாம். மூடநம்பிக்கையை போக்கவேண்டுமானால், மெஞ்ஞானம் பரவவேண்டுமானால் மெஞ்ஞானத்தைக்குறித்த சிறு புத்தகங்கள் (Science Primers) தயாரித்தல் வேணடும். மகாநாடுகளைக்கூட்டி பிரசங்கங்கள் செய்வது மாத்திரம்போதா (Literature) அதாவது இலக்கிய நூல்கள் நமது இயக்கத்திற்கு அனுகூலமாக தயாரிக்க வேண்டும். ஒரு இயக்கத்தின் முன்னேற்றத்தைக் கருதவேண்டுமானால் அந்த இயக்கத்திற்குறிய இலக்கிய நூல்கள் வெளியிடல்வேண்டும்.

குடி அரசு பிரசுரங்கள் சிலவற்றை படித்துவருகின்றோம். அவைகள் விற்கும் மெதுவைக்கண்டால் சுயமரியாதை இயக்கம் நாட்டில் அவ்வளவாக பரவியதாகத்தெரியவில்லை. மற்றநாடுகளில் அந்த புத்தகங்கள் பதினாயிரக்கணக்காக விற்றுவிடும் ஆதலின் நமது இயக்கத்தின் தோழர்கள் குடி அரசு பிரசுரங்களை லட்சக்கணக்காக வாங்கிபடிப்பார்களென நம்புகின்றோம்.

---


## கொக்கோகம்.

மூலமும் உரையும்-காலிகோபயின்ட்

64 வகை சிற்றின்ப அசல் கிலேஸ் போட்டோ படங்கள். சதிபதிகளும், தனி மாதர்களும் சேர்நத தனி கட்டடத்தோடு, விலை ரூ. 5. வெளிநாட்டினர் ரூ. 5—8—0 முன் பணம் அனுப்பவேண்டும்.

T. G. பாக்கியம் & கோ.,
வேப்பேரி, சென்னை,

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | இயற்கைமதம் ... | 0—8—0 |
| 2. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 3. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 4. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 5. | ஆராய்ச்சி அணிகலம் ... | 0—12—0 |
| 6. | சுயமரியாதை தத்துவ கீதங்கள் ... | 0—4—0 |
| 7. | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—C |
| 8. | மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... | 2—0—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.


### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் | ரூ. 4—0—0 |

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**
**ஈரோடு.**


## 3 ரூபாய்க்கு 3 கடியாரங்களும் 90 சாமான்களும் இனும்.



வாசனையிற் சிறந்தது ஓட்டோ மோட்டியாவே. இது புஷ்பங்களின் சத்து. ஒரே தடவையில் 3 ரூபாய்க்கு 6 பாட்டில்கள் வாங்கு வோருக்கு, கோல்ட் கில்ட் டம்மிரிஸ்ட் வாட்ச் ஒன்றும், 5 வருஷ உத்திரவாதமுள்ள ஜெர்மன் 'பி' டைம்பீஸ் 1-ம், ரயில்வே டைம் டம்மிபாக்கட் வாட்ச் 1-ம், பவுண்டன் பேனா 1-ம், இன்னும் 90 சாமான்களும் இனுமாய் கொடுக்கப்படும். இனும் சாமான்கள் சேர்த்து விலை ரூ. 3. பாக்கிங் தபால் செலவு வேறு.

General Trading Agency
15/1 Joymitter St., Hatkhola P. O., Calcutta.


## கடவுள்கள் என்பவை விளையாட்டுக் கருவிகள்.

## "சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்க வழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.

இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.


## ஹிமகிரி தைலம்.

### ஸ்நானத்திற்கு ஏற்றது.



உடம்பையும், கண்களையும், மூளையையும் ஆச்சரியப்படத்தக்கவிதமாய் குளிர்ச்சி செய்கிறது. சுறுசுறுப்பை உண்டாக்குகிறது. தலைவலிக்கு சிறந்த மருந்து அபிப்பிராயம்:- ஆர். எஸ், முட்டண்ணு பி. இ. எலக்டிரிக்பவர் ஹவுஸ் உதகமண்டலம். கடந்த ஆறுமாத காலமாக தங்கள் தைலத்தை நான் உபயோகிக்கிறேன் எல்லாத்தைலங்களைவிட தங்கள் தைலம் சிறந்து விளங்குவதோடு குளிர்ச்சியையும் உற்சாகத்தையும் தரத்தக்கதாயிருக்கிறது. உள்நாட்டு மூலிகைகளைக் கொண்டு செய்யப்பட்ட விலை சகாயமான தைலம் இதுவே. நல்ல பலந்தரக் கூடியதாயிருக்கிறது. பொது ஜனங்களுக்கு இதை சிபார்சு செய்கிறேன்.

விலை 1—0—0, 0—8—0.

## ரத்னமிஸ்ரி ஹல்வா.

மூளையையும்,உடலையும், பலப்படுத்துவது.

பலவீனம், ஜீரணக்குறைவு, சோம்பல், இந்திரிய ஸ்கலிதம் முதலியவற்றை நீக்கவல்லது. தாதுவிர்த்திக்கேற்றது. விலை 2—8—0, 1—4—0.

கந்காட்சி பத்திரங்களும், தங்கமெடல்களும் பரிசுபெற்றது.

கிடைக்குமிடம்:—

எம். பெருமாள் நாயடு,
மளிகை ஈரோடு,

மெடிகல் எம்போரியம், ஈரோடு.

சோல் ஏஜண்ட்,
அனந்தகிருஷ்ண பிளவர் மில்ஸ்,
பெங்களூர்சிட்டி.

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோததியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்,
இதன் விலை அணா. 0—2—0

## சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும்.
இதன் விலை அணா. 0—2—0

## சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.
இதன் விலை அணா. 0—2—0.

## சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.
இதன் விலை அணா 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.
இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

## கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.

இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.